கலை இலக்கிய மாத சஞ்சிகை

# ஜீவநதி


100/=

கார்த்திகை 2014

74


14 DEC 2014

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்






நேர்காணல்
-மு.அநாதரட்சகன்-



"I know" "I know" "I know"
"I know" "I know" "I know"
ரகுவரன்
-இ.சு.முரளிதரன்-





கொழும்பில் உலகத் திரைப்பட விழா! -பயணி-



றொபின் வில்லியம்ஸ்
-அபூர்வன்-

# ஜீவநதி

பெற்றுக்கொள்ளப்பட்டது
14 DEC 2014
இணுவில் பொதுநூலகம்
சனசமூக நிலையம்
பதிவு இல. IV/C/43/C OF 95

கட்டுரைகள்

**ஈழத்துச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் (1930 -1950) : மறுமதிப்பீடு**
பேராசிரியர் செ.யோகராசா.............................................. 03

I Know I know know I know I know I know **ரகுவரன்**
இ.சு.முரளிதரன்............................................................. 16

**கொழும்பில் உலகத் திரைப்படவிழா**
பயணி.............. ................................................ 26

**றொபின் வில்லியம்ஸ்**
அபூர்வன்..........................................................................33

**நினைவுக் குறிப்புகள் - 4**
அ.யேசுராசா ............................................................ 40

**சொல்ல வேண்டிய கதைகள் - தொடர் - 20**
முருகபூபதி ..........................................................................46

## சிறுகதைகள்

வி.ஜீவகுமாரன் ........................................................... 11
ஷெல்லிதாசன்.......... ................................................... 17
கிண்ணியா சபருள்ளா ...................................................... 37

## கவிதைகள்

யாத்ரிகன்........................................................... 24
ந.பாக்கியநாதன்........................................................ 24
மீனா.............................. ............................................ 24
புலோலியூர் வேல் நந்தகுமார் ......................................... 25
மிஹிந்தலை பாரிஸ் ....................................................... 25
வடஅல்வை கே.சின்னராஜன் ........................................... 25
க.சட்டநாதன்......................................................................36
மாலினி...................... .................................................40

## நேர்காணல்


மு.அநாதரட்சகன் ............................................................ 28

## உள் ஓவியங்கள்


கருணாகரன், நன்றி - இணையம்



**நேர்காணல்**
- மு.அநாதரட்சகன் -



I Know I know I know I know I know I know **ரகுவரன்**
- இ.சு.முரளிதரன் -




**அட்டை ஓவியம்**
கரீம்

# ஜீவநதி

**2014 கார்த்திகை இதழ் - 74**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி



**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.



**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா



**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.
- ஆசிரியர் -



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 1500/=
வெளிநாடு - $ 60U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY


# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-

# கவிதைச்சிறப்பிதழ்

ஜீவநதி தனது 75 ஆம் இதழை (மார்கழி 2014 இதழ்) ஈழம் வாழ் கவிஞர்களின் கவிதைச் சிறப்பிதழாக அதிக பக்கங்களில் வெளியிடவுள்ளது என்ற செய்தியை வாசகர்களுக்கும் படைப்பாளி களுக்கும் அறியத் தருவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம்.

இவ்வாறான சிறப்பிதழ்களை இடையிடையே ஜீவநதி ஆர்ப்பாட்டம் இல்லாது தரமாக வெளியிட்டு வந்துள்ளது என்பதை வாசகர்கள் அறிவார்கள். இவ்வாறான சிறப்பிதழ்கள் மூலம் குறித்த கருப் பொருளொன்றின் மீதான கவனத்தைக் குவியச் செய்து, அதிகமான படைப்பாளிகளையும் பங்களிக்கச் செய்ய முடியும். ஈழத்து கவிஞர்களை சிறப்பிக்கும் வகையில் வெளிவருகின்ற இவ்விதழை ஈழம் வாழ் பெரும்பாலான கவிஞர்கள் கவிதைகளும் இடம்பெற்று சிறப்பிக்கும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

இச்சிறப்பிதழில் கவிதைகளை மாத்திரமன்றி, கவிதை தொடர்பான கட்டுரைகளையும் இடம்பெறச் செய்யவுள்ளோம் எனவே, இளையோர், வளர்ந்தோர் என்ற வேறுபாடின்றி ஆர்வமுள்ள அனைவரையும் தமது படைப்புகளை 15.11.2014 என்ற எல்லைத் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

அன்பான சந்தாதாரர்களே இப்பிரதி தங்கள் சந்தாப் பணத்திற்குள் அடங்காது என்பதையும் பிரதியின் விலை 400/-, தபாற்செலவு 150/- (550/- தபாலில் பிரதியை பெற்றுக் கொள்வதாயின்) என்பதையும் தங்களுக்கு அறியத் தருகின்றேன்.

-க.பரணீதரன்

# ஈழத்துச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் (1930-1950) : மறுமதிப்பீடு

பேராசிரியர் செ.யோகராசா



ஈழத்து நவீன இலக்கியம் சார்ந்த ஆய்வுகள் ஒருபோதுமே முழுமை அடைய முடியாத நிலையிலுள்ளன என்பது விசனத்துக்குரியதொரு விடயமாகும். ஏனெனில், நவீன இலக்கியங்களான சிறுகதை, கவிதை முதலியன பெருமளவு வெளிவருவதற்குக் களமாக அமைகின்ற சஞ்சிகைகள், பத்திரிகைகள் பலவற்றிலும் வெளிவருகின்ற படைப்புகள் தொகுக்கப்படும் முயற்சி ஈழத்தில் அதிகளவு நிகழ்வதில்லை. அவற்றுள் சில நூலுருப்பெறுவதும் நீண்டகாலத்தின் பின்பேயாகும். இந்நிலையில் இவ்விரு வகையான இலக்கிய முயற்சிகளும் நிகழ்கின்ற போது ஏலவே செய்யப்பட்ட ஆய்வு முடிவுகள் மறுமதிப்பீட்டிற்குள்ளாவது ஈழத்து ஆய்வுச் சூழலில் தவிர்க்க இயலாததொன்றாகி விடுகின்றது. ஈழத்துச் சிறுகதையின் தோற்றம் வளர்ச்சி பற்றிய ஆய்வுகளுக்கும் இது பொருந்துவதே ஏறத்தாழ கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக முற்குறிப்பிட்டவாறான இரு வகைத் தொகுப்பு முயற்சிசார் நூல்களும் வெளிவந்திருக்கின்ற சூழலில் ஈழத்துச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி ஏலவே முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்கள் மறுமதிப்பீட்டிற்குள்ளாக வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது. அதுவே இவ் ஆய்வின் நோக்கமாகின்றது. வசதிகருதி 1930 – 1950 வரையிலான காலப்பகுதியே இவ்வேளை கவனத்திற்குள்ளாகின்றது.

சிறுகதை சார்ந்து மேற்கூறிய விடயம் தொடர்பாக கவனத்திற்குட்பட வேண்டிய முக்கியமான நூல்களாக பின்வருவனவற்றை இவ்வேளை குறிப்பிடலாம்:

**பத்திரிகையில் வெளிவந்த சிறுகதைகளின் தொகுப்பு**

ஈழகேசரிக் கதைகள்

சுதந்திரன் சிறுகதைகள்

**சஞ்சிகையில் வெளிவந்த சிறுகதைகளின் தொகுப்புகள்**

மறுமலர்ச்சிக் கதைகள்

**கூட்டுத் தொகுப்புகள்**

மலையகச் சிறுகதைகள்

ஈழத்து முன்னோடிச் சிறுகதைகள்

**தனித் தொகுப்புகள்**

கங்காகீதம். சி.வைத்தியலிங்கம்

சம்பந்தன் கதைகள்

**அண்மையில் கிடைத்த சஞ்சிகை**

*"பாரதி" மண்டூர்/1948–1950*

மேற்கூறிய நூல்கள், சஞ்சிகைகள் இவ் ஆய்வுத் தலைப்புத் தொடர்பாக புதிய தகவல்களையும் மேலதிக தகவல்களையும் தருகின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ்ஆய்வு பின்வரும் அணுகுமுறைகளில் இடம்பெறுகின்றது:

(i) இலங்கையர்கோன், சி.வைத்தியலிங்கம், சம்பந்தன் ஆகிய முன்னோடிகளது சிறுகதைகள் பற்றி இதுவரை கூறப்பட்டுள்ள கணிப்பீடுகளை மறுமதிப்பீட்டிற்குள்ளாக்குதல்.

(ii) "ஈழகேசரி"யில் எழுதிய பரவலாக அறியப்படாத எழுத்தாளர்களது சிறுகதைகள் பற்றிக் கவனித்தல்.

(iii) மலையகச் சிறுகதைகள் தொடர்பாக அவதானித்தல்

(iv) "மறுமலர்ச்சி", "பாரதி" (கொழும்பு), பாரதி (மண்டூர்) சஞ்சிகைகளில் வெளிவந்துள்ள சிறுகதைகளை கவனத்திற்குட்படுத்தல்

(v) மட்டக்களப்பு பிரதேச சிறுகதையின் தோற்றம் பற்றி இவ் ஆய்வாளருக்கு கிடைத்துள்ள தகவல்களை இணைத்துக்கொள்ளல்.

**இலங்கையர்கோன், சி.வைத்தியலிங்கம், சம்பந்தன் சிறுகதைகள் தொடர்பான மறுமதிப்பீடு:**

மேற்கூறிய இருவரும் வரலாறு, புராணம், இதிகாசம் தொடர்பான சிறுகதைகளை எழுதியதுண்மையாயினும் ஏனைய விடயங்கள் பற்றியும் எழுதியுள்ளனர். அவை பற்றிப் பின்னர் நோக்குவோம். புராணம், இதிகாசம் தொடர்பான சிறுகதைகளை எழுத நேர்ந்தமைக்கான காரணங்கள் பற்றி இவ்வேளை சிந்திப்போம்.

மேற்கூறியோர் ஈழத்துச் சிறுகதையுலகிற் பிரவேசித்த முப்பதுகள் (1930) கால இலக்கியச் சூழலில் எழுத்தாளரது அபிலாஷைகள் எத்தகையனவாயிருந்தன? ஈழத்து விமர்சன முன்னோடிகள் சிலர் சொல்வதுபோன்று, டொனமூர் குழுவினரின் சிபார்சுகள் சமூக, அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கக்கூடுமாயினும் இவ்வெழுத்தாளரது உலகம் வேறு விதமாகவிருந்தது. சி.வைத்தியலிங்கம் பின்வருமாறு கூறியிருப்பது இதற்குத் தகுந்த சான்றாகிறது.

"உன்னதமான லட்சியங்களும் கனவுகளும் எங்கள் வாழ்க்கையில் நிரம்பியிருந்த நாட்கள் அவை. இலக்கியத்தைப் படிப்பதிலும் நாடகங்களைப் பார்ப்பதிலும் சங்கீத ரசனையிலும் எங்கள் இருவருக்கும் எப்பொழுதுமே பெரிய கர்வம். எழுதவேண்டும். ஏதாவது சிருஷ்டிக்க வேண்டும் என்ற உணர்ச்சி என்றும் சிறகடித்துக்கொண்டிருக்கும்...."

மேற்குறிப்பிட்டவாறான மனோநிலையில் மேற்குறிப்பிட்ட இரு எழுத்தாளர்களினது பிரசுரகளமாக ஈழத்துப் பத்திரிகைகள் மட்டுமன்றித் தமிழகத்துச் சஞ்சிகைகளும் திகழ்ந்தன. குறிப்பாகக் "கலை மகள்" ஈழத்து எழுத்தாளர்களுக்கு முக்கிய இடமளித்தது. கலைமகளிற்குச் சுவையான புதிய விடயங்கள் கொண்ட சிறுகதைகளே பெருமளவு தேவைப்பட்டன. இந்நிலையில், எழுத்தார்வம்மிக்க எமது முன்னோடிகளுக்கு, ஈழத்து வரலாற்றுச் சம்பவங்களும் புராண/ இதிகாச நிகழ்வுகளும் வரப்பிரசாதமாக அமைந்து விட்டன.

இவர்கள் மனோரதியப்பாங்குடன் எழுதினர் என்று கூறுவது பற்றி இனிக் கவனிப்போமாயின் இக்கூற்றில் உண்மையுண்டென்பதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆயினும், இவ் அபிப்பிராயம் பூதாகரமாக்கப்பட்டுள்ளதென்பதனை மனங்கொள்வதவசியம். ஏனெனில் இவர்களது அனைத்துச் சிறுகதைகளும் அத்தகையனவன்று. முழுச் சிறுகதைகளையும் வாசிக்கும் வாய்ப்புக் கிடையாமை அல்லது ஐம்பதுகளுக்குப் பிற்பட்ட சிறுகதை வளர்ச்சிப்போக்கினை முதன்மைப்படுத்த வேண்டிய உள்ளார்ந்த நோக்கம் என்பன இத்தகைய அபிப்பிராயம் வெளிப்படக் காரணமாதல்கூடும்!

இலங்கையர்கோனின் சிறுகதைகள் பற்றி தொடர்ந்து கவனிக்கும்போது இலங்கையர்கோன், வரலாறு, இதிகாசம் சார்ந்த சிறுகதைகள் தவிர ஆண் பெண் உறவு பற்றிப் பல சிறுகதைகளையும் எழுதியுள்ளார் என்பது கவனத்திற்குரியது. இது பற்றி விமர்சகரொருவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"கு.ப.ரா, பிச்சமூர்த்தி ஆகிய இருவரையும் போலவே இலங்கையர்கோனும் ஆண் பெண் உறவு சம்பந்தமான பொருளில் அதிகம் ஈடுபாடுள்ளவராயிருந்தார். சுந்தரர்-பரவையாரைப்பற்றி எழுதினாலென்ன, மேரி மகதலேனா, மேனகை, மாதவி, அனுலா முதலிய பெண் பாத்திரங்களைப் பற்றி எழுதினாலென்ன தசையின் துடிப்பு அதிலிருக்கும், பூரணசுகம் தசையுடன் தசை சேரும்பொழுதுதான் ஏற்படுகிறது. மிதுனங்களின் சேர்க்கையே எல்லாவற்றிற்கும் ஆதார சுருதியாக இருக்கிறது என்பது இலங்கையர்கோன் தத்துவம்."

மேற்கூறிய விடயங்கள் ஆழ்ந்த பரிசீலனைக் குரியனவாகின்றன. இலங்கையர்கோனின் "தத்துவம்" எதுவாயினும் அது அவரது சிறுகதைகளில் அவ் விமர்சகர் கூறுவதுபோன்று வெளிப்படவில்லை என்பதும், அவ்விமர்சகர் கூறுவதுபோல், தசையின் துடிப்பு அவர் சிறுகதைகளில் வெளிப்படவில்லை என்பதும் ஆண்-பெண் உறவு என்பது பற்றிக் குறுகிய பார்வையே அவ்விமர்சகரிடமுண்டென்பதும், அனைத்தையும்விட, அவ்விதத்திலான இலங்கையர்கோன் சிறுகதைகள் பற்றி அவ்விமர்சகர் கூறுகின்ற விடயம், சிறுகதை வாசிக்காத வாசகர்களுக்கு "இலங்கையர்கோன் சிறுகதைகள் ஆபாசமானவை" என்ற எண்ணத்தைத் தரக்கூடியவை என்பதும் மனங்கொள்ளற்பாலன. (ஆண் பெண் உறவு பற்றி எழுதிய கு.ப.ரா, பிச்சமூர்த்தி ஆகியோரது சிறுகதைகள் பற்றிய அபிப்பிராயம் உயர்வானதா தாழ்வானதா என்பது வேறு விடயம்).

ஆண் - பெண் உறவு சார்ந்த இவரது சிறுகதைகள் அவ்விமர்சகரது விளக்கத்திற்கு முற்றிலும் மாறாக உள்ளன என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு வெள்ளிப் பாதசரமாகும். இச்சிறுகதையில் தம்பதிகளிடையே எழும் பிணக்கும் இறுதியில் அவர்கள் பரஸ்பரம் விட்டுக் கொடுப்பதும் நளினமாக மென்மையான நடையில் உயிர்த் துடிப்புடன் வெளிப்படுவது குறிப்பிடத்தக்கது.

மனோரதியப்பாங்கிற்கு எதிராக விளங்குவது யதார்த்தப்பாங்கு என்பது அனைவருமறிந்ததே. இவ்வாறான யதார்த்தப்பாங்குடைய சிறுகதைகளும் இலங்கையர்கோனால் எழுதப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட வெள்ளிப்பாதசரம் உட்பட முதற்சம்பளம், தந்தைமனம், மச்சாள், அனாதை, தாழை நிழலிலே முதலியன இத்தகைய சிறுகதைகளுக்கு எடுத்துக் காட்டுகளாகின்றன. இத்தகைய சிறுகதைகளுள் சில, பிரதேசப்பண்பு கொண்டனவாகவும் காணப்படுகின்றன சிறந்த எடுத்துக்காட்டு வெள்ளிப்பாதசரம்.

இனி வைத்தியலிங்கத்தின் சிறுகதைகள் பற்றிக் கவனிப்போம்.

முற்கூறியது போன்று வரலாற்றுச் சிறுகதைகள், மனோரதியப்பாங்குடைய சிறுகதைகள் என்பன தவிர, கிராமிய வாழ்க்கை சார்ந்த பல சிறுகதைகளையுங்கூட சி.வைத்தியலிங்கம் எழுதியுள்ளார்.

"நகர வாழ்க்கையுடன் நான் என்றுமே ஒன்றியதில்லை. கிராமத்தின் அழைப்புக் குரல் எப்பொழுதும் என் காதில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றது... கிராமச் சூழ்நிலையில் வளர்ந்தவன் நான். கள்ளங்கபடமில்லாத கிராமவாசிகளுடன் ஒன்றி வாழ்ந்திருந்தவன். தோட்டந்துரவுகளிலும் வயல்வெளிகளிலும் வெய்யிலிலும் மழையினிலும் இரவிலும் பகலிலும்

அவர்களுடன் சேர்ந்து உழைத்திருக்கின்றேன். அங்கு அசையும் காற்றும், வீசும் நிலவும், ஊறும் நீரும் என்னை இன்பலாகிரியில் ஆழ்த்திவிடுகிறது" என்று கூறும் வைத்தியலிங்கத்தின் சிறுகதைகளில் கிராம வாழ்வு உயிர்த்துடிப்புடன் வெளிப்படுகின்றது. கிராமிய மக்கள் ரத்தமும் சதையுமாக உலாவுகின்றார்கள். "பாற்கஞ்சி" (வறுமை), "ஏன் சிரித்தார்?" (கூலி வேலை செய்யும் சின்னம்மாவின் மனச்சபலம்), "உள்ளப்பெருக்கு" (குடிகாரத்தந்தை காரணமாக ஆண்களை வெறுக்கும் தெய்வீ), "களனி கங்கைக் கரையில்" (வீண் சந்தேகம் காரணமாகக் காதலியைப் பறிகொடுக்கும் கந்தையன்) "நெடுவழி" (உடற்பசிக்கு அடிமையாகும் முத்து மெனிக்கா) முதலியன இத்தகைய சிறுகதைகளுக்கு எடுத்துக் காட்டுகளாகின்றன!

இலங்கையர்கோன் போன்று ஆண் - பெண் உறவு சார்ந்த சிறுகதைகளும் சி.வைத்தியலிங்கத் தினால் எழுதப்பட்டுள்ளன. முற்குறிப்பிட்ட "ஏன் சிரித்தார்?", "களனிகங்கைக் கரையில்", "உள்ளப் பெருக்கு" என்பவற்றோடு "பைத்தியக்காரி", "அழியாப் பொருள்" முதலியன இவ்வாறான சிறுகதைகளுக்கு உதாரணங்களாகின்றன. உளவியல் ரீதியில் ஆண்-பெண் மன உணர்ச்சிகள் மனஓட்டங்களை வெளிப் படுத்துவனவாக இவை வெளிப்படுகின்றன.

மேற்கூறியவற்றைவிட, சி.வைத்தியலிங்கத்தின் சிறுகதைகளில் எவரும் காணத்தவறிய பிறிதொரு சிறப்பும் அமைந்துள்ளது. அதாவது இன்றைய பெண் நிலைவாத நோக்கில் அணுகும்போது சி.வைத்திய லிங்கத்தின் சிறுகதைகள் இன்னொரு பரிமாணத்தை எய்துகின்றன. "விதவையின் இதயம்", "மின்னல்", "உள்ளப்பெருக்கு", "நெடுவழி", "கங்கா கீதம்" என்பன இவ்விதத்தில் கவனிப்பிற்குரியனவாகின்றன. இது பற்றிச் சற்று விரிவாகக் கவனிப்பது அவசியமாகின்றது.

மேற்கூறியவற்றுள் "விதவையின் இதயம்" விதவைப் பெண் ஒருத்தியின் உடல்சார் மன உணர்வு களை வெகு இயல்பாக வெளிப்படுத்துகின்றது. விதவையான விசாலாட்சி "அவள் மனசை ஏதோ ஒரு புழு அரித்துக்கொண்டு வந்தது. அவள் வயதை ஒத்த பெண்கள் வாழ்க்கையின் இன்பங்களைச் சுவைத்து வருவதை அவள் எங்ஙனம் சகிப்பாள்? காட்டு நிலாப்போல பொங்கி வழிந்துகொண்டிருந்த அவள் யௌவனம் எவரும் அனுபவிக்க முடியாமல் நெஞ்சில் உறைந்துபோய்க்கிடந்தமை, அவள் உள்ளத்தில் எரிச்சலையும் பொறாமையையும் வளர்த்து வந்தது. தன் ஆத்திரம் முழுவதையும் தீர்ப்பதற்கு அவளுக்கு வேறு வடிகால் கிடைக்கவில்லை. நித்தியலக்ஷ்மி தான் கண்ணுக்கு முன்னால் ஒயிலாய் நடந்து வருவாள். தனது சக்களத்தியின் மகளான நித்தியலக்ஷ்மியைக் காரணமில்லாமல் கோபிக்கின்ற விசாலாட்சி, அவளது விவாகத்திற்கு குறுக்கே நிற்பது தொடக்கம் தடைகள் ஏற்படுத்தி, நித்தியலக்ஷ்மி திருமண தினத்தன்று தாலி கட்டும் சுபநேரத்தில் கிணற்றுள் விழுந்து உயிருடன் தப்பிப் பிழைக்கின்றாள். அவளது கழிவிரக்கமும் குற்ற உணர்ச்சியுமே சிறுகதையாக நகர்கின்றன.

"மின்னல்", குழந்தையற்ற தம்பதியர் அநாதை யாகக் கிடைத்த குழந்தையை வளர்த்துப் பின் அதனை இழந்து வருத்தப்படுவதைச் சித்திரிப்பதற்கப்பால் அக் குழந்தையை வளர்த்த ஆயாவின் - (அவளே அக்குழந்தை யின் தாய்) மன உணர்வுகளையும் நுணுக்கமாக விவரிக் கின்றமை காரணமாக கவனத்திற்குரியதாகின்றது.

கணவனைப் பிரிந்து வாழ்கின்ற இரு பெண் களின் உடல்சார் உணர்வுகளை நுணுக்கமாகச் சித்திரிக் கின்றனவாக, முறையே "ஏன் சிரித்தாள்?", "நெடுவழி" ஆகியவை அமைகின்றன. முதற் சிறுகதையில் வரும் சின்னம்மா? மனச் சபலத்திற்கு அடிமையானாலும் தன்னை மீட்டெடுத்து விடுகின்றாள் சின்னம்மா.

மறுசிறுகதையில் முத்துமெனிக்கா தன்னை இழந்து அதன் விளைவாகக் குழந்தை சுமந்து பின்னர் கணவன் திரும்பிவர நேர்கையில் தன் சந்தர்ப்ப சூழலை விவரிக்கின்றாள்:

"...நான் சொல்வதை மாத்திரம் கொஞ்சம் கேளுங்கள். நீங்கள் திரும்பி வரவே இல்லை. ஒரு நாளா இரண்டு நாளா? மூன்று வருஷங்கள். நான் ஒவ்வொரு நாளும் உங்கள் வரவுக்காக ஏங்கிக்கொண்டிருந்தேன். மருந்துக்கேனும் ஒரு கடிதம், அதுவும் இல்லை. என்னைப் பற்றிய நினைவே உங்களிடம் இல்லை. இங்கே தன்னந்தனியே ஒரு பெண், ஒரு இளம்பெண்.... தனிமை இருந்தது. அதை நினைத்தால் என் உடல் நடுங்குகிறது. பிரிவினால் ஏற்பட்டமன ஆத்திரம், வேதனை எல்லாம் இருந்தது. அத்துடன் இருந்தது. பயங்கரமான இந்த இளமை... அவைகளுக்கு அடிமை யானேன். ஏன் வல்லமையில் இல்லாத ஒரு தளர்ச்சி யான சமயத்தில் என்னையே இழந்து போனேன்".

முடிவில் வீட்டைவிட்டுத் தனது குழந்தையுடன் வெளியேறி நெடுவழி நடக்கின்றாள்.

"கங்காதகீதம்", புத்தபிக்கு மீது ஒருத்தி கொள்ளும் ஒருதலைக் காமத்தையும் அதனாலேற்படும் சிக்கல்களையும் படம் பிடிக்கின்றது.

தன் தந்தையின் குடிவெறியால் தாய் படும் கொடுமையைக் கண்ணுற்று ஆண்களையே வெறுத்த ஒரு பெண்ணின் மன இறுக்கத்தையும் நெகிழ்வையும் நுணுக்கமாக வெளிப்படுத்துகின்றது "உள்ளப் பெருக்கு".

மேற்கூறியவறான உள்ளடக்கச் சிறப்புகள் ஒருபுறமாக, சி.வைத்தியலிங்கத்தின் கலாபூர்வமான எடுத்துரைப்பு முறையும் கவனிப்பிற்குரியது. "நெடுவழி" சிறுகதையின் ஒரு பகுதியை இவ்விடத்தில் எடுத்தாள்வது பொருத்தமானது.

"புலரிக் காலத்தின் மங்கிய ஒளியிலே முத்து மெனிக்கா அவனை இப்பொழுது பார்த்தாள். தோள்கள் உயர்ந்து திரண்டிருந்தன. பார்வையில் காந்தம் போன்ற ஒரு ஒளி வீசியது. கைகள் இரும்பு போன்றிருந்தன.

பெட்டை நாய் கடிக்க, ஆண்நாய் தொடர்ந்து போய் வெற்றிகொண்டு விடுகிறது. ஆண் மயில் ஆடும் கம்பீரத்தைக் கண்ட பெண் மயிலோ மயங்கி அடிமையாகிறது. சேவலின் வீரப் பார்வையையும் நடையையும் கண்ட பேடை தன் கர்வம் அடங்கித் தலைகுனிகிறது... ஆண்மை என்பது இதுதானோ? இப்பொழுது முத்துமெனிக்காவின் மேனி முழுவதும் பெண்மை குலுங்கியது மென்மை, வாஞ்சை, இனிமை,

தான்கடித்த இடத்தை மென்மையாய்த் தடவி வருடத் தொடங்கினாள். டேவிட் சிங்கோ வெற்றி வெறியுடன் அவளைத் தூக்கி அணைத்துக்கொண்டு புடலம் பந்தலின்கீழ் கொண்டு போனான்...

அத்தருணம் திடீரென கடல் கொந்தளித்துப் பொங்கி எழுந்தது. மேகம் மின்னி முழங்கி இடி இடித்தது. காற்று சினத்துடன் சூறாவளியின் வேகத்துடன் வீசத் தொடங்கியது. பிரகிருதியே சீற்றங் கொண்டு பொங்கி ஆர்ப்பரிப்பதுபோலத் தோன்றியது. கிழக்கு நன்றாய் வெளுத்துவிட்டது. டேவிட் சிங்கோ எழுந்து தன் பாகற்கொடிகளைப் பார்த்தான். கோடிகளில் பிஞ்சு பிடித்திருந்தது. முத்துமெனிக்கா மன நிறைவின் பூரிப்பிலே கூடையின் சுமையையும் உணராமல் ஒய்யாரமாய் மிதந்து சென்று கொண்டிருந்தாள். அவளுடைய கையாட்டத்திலே உலகமே சுழல்வதுபோல் இருந்தது"

சி.வைத்தியலிங்கத்தின் பெண்கள் பற்றிய மேற்குறித்த பார்வைகள் காரணமாக அன்னார் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் முன்னோடிக்குரிய இடம் பெறுவது விதந்துரைக்கப்பட வேண்டியது. எனினும் இத்தகைய சிறப்புப் பற்றிச் சரியாக உணரப்படாத நிலையே காணப்படுகின்றது. அன்று தொடக்கம் இன்று வரை ஈழத்து விமர்சகர்கள் இது பற்றிக் குறிப்பிடாதது ஒரு புறமிருக்க, இதன் முக்கியத்துவம் பற்றி பொருத்தமற்ற அபிப்பிராயங்களும் முன்வைக்கப்படுகின்றன. விமர்சகரொருவரின் பின்வரும் கூற்று இதற்குச் சான்றாகின்றது.

"சி.வைத்திலிங்கமோ தேசிக விநாயகம் பிள்ளையைப்போல் மென்மை, பெண்மை, கனிவு, அழகு, இனிமை முதலிய பண்புகளை விரும்புபவர். இலக்கியம் அவற்றைப் பிரதிபலிக்க வேண்டும் என்று நம்புபவர். கவிதையின் கனிவும், வடமொழி இலக்கியத்தின் பெருமிதமும் துலங்கவேண்டும் என்று வற்புறுத்துபவர். அந்தளவில் சிதம்பர சுப்பிரமணியத்துடன் கருத்தொற்றுமையுடையவர்"

தமது ஏனைய சிறுகதைகளிலிருந்து உள்ளடக்க ரீதியில் விலகி நிற்கின்ற வேறு இரு சிறுகதைகளையும் சி.வைத்தியலிங்கம் எழுதியுள்ளார். எண்ணிக்கை இரண்டாயினும் அவை முக்கியத்துவமுடையவை. இவற்றுளொன்று, "ஏமாளிகள்". பிச்சைக்காரர்கள் எவ்வாறு ஏமாற்றிப் பிச்சை எடுக்கின்றார்கள் என்பது பற்றிய என்றும் பொருந்தக்கூடியதான – சிறுகதை இது வாகும். மற்றொன்று "மரணத்தின் நிழல்". இது மரணப் படுக்கையிலுள்ள ஒருவரின் இறுதிக்கணங்கள் பற்றிய கலாபூர்வமான சிருஷ்டி. இத்தகைய உள்ளடக்கம் கொண்ட ஆக்கம் தமிழில் வெகு அரிதாக வெளிவருவது குறிப்பிடத்தக்கது. அதேவேளையில் கு.ப.ராவின் "விடியுமா"? என்ற சிறுகதை இச்சிறுகதை உருவாக்கத்திற்கு வழி வகுத்திருப்பதனை இச்சிறுகதையின் முடிவு உணர்த்து கின்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்கூறிய "மரணத்தின் நிழல்" சிறுகதைக்கு மட்டுமன்றி, பொதுவாக இவரது கணிசமான சிறுகதைகளுக்கு கு.ப.ராவின் சிறுகதைகள் உந்துசக்தியாக விருப்பது மனங்கொள்ளத்தக்கது. எனவே "ஈழத்தின் கு.ப.ரா" என்று இவரை விமர்சகர்கள் சிலர் குறிப்பிடுவதில் தவறில்லை. அதேவேளையில் இலங்கையர் கோன் பற்றியும் அவ்வாறு சிலர் குறிப்பிடுவதில் பொருத்தப்பாடிருப்பதாக கூறுவதற்கில்லை.

சுருங்கக்கூறின், ஈழத்தின் ஆரம்பகால முன்னோடிகள் என்ற விதத்தில் சமகால எழுத்தாளர்களுள் முற்கூறியவிதங்களில் கவனத்திற்குரியவர்களாக இலங்கையர்கோனும் சி.வைத்தியலிங்கமும் திகழ்கின்றனர். அதேவேளையில், யதார்த்தமானதும் பிரதேசப் பண்பு கொண்டதுமான சிறுகதைகள் எழுதியவ ரென்ற விதத்தில் இலங்கையர் கோனுக்குரிய இடமும், கிராமிய வாழ்க்கையை நன்கு படம் பிடிப்பதும் பெண்மன உணர்வுகளை நுணுக்கமாகச் சித்திரிப்பதுமான சிறுகதைகள் எழுதியவரென்ற விதத்தில் சி.வைத்தியலிங்கத்திற்குரிய இடமும் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் நிரந்தரமானவை என்பதில் தவறில்லை.

மேற்குறிப்பிட்ட இலங்கையர்கோன். சி.வைத்தியலிங்கம் ஆகியோர் சிறுகதைகளிலிருந்து சம்பந்தன் சிறுகதைகள் சிலவிதங்களில் விலகி நிற்கின்றன. இவற்றுள் முதலில் குறிப்பிடத்தக்கது, சம்பந்தர் எழுதியதாக அறியப்பட்டுள்ள 16 சிறுகதைகளுள் 02 சிறுகதைகள் மாத்திரமே வரலாற்றுச் சிறுகதைகளாக வுள்ளன என்பது. புத்தரின் கண்கள். தாராபாய் என்பனவே அவை. ஏனையவை, சமூகச்சார்புடையன வாகவுள்ளன. எனினும், ஈழத்துச் சிறுகதை ஆய்வாளர் கள். அதிக வரலாற்றுக் கதைகள் எழுதியுள்ள இலங்கையர்கோன், சி.வைத்தியலிங்கம் ஆகியோருடன் அவ்வாறான இரு கதைகள் மட்டும் எழுதியுள்ள சம்பந்தனையும் இணைத்து நோக்கும் வரலாற்றுத் தவறினைச் செய்து வந்துள்ளனர். அதுமட்டுமன்றி சம்பந்தரின் ஏனைய சிறுகதைகள் பற்றி தனித்தோ ஆழமாகவோ நோக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சம்பந்தரது 02 வரலாற்றுக் கதைகளைத் தவிர்த்து ஏனையவற்றை அவதானிக்கின்றபோது அவை

(i) காதல், பாசம் சார்ந்த மன உணர்ச்சிகளை முதன்மைப்படுத்துவனவாகவும்

(ii) அவ்வழியில் மனப்போராட்டங்களை முதன்மைப்படுத்துவனவாகவும்

(iii) அவ்வழியில் தத்துவச் சாயல் இழையோடு வனவாகவும் வெளிப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது.

மேற்கூறிய விதத்திலான இவரது சிறுகதைகளில் மௌனி, ல.சா.ரா. ஆகியோரது செல்வாக்கு இடம் பெற்றிருப்பதாகவும் ஆய்வாளர் சிலர் கருதுகின்றனர். ஆனால், இவர்கள் எழுத்துத்துறைக்கு வருமுன்பே சம்பந்தன் தமது கதைகளுள் கணிசமானவற்றை எழுதி முடித்துவிட்டார் என்பது கவனத்திற்குரியது:

### 3.2. இலங்கையர்கோன், சி.வைத்தியலிங்கம், சம்பந்தன் ஆகியோரது காலகட்டது ஏனைய முக்கியமான ஆசிரியர்கள்:

ஈழத்துச் சிறுகதையின் தோற்றம் பற்றிய வரலாறு என்ற விதத்தில் முக்கியமானவர்களாகவும் பரவலாகவும் அறியப்பட்டவர்கள் மேற்குறிப்பிட்ட மூவருமே. இவர்கள் தவிர சோ.சிவபாதசுந்தரம் பற்றியும் ஓரளவு அறியப்பட்டிருந்தது: சோ.சிவபாதசுந்தரம் சிறுகதைகள்

பற்றிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்றபோது, அவை முக்கியமான இடத்தைப் பெறக்கூடியனவாக இருக்கின்றன என்று கூற முடியாதுள்ளது.

இக்காலப்பகுதியில் சிறுகதை எழுதியவர் களென்ற விதத்தில் "ஈழகேசரிக்கதைகள் தொகுப்பு வந்தபின் புதிதாக அறியப்பட்டவர்களுள் ஆனந்தன். பவன், சுயா ஆகியோர் முக்கிய இடம்பெறுகின்றனர். ஆனந்தன் எழுதிய "தண்ணீர்த்தாகம்". ஹரிசனங் களின் கண்ணீர் ஆகியன சாதிப்பிரச்சினை சார்ந்தவை "தண்ணீர்த் தாகம்" சிறுகதையில் பறையர் குலத்த வளான மீனாட்சி ஒரு நாள் தண்ணீர்த்தாகம் மேலிட, ஐயரொருவரின் கிணற்றடியில் இருந்த செம்பில் தண்ணீர் இருப்பது கண்டு அதனை எடுத்துக் குடித்துவிடுகின்றாள். எதிர்பாராதவிதமாக இதனைக் கண்ட ஐயர் ஓடி வந்து, திட்டி, செம்பையும் முகத்தில் வீசிவிடுகின்றார். நெற்றிக்காயத்துடன் அவள் அவ்விடத்தைவிட்டு விலகுகின்றாள். ஐயர் வாய்க்கு வந்தபடி அவளை ஏசுகின்றார்.

"மூதேவி, நாயே, இனி என்னுடைய கிணற்றை நான் என்ன செய்வது? அனுஷ்டான பாத்திரத்தை வைத்துவிட்டு விபூதி எடுத்து வருவதற்கிடையில் இப்படிச் செய்து விட்டாயே? இனி இந்தச் செம்பை..! நீ அந்தக் கதிரன் மகளல்லவா? என்னுடைய அனுஷ் டான ஜலத்தை தொட்ட நீ கொள்ளையில் போக மாட்டாயா? சிவன் உன்னை வதைக்கமாட்டானா?..."

சில வருடங்களின்பின் நோய்வாய்ப்பட்டு ஐயர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். ஒரு தடவை தண்ணீர்த்தாக்கதால் அவதிப்பட்டார் அவ்வேளை அங்கிருந்த தாதி அவரது தாகத்தைப் போக்குகின்றாள். கதையின் முடிவுப்பகுதி இவ்வாறு அமைகின்றது:

"அம்மா, இந்த மரண விடாயில் என்னைக் காப்பாற்றினாய் உன்குலம் நன்றாக வாழட்டும். நீ யாரம்மா?

"ஐயா என்னைத் தெரியாதா? நன்றாக உற்றுப் பாருங்கள்" என்று குனிந்தாள் அந்தத்தாதி "ஞாபகம் இல்லையா"

தன் நெற்றியை அவன் முகத்திற்கு நேரே பிடித்தாள். "இதோ, பாருங்கள் இந்த மறுவை தண்ணீர் விடாய்த்து அன்றொரு நாள் உங்கள் வீட்டில் வந்தேனல்லவா? தாகவிடாய் தாங்காமல் சிறு பிள்ளைத் தனத்தால் ஏதோ அனுஷ்டான செம்பைத் தொட்டு விட்டேனென்று நீங்கள் செம்பால் எறிந்த தாயம் இதுதான்" அவள் நெற்றியைக் காட்டினாள் கிழவனுக்கு.

கிழவன் முகம் காட்டிய குறியின் உணர்ச்சி ஏதோ புதிதாய் இருந்தது. "ஆமாம், கதிரன் மகளல்லவா? எப்படியம்மா இங்கே வந்தாய். தாதியாக வும் வேலை பார்க்கிறாயே?

ஆம், ஐயா, எல்லாம் அந்தக் கிறிஸ்தவப் பெரியாரின் கிருபைதான். அன்றைக்கு நீங்கள் தீர்க்காத தாகத்தை அந்தப் பெரியவர்கள் தீர்த்தார்கள். கல்வியளித்து இந்த நிலைமையில் வைத்தார்கள்.

கிழவன் உள்ளம் வெடித்துவிட்டது. என் மரண தாகத்தை நீக்கிய கரங்களுக்காக அன்று இரத்தக்கறை ஏற்பட வேண்டும். இந்த விடாய்தானே அந்தப் பசலைக்கும் அன்று.

"அம்மா, என்னை மன்னி. ஜாதிக்கர்வத்தால் அன்று உன்னை எறிந்த என்னை மனப்பூர்வமாய் மன்னி.

கிழவன் அவள் காலடியில் விழ எழுந்தான். பாவம்! அப்படியே தொப்பென்று விழுந்தான். விடயர் அடங்கியதோடு, அவன் கண் திறக்கவேயில்லை"

"ஹரிசனங்களின் கண்ணீர்", சாதியக் கொடுமை நீடித்தால் ஒடுக்கப்பட்ட மக்கள் கிறிஸ்தவ மதத்திற்கு மாறுவது நிகழக்கூடுமென்பதை எச்சரிக்கின்றது.

சில்வரம்புலி (சைவப்புலவர் சி.வல்லிபுரம்) எழுதிய "தெளிவு", நா.பாலசுப்பிரமணியம் எழுதிய செல்லி ஆகியனவும் சாதிப் பிரச்சினை சார்ந்தனவே. முன்னைய சிறுகதை, நகரம் சென்று படித்து வரும் இளைஞர்களின் முற்போக்கான சிந்தனை காரணமாக, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக தென்மராட்சி கிராமத்து ஆலயக் கதவு திறக்கப்படுவதையும் பாடசாலை அனுமதி கிடைப்பதையும் எடுத்துரைக்கின்றது. அதே நகரத்து வாழ்க்கை, காரணமாக, கலப்புத் திருமணம் நிகழ்வதை "செல்லி" சித்திரிக்கின்றது.

மேற்கூறியவற்றை நோக்கும்போது முப்பது களின் முன்னோடிச் சிறுகதையாசிரியர்களுள் முக்கியமானர்கள், பலரும் நன்கறிந்துள்ள இலங்கையர் கோன், சி.வைத்தியலிங்கம், சம்பந்தன் மட்டுமல்லர் வேறுசிலருமுள்ளனர் என்பதும் ஈழத்து மக்களது முக்கியமான சமூகப் பிரச்சினையொன்று முதற் தடவையாக சிறுகதைப் பொருளானது என்பதும் புலப்படுகின்றன! அதே வேளையில் அவை பிரச்சாரப் பண்புடனும் கலைத்துவமின்றியும் உருவ அமைதி குன்றியும் அமைந்திருந்தன என்பதனை மறந்துவிடக் கூடாது! அதுமட்டுமன்றி சாதிப் பிரச்சினை பற்றிய பிரக்ஞை ஈழத்தில் ஏற்பட்ட சமூக மாற்றங்களால் உணரப்பட்டது என்பதனைவிட, இந்திய காந்தீயச் சிந்தனைத் தாக்கத்தால் நிகழ்ந்தது என்பதையும் மனங்கொள்வதவசியமாகின்றது!

பவன் எழுதிய ஆசைச்சட்டம்பியார் ஆங்கிலங் கற்ற மேல்மட்டச் சமூகத்தின் வாழ்வுப் பின்னணியையும் கல்வி முறையையும் சித்திரிப்பது.

இவ்விடத்தில் இவ்வேளை மனங்கொள்ள வேண்டிய விடயமொன்றுள்ளது. அதாவது, மேற்குறிப் பிட்ட "புதிய" எழுத்தாளர்களது அனைத்துச் சிறுகதை களையும் தேடி ஆழமாக ஆய்வு செய்வோமாயின் ஈழத்தில் சிறுகதை தோற்றம்பெற்ற காலத்துச் சிறுகதைப் போக்குகள் பற்றி புதிய விடயங்களை வெளிக்கொணர முடியும் என்பதே அதுவாகும்.

## மலையச் சிறுகதையின் தோற்றம்

இவ்வேளை இங்கு கவனிக்க வேண்டியது யாதெனில் மலையகச் சிறுகதையின் தோற்றமும் முப்பதுகளிலே ஆரம்பித்தது என்பது பற்றி அண்மைக் காலத்திலேயே அறியப்பட்டுள்ளது.

மேற்கூறிய விதத்திலே கோ.நடேசய்யர் எழுதிய "திரு.இராமசாமி சேர்வையின் சரிதம் என்பதே இவ் வேளை கவனத்திற்குரியதாகின்றது. வறுமை காரண மாக தமிழ் நாட்டிலிருந்து மலை நாட்டிற்கு வந்த ஒருவன்,

கஷ்டப்பட்டு தொழில் செய்து கங்காணியாவது பற்றியது இச்சிறுகதை. சமகாலச் சிறுகதைப் போக்குகளுடன் ஒப்பிடுகின்றபோது இதன் உள்ளடக்கம் வித்தியாசமான தென்பதே இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

**மறுமலர்ச்சிக் கதைகளும் மறுமலர்ச்சிக் கால கட்டமும்**

ஈழத்துச் சிறுகதை வரலாறு பற்றி எழுதியோர் பலரும் மறுமலர்ச்சிக் கதைகளுக்கு, அதாவது, "மறு மலர்ச்சி" சஞ்சிகையிலே வெளிவந்த சிறுகதைகளுக்கு போதியளவு முக்கியத்துவமும் உரிய இடமும் அளிக்க வில்லை. அச் சஞ்சிகைகள் கிடைப்பரிதாக விருந்ததே அதற்குக் காரணமாகும். அதனால் கிடைத்த இரண் டொரு சஞ்சிகைகளை வைத்துக்கொண்டு அவசரப் பட்ட மேலோட்டமான முடிவிற்கு வந்துள்ளனர்.

**அவ்வாறான முடிவுகளுளொன்று :**

"பண்பு அடிப்படையில் இக்காலப் பகுதியிலே தோன்றிய எழுத்தாளர்கள் முந்திய தலைமுறை எழுத் தாளர்களிலிருந்து அதிகம் வேறுபட்டவர்களல்லர். 1930ஆம் ஆண்டுகளின் ஈழத்துச் சமுதாய அரசியல் போக்குகளில் அதிக மாற்றங்கள் இன்மையே இவர் களில் காணப்படும் ஒற்றுமைக்கான அடிப்படை எனலாம். அவ்வகையில் 30ஆம் 40ஆம் ஆண்டுச் சிறுகதைகளை ஒரு சேர நோக்குவதும் பொருந்தும்:"

மேலே கூறப்படும் கருத்து - இக்கால, முந்திய தலைமுறை எழுத்தாளர்களிடையே வேறுபாடு களில்லை என்பது - தவறானது.

"மறுமலர்ச்சி" இதழ்களிலே எழுதிய சிறுகதை எழுத்தாளருள் அ.செ.முருகானந்தன், வரதர் கு.பெரிய தம்பி, இராஜநாயகன், சு.வே.முதலானோர் புதிய தலை முறை சார்ந்த எழுத்தாளர்களாக விளங்குகின்றனர்: இவர்களது சிறுகதைகளுள் சிலவற்றை நோக்கும் போது இக்காலகட்ட எழுத்தாளர்களிடமும் வேறுபாடு களிலிருப்பது புலனாகும். இவ்வேளை வசதி கருதி அ.செ.முருகானந்தன், சு.வே.ஆகியோரதும் ஏலவே எழுதத் தொடங்கிய தாழையடி சபாரெத்தினம், இ.பொன்னுத் துரை ஆகியோரதும் சிறுகதைகள் பற்றிக் கவனிப்போம்.

அ.செ.முருகானந்தன் எழுதியவற்றுள் "பழையதும் புதியதும்", "மாடு சிரித்தது" ஆகிய இரு சிறுகதைகளை முதலிற் கவனிப்பது அவசியமானது. "பழையதும் புதியதும்" யாழ்ப்பாணச் சமூக நிலையில் நாற்பதுகளில் ஏற்பட்டுவந்த முக்கியமான மாற்றங்கள் சிலவற்றை நுணுக்கமாக வெளிப்படுத்துகின்றது. நீண்டகாலமாக முக்கியம் பெற்றிருந்த மாட்டுவண்டிப் பயன்பாடு குன்றி, கார் வண்டியின் பயன்பாடு இடம் பெறத் தொடங்குவதை நாகரிக மாற்றங்களை ஈழத்தில் இரண்டாம் உலக யுத்தம் ஏற்படுத்திய பாதிப்பினை பின்புலமாகக் கொண்டு விளக்குகிறது" சில சம்பவங் கள், முக்கியமான இருபாத்திரங்கள், அவர்களது மனப் போராட்டங்கள், உணர்ச்சிக் குமுறல்கள் ஊடாக கதை நகர்ந்து செல்கிறது. இவ்விதத்தில் "பழையதும் புதியதும்" என்ற தலைப்புக்கூட அர்த்த புஷ்டியான தொன்றாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

இச்சிறுகதையின் ஒரு பகுதியை இங்கு எடுத்தாள்வது அவசியமானது. அது பின்வருமாறு.

"ஏய்! ஏய்!" என்று இரண்டு அதட்டல் போட்டு மாடுகளைத் தட்டிவிட்டான் கார்த்திகேசு. ஒரு நிலையில் நின்று அலுத்துப்போன மாடுகள் உற்சாகத்தோடு முதலில் கொஞ்சத் தூரம் ஓடின. இந்தச் சமயம் கார்த்திகேசு என்பக்கம் திரும்பி, பெருமை பொங்க ஒரு கம்பீரப்பார்வை பார்த்தான். அதற்கு ஒன்றும் சொல்லாம லிருந்தால் நல்லாயிருக்காதல்லவா?

"அவசரமில்லை. அணணே! ரயிலுக்கு நேரமிருக்கு மாடுகள் மெள்ளப் போகட்டும். ஏது, சோடி வாய்த்துவிட்டது போலிருக்கே உனக்கு!" என்று சும்மா சொன்னேன். கால்மைல் தாண்டியதும் நடக்கும் சங்கதி எனக்குத் தெரியாதா? ஆனால், மனுஷன் பாவம். நான் கூறியதை மெய்யென்றே நம்பிவிட்டான். முகஸ்துதி யிலே பழைய காலத்து வெள்ளை மனம் தன்னை மறந்து போய்விடுகிறது.

ஆசனப் பலகையில் நேராக இருந்த மனுஷன் திரும்பி ஒரு கோணமாக இருந்து கொண்டு "ஹும்! இதெல்லாம் என்ன மாடுகள் தம்பி முன்னே முன்னே எப்படி எப்படி மாடுகள் என்னிடம் நின்றன தெரியுமே? உனக்குத் தெரியாது. உனது பெரியப்பாவுக்குத் தெரியும். வேறொன்றுமில்லை.

எதற்கும் கைராசி வேண்டும். எல்லாம் மாடு களைப் பழக்குகிறவிதத்திலிருக்கு. எப்பேர்ப்பட்ட சண்டி மாடுகளும் கார்த்திகேசனின் கைக்கு வந்துவிட்டால் சவாரி சுட்டியன்களாகிவிடும்." என்று முன்னெல்லாம் பேசிக் கொள்வார்கள். இப்படி ஆரம்பித்துப் பேசிக் கொண்டு போனவன் இடையில் ஒருதரம் நிறுத்தி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுவிட்டு மறுபடியும் சொன்னான்.

"மாடு சிரித்தது" சமகால அரசியல் மாற்ற மொன்றைச் சுவைபடச் சொல்கிறது. கவுன்சிலுக்கான தேர்தல் போட்டியும் போட்டியிடும் கட்சிகளின் செயற்பாடுகளும் அவை பற்றிய, பொதுசனங்களின் அறியாமையுமே அச்சிறுகதையின் உள்ளடக்கமாகும். அச்சிறுகதையின் முடிவுப் பகுதியை இவ்வேளை எடுத்தாள்வது பொருத்தமானது.

ஏன், பரியாரியார் பெரியண்ணர் பக்கம்தானே வேலை செய்கிறார்! தெரியாதோ?" என்று திருப்பிக் கேட்டான் அவன்.

"அந்த நோட்டீஸைப் படித்துப் பார்த்தால் அவர் யார் பக்கமென்று தெரியும்" என்றேன்.

ஆதை நான் படித்துப் பார்க்கவில்லை தம்பி. எனக்குத் தெரியும். எப்படியும் பரியாரியார் பெரியண்ணர் பக்கம்தான் வேலை செய்வார் என்று? "அதெப்படி?" என்று வெகு ஆவலோடு கேட்டேன்.

"அடடே உனக்கும் இதெல்லாம் தெரிந்து விட்டது போலிருக்கே எங்கே அந்த நோட்டீஸை இங்கே எடு பார்ப்போம். என்று அதைக் கேட்டு வாங்கிப் பார்த்தேன் எனக்குப் பெரும் வியப்பாயிருந்தது. ஏன்?

அது பெரியண்ணருக்கு மாறாக அவரது எதிர்க்கட்சியினர் அவர் மீது வசைபுராணம் பாடி வெளியீட்ட நோட்டீஸ்!

"என்ன அப்பா, இது, யார் பக்கத்து நோட்டிஸ், நீ கொண்டு திரிகிறாய்? என்று கேட்டதும் கார்த்திகேசு

திடுக்கிட்டு விட்டான். நான் விசயத்தைச் சொன்னேன்.

"அடடா, மாறிவிட்டேன் போலிருக்கிறது. வண்டியில் இதை யாரோ கொண்டு வந்து விட்டு விட்டுப் போயிருக்கிறார்கள். அதைக் கிழித்தெறிந்துவிடு தம்பி." என்று பரபரப்பாக என்னிடம் வாங்கி தூள் தூளாகக் கிழித்தெறிந்தான்.

"கார்த்தி அண்ணே! நீ பள்ளிக்கூடம் போன தில்லையா சிறுவயதில்?" என்று அவனை நான் கேட்க வில்லை. மாட்டின் கழுத்திலிருந்த சலங்கைகள் கல கலத்தன. அது மாடு சிரித்தது போலிருந்தது எனக்கு! ஏன் சிரித்தது?

முப்பதுகளில் சிறுகதை எழுதியோர், வரலாற்றுச் சம்பவங்ளைச் சுவைபடச் சொல்ல, நாற்பதுகளில் சிறுகதை எழுதியோர் சமகால சமூக, அரசியல் மாற்றங்களைச் சுவைபடச் சொல்ல முற்படுவது பற்றிய நினைவு இவ்வேளை எழுவது தவிர்க்கவியலாததாகிறது!

பிச்சைக்காரர் (ஆலமரம் - தாழையடி சபா ரெத்தினம்), பைத்தியக்காரர் (தெருக்கீதம் - தாழையடி சபாரெத்தினம்), வண்டிக்காரர் (வண்டிக்காரச் சுப்பன் - இ.பொன்னுத்துரை) முதலான விளிம்பு நிலை மக்கள் இக்காலச் சிறுகதைகளில் முக்கிய பாத்திரங்களாக உலாவுவதும் கவனத்திற்குரியது.

மறுமலர்ச்சியில் வெளிவந்த "சு.வே" யின் சிறுகதைகளான பரோபகாரம், நிலைகேடு ஆகியன இன்றைய மாந்திரீக யதார்த்தப் பாணி (Magical Realism) சார்ந்த சிறுகதைகளாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட சிறுகதைகளுள் கணிச மானவை யதார்த்தப்பாங்குடன் எழுதப்பட்டுள்ளன என்பது பற்றி அதிகம் எடுத்துரைக்க வேண்டியதவசியமன்று.

அ.செ.முருகானந்தனின் பழையதும் புதியதும் சிறுகதை பற்றி "பாரதி" விமர்சனக் குறிப்பில் பின்வரு மாறு குறிப்பிட்டுள்ளமை மனங்கொள்ளத்தக்கது: "வண்டிக்காரர்களுக்கு வந்த சண்டைக் கால யோகத்தை வைத்து அ.செ.மு. பின்னியுள்ள சிறுகதை யதார்த்த சித்திரம்."

இவ்விடத்தில் இன்னொரு முக்கியமான விடயத்தையும் வற்புறுத்தியாகவேண்டும். "மறு மலர்ச்சிக் கதைகள்" என்ற தொகுப்பிலே இடம் பெற்றுள்ள சிறுகதைகள் ஏலவே குறிப்பிட்டதுபோல மறுமலர்ச்சிச் சஞ்சிகையிலே வெளிவந்தவையே அவைபற்றி "மறு மலச்சிக்கதைகள்" தொகுப்பு வெளி வந்த பின்னர் விதந்துரைக்கின்ற ஆய்வாளர்கள் அதே காலத்திலும் அதற்குப் பின்னரும் வெளிவந்த (கொழும்பு) பாரதி (1946) பற்றி கவனஞ் செலுத்துவ தில்லை. மண்டூர் பாரதி எவ்வாறாயினும் பாரதி சஞ்சிகைகளிலே வெளிவந்தனவும் மறுமலர்ச்சி சஞ்சிகைச் சிறுகதைகளில் வெளிப்படும் பண்புகளைப் பெற்றுள்ளன என்பது உண்மையானது. அதுமட்டு மன்று மறுமலர்ச்சிச் சஞ்சிகையின் சிறுகதைகளில் இடம்பெறாத முக்கிய சில பண்புகளும் அவற்றில் வெளிப் படுகின்றன. அவை எமது கவனிப்பை ஈர்த்துள்ளன.

கொழும்பு பாரதி பற்றி முதலில் கவனிப்போம். இதுவே ஈழத்தின் முதலாவது இலக்கியச் சஞ்சிகை யாகும் (இரண்டாவது முற்போக்குச் சஞ்சிகையுமாகும்) இவ்வழி இச்சஞ்சிகை ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் பின்வரும் விதங்களில் முக்கியம் பெறுகின்றது:

i. "கண்டதும் காதல் கதைகள் மலிந்த இன்றைய தமிழிலக்கியப் போக்கிற்குப் புதுவழி காட்டும்" பாரதி யூடாக ஈழத்தில் முற்போக்கு எழுத்தாளர் குழா மொன்றின் உருவாக்கத்திற்குக் கால்கோளிடப் பட்டுள்ளது. இவ்விதத்தில் "பாரதி"யின் பின்வரும் குறிப்பு கவனத்திற்குரியது. "...இந்நிலையில் எழுத்தாளர்களின் பங்கு யாது? ரோமபுரி எரிந்து கொண்டிருக்கும்போது ஆனந்தமாக பிடில் வாசித்த நீரோவைப் போல இச் சமயத்தில் வேடிக்கைக் கதையும் வெற்றுக் கவிதையும் எழுதி தமது ஆற்றலை வீணாக்காது, நாட்டின் பல்வேறு சக்திகளின் ஒற்றுமைக்கும், அவற்றின்மூலம் நாட்டின் விடுதலைக்கும் தம் திறனை அர்ப்பணம் செய்ய வேண்டும். தம் வலிமையை உணர்ந்து தம் திறனை எழுத்தாளர்கள் காட்டும் நாள் நெருங்கிவிட்டது."

ii. மேற்கூறிய சிறுகதைகளுக்கு முன்மாதிரியாக மொழிபெயர்ப்புச் சிறுகதைகளை வெளியிட்டுள்ளது. உ-ம்: மாக்ஸிம் கோர்க்கியின் "கோமாளி", "முல்க்ராஜ்" ஆனந்தின் - புரட்சி வீரன். இவ்வழி ஈழத்து முற் போக்கு எழுத்தாளர்களுக்கு இவை முன்மாதிரியாக விளங்கின என்பது கவனத்திற்குரியது.

iii. அனைத்தையும்விட, ஈழத்தில் முற்போக்கு எழுத்தாளர் பரம்பரையினரின் பிரவேசம் "பாரதி" யூடாகவே இடம்பெறுகின்றது. அ.ந.கந்தசாமி கே.ராம நாதன், அப்துல் லத்தீப், எஸ்.பி.அமிர்தலிங்கம் முதலா னோர் இவ்விதத்தில் குறிப்பிடத்தக்கவர்கள் அ.ந.கந்த சாமி எழுதியுள்ள சிறுகதைகளுளொன்று, சீன உள்நாட்டுப் போரில் நிகழ்ந்த உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

**மண்டூர் பாரதியில் வெளிவந்த சிறுகதைகள் பின்வரும் விதங்களில் கவனத்திற்குரியன:**

(i) முஸ்லீம் எழுத்தாளரின் சிறுகதையை முதன் முதலாக வெளியிட்டுள்ளது (உ-ம் : சதிகாரி எம்.எம்.ஸாலிஹ்) - இவ்விதத்தில் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியின் பொருள் விரிவிற்கு வழிவகுத்துள்ளது.

புரட்சிகரமான நோக்குடைய சிறுகதைகளை எழுதித்தரும்படி எழுத்தாளரிடம் கேட்டுப்பெற்று வெளியிட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அதிகாரி தனக்குப் பொருத்தமற்றவனான குடிகாரக் கணவனது கொடுமை தாங்கமாட்டாத மனைவி அவனைக் கொலை செய்து விட்டு தானும் தற்கொலை செய்வது பற்றியதாகும்.

இச்சிறுகதை பிரச்சாரமாக வெளிப்படாமல் கலாபூர்வமான முறையில் எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. உ-ம்:

"கத்தியிலிருந்து சொட்டிக்கொண்டிருக்கும் இரத்தத்துளிகளைக் கவனித்தாள். ஒவ்வொரு துளி யிலும் ஒவ்வோர் காட்சிகள் நடனமாடின. முதல் துளியைப் பார்த்தாள்... கோவலின் அழகு மார்பிலே, கண்ணகி இறுமாந்து கிடக்கின்றாள்: இரண்டாவது துளியைப் பார்த்தாள்... அமராவதியின் கற்கண்டுக் கன்னத்தை அம்பிகாபதியின் தளிர்க்கரம் வருடிக் கொண்டிருக்கின்றது. மூன்றாவது துளியைப் பார்த் தாள்... லைலாவின் நுதலிலே மஜ்னுவின் அதரங்கள்

இன்ப முத்திரையிடுகின்றன. நான்காவது துளியைப் பார்த்தாள்... சாஜகானின் இதயத்திற்குள் மும்தாஜ் கைகொட்டிச் சிரித்துக் கொண்டிருக்கிறாள். ஐந்தாவது துளியைப்பார்த்தாள்... நஸீமா நன்றாகக் கவனிக்க வில்லை... ஒரு மரக்கட்டையில் அழகு யுவதி சாய்ந்து கொண்டிருந்தாள்..."

(ii) பெண்மன உணர்வுகளை "கு.ப.ரா" பாணியில் வெளிப்படுத்தும் சிறுகதை இடம்பெற்றுள்ளது (எ-டு: மங்கிய வெளிச்சம் S.K.ராஜூ.) , கு.பா.ரா எழுதிய சிறிது வெளிச்சம் சிறுகதையின் அருட்டுணர்வில் இது எழுதப்பட்டிருக்க வாய்ப்புள்ளது.

(iii) யாழ்ப்பாண எழுத்தாளர்களது சிறுகதைகளே "மறுமலர்ச்சி"யில் பெரும்பாலும் வெளிவந்த சூழலில், மலையகம் (உ- ம் - S.K.ராஜூ.), மட்டக்களப்பு (எம்.எம்.ஸாலிஹ்), திருகோணமலை (வ.அ.இராச ரெத்தினம்) பிரதேச எழுத்தாளர்களது படைப்புகளை வெளியிட்டமை காரணமாக அவ்வப் பிரதேச எழுத்தாளர் களது உருவாக்கத்திற்கு உந்து சக்தியளித்துள்ளது.

இறுதியாக, முக்கியமான இன்னொரு விடயம் பற்றியும் குறிப்பிடுவதவசியமாகின்றது. அதாவது மறுமலர்ச்சி, (கொழும்பு) பாரதி, மண்டூர்) பாரதி முதலான சஞ்சிகைகள் வெளிவந்த இக்காலகட்டம் ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சிப் பின்புலத்தில் குறிப் பாக, சிறுகதை, கவிதைத்துறைகளில் பிரக்ஞை பூர்வமாக "நவீனம்" (Modern) அல்லது நவீனத் தன்மை (Modernity) சார்ந்த இலக்கியச் சிந்தனை முகிழ்ப்புற்ற காலமாக விளங்குகின்றமை கவனத்திற்குரியதா கின்றது. "மறுமலர்ச்சி"யில் "நவீனம்" பற்றிய கட்டுரை கள் வெளிவந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் புதுமை பழமை (மரபு) என்பன சார்ந்த சர்ச்சைகள் இடம்பெறத் தொடங்குவதும் அது தமிழ்ப்பண்டிதர்கள், இளைஞர்கள் என்ற இரு சாரார்களுக்கிடையில் நடைபெறுவதும் விதந்துரைக்கப்பட வேண்டியன.

மேலும் நவீன இலக்கிய வளர்ச்சி இலக்கியச் சஞ்சிகைகளை அடித்தளமாகக் கொண்டது என்ற விதத்தில் ஈழத்தில் நாற்பதுகளிலேயே இவ் இலக்கியச் சஞ்சிகைகள் வெளிவரத் தொடங்கியமையும் குறிப்பிடத் தக்கதொரு விடயமாகிறது. இச்சஞ்சிகைகள் அனைத்தும் பாரதியாரை முன்னோடியாகக் கொள்வதும் புதுமைப்பித்தன், கு.ப.ரா முதலிய சிறுகதை எழுத்தாளர்களால் ஈர்க்கப்படுவதும் தற்செயல் விடயங்களன்று!

மேற்கூறியவை அனைத்தையும்விட, நவீன இலக்கியம் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட தெனில் அத்தகைய அனுபவம் ஊற்றெடுப்பதற்கும் கிராம-நகர ஊடாட்டம் நிகழ்வதற்கும் கல்வித் துறையில் ஏற்பட்ட மாற்றம் - இலவசக் கல்வி முறை அனை வருக்கும் கிடைத்தமை வழிவகுக்கின்றது. முதன் முதலாக சமூகத்திலுள்ள பலரும் நவீன கல்வி கற்கும் வசதி ஏற்படுகின்றது. இத்தொடர்பில் மறு மலர்ச்சி எழுத்தாளரான அ.ந.கந்தசாமி பின்வருமாறு குறிப்பிட்டது நினைவிற்கு வருகின்றது:

"வாலிபத்தின் வைகறையிலே, பள்ளி மாணவ னாக யாழ்ப்பாண நகரக் கல்லூரிக்கு வந்து விட்டு மாலையில் கிராமத்தை நோக்கிப் புகைவண்டியில் செல்லுகையில் சிலசமயம் தன்னந்தனியனாக ரயில் வண்டியிலிருப்பேன். அப்போது என் கண்கள் வயல் வெளிகளையும் தூரத்துத் தொடுவானையும் உற்றுநோக்கும் : உள்ளத்திலும் உடம்பிலும் சுறுசுறுப்பும் துடிதுடிப்பும் நிறைந்தகாலம்.... உலகையே என் சிந்தனையால் அளந்துவிட வேண்டுமென்ற பேராசை கொண்ட காலம்..."

சுருங்கக்கூறின் நாற்பதுகளிலிருந்தே ஈழத்துச் சமூக அரசியல் மாற்றங்கள் உணரப்படுவதும் சிறுகதை களில் நவீனத்தன்மை முகிழ்ப்பதும் ஈழத்துச் சிறுகதை ஈழத்து மண்ணுடன் சுவறத்தொடங்குவதும் நிகழ் கின்றமை இதுவரை கூறியவற்றிலிருந்து நன்கு புலப்படு கின்றது. இக்காலப்பகுதியை பரந்த நோக்கில் மறு மலர்ச்சிக் காலகட்டம் என்று அழைப்பதும் பொருத்தமான தாகின்றது! ஆக, ஈழத்துச் சிறுகதையின் தோற்ற மும் வளர்ச்சியும் (1930-1950) மறுமதிப்பீடு என்ற விதத்தில் இவ் ஆய்வினூடாகப்பின்வரும் விடயங்கள் வெளிப்படுகின்றன:

(i) சிறுகதை முன்னோடிகள் அன்று கருதப்பட்டு வந்துள்ள மூவருள் இலங்கையர்கோன், சி.வைத்திய லிங்கம் ஆகிய இருவரும் ஆய்வாளர் பலரும் கருதுவது போன்று புராண, இதிகாச, வரலாற்றுச் சம்பவங்களை மட்டும் எழுதினரல்லர். இலங்கையர்கோன்,

(i) மண்வாசனை, ஆண் - பெண் உறவு முதலான உள்ளடக்கங்கள் கொண்ட சிறுகதைகளையும் யதார்த்த நோக்குடைய சிறுகதைகளையும் எழுதியிருக்கின்றார். சி.வைத்தியலிங்கம் மேற்கூறியவற்றோடு, பெண்களது மன உணர்வுகளை நுட்பமாக வெளிப்படுத்தும் சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

(ii) மேற்கூறியோரிடமிருந்து வேறுபட்ட சம்பந்தனின் சிறுகதைகள், காதல், குடும்ப வாழ்க்கை அடியாக எழும் மனவுணர்ச்சிகளை திறம்பட வெளிப்படுத்தி யுள்ளார்.

(iii) மேற்கூறிய காலப்பகுதியில் சமூகப் பிரச்சினை கள் சார்ந்த சிறுகதைகளும் எழுதப்பட்டுள்ளன.

உ-ம்: ஆனந்தனின் படைப்புகள்

(iv) ஆயினும், அத்தகைய சிறுகதைகள் சமூக மாற்றங் காரணமாக உருவாகவில்லை காந்தீய செல்வாக்கினால் உருவாகின்றன.

(v) முப்பதுகளிலே மலையகப் பிரதேசத்திலும் சிறுகதை தோற்றம் பெறுகின்றது.

(vi) நாற்பதிகள் காலப்பகுதி பற்றிய "மறுமலர்ச்சி" சஞ்சிகைக் கதைகள் தொடர்பாக ஏலவே கூறப்பட்ட கணிப்பீடு தவறானது.

(vii) ஈழத்து மக்கள் வாழ்க்கையிலேற்பட்ட மாற்றங்கள் சிறுகதைகளில் உணர்வுபூர்வமான முறையில் இப்போதுதான் வெளிப்படுகின்றன் ஈழத்து மண்ணுடன் இப்போதுதான் சிறுகதை கலக்கின்றது.

(viii) "மறுமலர்ச்சி" சஞ்சிகை தவிர, பாரதி (கொழும்பு), பாரதி (மண்டூர்) சஞ்சிகைகளும் வெவ் வேறு நோக்கும் போக்கும் கொண்ட சிறுகதைகளை வெளியிட்டுள்ளன.

(ix) மேற்கூறிய விதங்களில் நாற்பதுகள் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் மறுமலர்ச்சிக் காலகட்டம் என்பது பொருத்தமானது.

(x) இக்காலகட்டம் ஐம்பதுகள் காலகட்டம் சிறப்பாக உருவாவதற்கேற்ற தடங்களை இட்டுள்ளது!



# ஆண்...

- வி.ஜீவகுமாரன்

"இன்னும் என்ன உங்களுக்கு வேணும்" அந்த அதிகாலையில் அவளின் அவல ஒலி இருட்டான குடோனின் சுவர்களில் பட்டுத் தெறித்தது.

இரண்டு கைகளாலும் தலைகளில் அடித்துக் கொண்டாள்.

அரிசியை சாக்கில் ஓட்டை போட்டு அதிலிருந்து விழுந்த அரிசியைக் கொறித்துக் கொண்டிருந்த இரண்டொரு எலிகள் சாக்குகளுக்கு பின்னால் அமைந்திருந்த தம் பொந்துகளுள் "கீச்"சு.. "கீச்"சுக்கென்று ஒலி எழுப்பியபடி போய் ஒளிந்து கொண்டன.

எல்லாம் முடிந்தவனான அவன் எழுந்து காறித்துப்பியபடி எதுவுமே பேசாமல் வெளியேறினான்.

திகைப்பு விடுபடாத நிலையில் அழுதபடி கலைந்திருந்த பாவாடையை அவள் சரிசெய்தாள்.

கையில் ஏதோ ஒன்று ஒட்டியது போல இருந்தது.

அவளுக்கு குமட்டல் எடுத்தது.

***

செவ்வாய் - சனி.

கிழமையில் இந்த இரண்டு நாட்களில்தான் இங்கு சந்தை கூடும்.

அதிகாலை நான்கு மணிக்கு சந்தை விழித்துக் கொண்டால் பின்னேரம் மூன்று மணிவரை சன நடமாட்டத்திற்கு எந்தக் குறைவும் இராது.

அவ்வாறே சந்தையில் இருந்து இருநூறு மீற்றர் தொலைவில் இருக்கும் தேனீர்கடையும் காலை ஆறிலிருந்து கலகலப்பாகும். அது இரவுவரை தொடரும்.

அவ்வாறே மற்றைய உடுபுடவைக் கடைகள் ஒன்பது மணிக்கு வீதிக்கு தண்ணீர் தெளித்து, சந்தனக் குச்சிகளின் வாசனையுடன் திறக்கும்.

முன்பு சந்தையின் மூலையுடனேயே ஒரு தேனீர்க்கடை இருந்தது. சண்டையின் பொழுது ஆமியின் றக் பிரண்டதுடன் அதில் வேறொரு கடை கட்ட நகரசபை அனுமதி கொடுக்கவில்லை. இப்பொழுது அந்த இடத்தில் ஒரு புத்தர் சிலை வரப்போவதாக கதைக்கின்றார்கள்.

போராட்டத்திற்கு முன்பு இங்கு தினமும் பெரிய சந்தை கூடும்.

ஆனால் இப்போது யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பல புதிய சந்தைகள் வந்ததால் கிழமையில் இரண்டு தரம் மட்டும் இங்கு பெரியளவில் கூடும்.

குறிப்பாக தீவுப்பகுதி மக்கள் தங்கள் பிரதேசங்களுக்கு இங்கு வந்து கொள்வனவு செய்வதாலேயே இந்த இரண்டு தினமும் பெரியளவில் கூட்டப்படுகிறது.

முன்பைப் போல தரகு... நாட்டாமைகள் இல்லாததால் விவசாயிகளும், தோட்டக்காரர்களும், வாடிக்கையாளர்களும்.. சாதாரண மக்களும் அதிகளவில் வருவதில் நாட்டம் காட்டினார்கள்.

சந்தைக்கு முன்னால் உள்ள பஸ் ஸ்ராண்டில் அல்லது சந்தையின் நாலாப்புறமும் உள்ள மூலைகளில் இருவர் இருவராய் நிற்கும் ஆமிக்காரரைக் காணும் போது மட்டும் மக்களுக்கு தேவையில்லாது ஒரு சின்ன பயம் ஏற்படும். பின்பு அவர்களைத் தாண்டியதும் அது மறைந்து விடும்.

அவ்வாறுதான் இன்றைய வடமாகாண நிலைமைகள் இருக்கிறது.

ஆமிக்காரர்களும் நட்பு மிகுந்த புன்னகையை முகத்தில் வலிந்தே பரவவிடுவது நன்கு தெரியும்.

இந்த இரண்டு நாள் இலாபம்தான் மற்றைய பல வியாபாரிகளின் அடுத்த ஐந்துநாள் நட்டத்தை ஈடுகட்ட வேண்டும். அல்லது இந்த இரண்டுநாள் இலாபம் கிழமைச் சீட்டுக் கட்டவும் மற்றைய ஐந்துநாள் உழைப்பு அன்றாடம் வீட்டில் உலை கொதிக்கப் போதுமானதாய் இருந்தாலே போதும் என்ற நிலைப்பாடுதான்

அனைவருக்கும் இருந்தது.

செவ்வந்திக்கு மட்டும் இது விதிவிலக்கு.

தாய் தங்கம்மாவுடன் அறியாத வயதில் ஒட்டிக் கொண்டு இந்த சந்தைக்கு வரத் தொடங்கியவள் அவள்.

மரக்கறிகளுள் உள்ள அழுகியவற்றையும் காய்ந்தவையும் பொறுக்கி அப்பால் எறிவது... இடைக்கிடை தண்ணீர் தெளிப்பது... தாய் சொல்லும் தொட்டாட்டு வேலைகளை செய்வது... தாயார் மீன்கடைக்கு பத்து மணிக்கு மீன் வேண்டச் செல்லும் பொழுது தானாக வியாபாரம் செய்யாவிட்டாலும் யாரும் மரக்கறிகளை எடுத்துக் கொண்டு போகாமல் பார்ப்பது, தாய்க்கும் தனக்கும் காலையிலும் மாலையிலும் தேனீர் வேண்டி வருவது... மத்தியான வேலையில் எலுமிச்சைந் தண்ணீயோ அல்லது மலிந்த கலர் கலரான சர்பத் வேண்டி வருவது என தாயுடன் பின்னிப்பிணைந்த அவள்; வாழ்வும் சந்தையுடன் இணைந்து அதிகாலையில் விழித்துக் கொள்ளும். பின் மாலையில் கட்டாக் காலி மாடுகளும் மீன்கடையில் நின்று விட்டு வரும் நாய்களும் சந்தைக்குள் வரும் போது இவளின் அன்றைய பொழுது கழிந்து தாயுடன் வீடு திரும்பும்.

பாடசாலைப் படலை திறந்து அவள் அறிந் திருக்கவில்லை.

“எப்பிடியும் குந்தினபிறகு மறிக்கத்தானே போறன்... அதுக்கிடையிலை இந்தக் கழுதை என்னத்தை படிச்சுக் கிழிக்கப் போகுது”, என்பது தங்கம்மாவின் வாதம்.

“உவள் ஒருத்தி படிச்சுத்தான் இலங்கை அரசாங்கத்தின்ரை கடன்கள் எல்லாம் தீரப் போகு தாக்கும்” என கள்ளுக் கொட்டிலில் மணலில் சவரம் செய்யாத முகத்தின் மோவாயைத் தடவியடி ஆடு புலி ஆடும் தகப்பனின் ஆமோதிப்பு.

ஒருநாள் தாய்க்கும் தனக்கும் தேனீர் வேண்டி வரும் பொழுது சந்தையில் வரிபோடும் சாரங்கன், “ஏய் எனக்கும் ஒரு தேத்தண்ணி வேண்டி வா...”, என அவள் நின்று திரும்பி பார்த்து ஆம் அல்லது இல்லைச் சொல்ல முதல், ”கொஞ்சம் சீனியை குறைவாய்ப் போடச் சொல்லு... இந்தக் கண்டறியாத சலரோகம் வேறை” என்றபடியே காசை நீட்டினான்.

சாரங்கன் சந்தைக்கு வரி போடும் நகரசபையின் வேலையாள் மட்டுமில்லை. ஒரு சின்னச் சண்டியன். எந்த வியாபாரிக்கும் வெளியாட்களால் என்ன பிரச்சினை என்றாலும் மத்தியஸ்தம் செய்து அவன் தான் பேசித் தீர்த்து வைப்பான். அல்லது அடி போட்டுத் தீர்த்து வைப்பான்.

வெளியே நிற்கும் ஆமியின் துவக்கின் பின் பக்கத்தால் வேண்டும் அடிக்காயக் கண்டலை விட இவன் கையில் கிடைக்கும் வாழைத்தண்டோ... முருங்கைக்காயாலோ வேண்டும் அடி பறவாயில்லை என்பது குற்றமுள்ள மனங்களுக்குத் தெரியும்.

மற்றும்படி வரிக் கொப்பியை கக்கத்துள் வைத்துக் கெண்டு பீடியை வலித்துக் கொண்டு சந்தையைச் சுற்றி வருவான்.

வயது நாற்பதுக்குள்ளே தான். இரண்டு அல்லது மூன்று பிள்ளைகள் இருக்க வேண்டும் என சந்தையுள் பேசிக் கொள்வார்கள். மீன் கடைக்கு வந்து பெரிய மீன்கள் வேண்டிச் செல்லும் அந்த தடித்த மனைவிதான் அவன் மனைவி என்று பேசிக்கொள்வார் கள். சிலர் இல்லையில்லை அது அவனின் வைப்பாட்டி என்றும் சொல்வார்கள். ஆனால் யாரும் நேரடியாக அவனிடம் எதுவும் கேட்பதில்லை.

அப்பிடி ஒரு பய நிழல் அவன் மேல்.

அதே பயத்தினால் செவ்வந்தி அவன் கொடுத்த காசை வேண்டிக் கொண்டாள்.

தேனீர் வேண்டிக் கொண்டு வந்து மிகுதிக் காசு 2 ரூபாயை நீட்டும் பொழுது, “அதை நீயே வைச்சிரு” என்றான்.

“இல்லை வேண்டாம்”

“ஏன்”

“அம்மா பேசும்”

“கொம்மாட்டை நான் சொல்லுறன். இந்தா பிடி”

அவள் மறுத்த போது அவளின் கையை வலுக்கட்டாயமாக பிடித்து கையினுள் திணித்தான்.

அவளும்; பயந்தபடியே அதனை வேண்டி வந்து தாயிடம் சொன்னாள்.

“அதுக்கேன் பயப்பிடுறாய்... நீ வேண்டி வந்து குடுத்ததுக்கு கூலி எண்டு வைச்சுக் கொள்”

“சங்கரன் நல்லவனடி... எங்கடை சாதி சனம் தான்” தங்கம்மாக்கு பக்கத்தே இருந்து வெற்றிலை, பாக்குசீவல் விற்கும் சிவசம்புக் கிழவனார் சொன்னார்.

அப்போதுதான் அவளின் படபடப்பு நின்றது.

அடுத்தநாள் அவள் தேனீர் வேண்டக் கிளம்பிய பொழுது சிவசம்புக் கிழவனாரும் எனக்கும் ஒரு கிளா சிலை வேண்டிக் கொண்டு வா... நானும் இரண்டு ரூபாய் தாறன் என காசை நீட்டினார்.

தாயைத் திரும்பிப் பார்த்தாள்.

அவளும் வேண்டு எனத் தலையாட்டினாள்.

தேனீர்கடைக்கு செல்லும் வழியில் சங்கரன் நிற்பதைக் கண்ட பொழுது வேறுபக்கத்தால் அவள் நடக்க தொடங்க முதல் இரண்டு கைகளையும் தட்டிக் கூப்பிட்டான்.

“ஏய்... குட்டி... இங்கை வா... நேற்றைக்குப் போல சீனி குறைவாய் போட்டு ஒரு தேத்தண்ணி வேண்டி வா...”

அவருக்கு நான் என்ன வேலைக்காரியோ என நினைத்தாலும் மனத்தின் பயம் காசை கை நீட்டி வேண்ட வைத்தது.

அவள் ஏதும் பேசாமல் அவன் கொடுத்த காசை வேண்டிக் கொண்டாள்.

பின்பு சிறிது நேரத்தில் தேனீருடன் வந்து “இந்தாங்கோ அண்ணா” என தேனீரை நீட்டிய பொழுது இன்றும் அவளுக்கு இரண்டு ரூபா கிடைத்தது.

சிவசம்புக்கிழவனின் 2 ரூபாய் சங்கரனின் 2 ரூபாய். இன்று அவளின் சம்பாத்தியம் 4 ரூபாய்.

அதில் இரண்டு ரூபாய் தாய்க்கு கடனாகவும்

மற்ற இரண்டு ரூபாய் தகப்பனின் கள்ளுக் கொட்டிலுக்கும் போனது - இன்று மழை ஆனதால் கள்ளு அரை விலையாம். எனவே அதிகமாக தகப்பன் ஏற்றிக் கொள்ள இவளின் இரண்டு ரூபாய் உதவியது.

அடுத்த நாளிலிருந்து செவ்வந்தி தேனீர் வேண்டி வந்து கொடுப்பது பற்றி சிவதம்புக் கிழவனார் மற்றவர்களுடன் சிலேகித்ததால் அவர்களும் தங்களுக்கு வேண்டிக் கொண்டு வந்து தரச்சொன்னார்கள்.

தங்கம்மாவும், "தானக வாற இலட்சுமியை வேண்டாம் எண்டு சொல்லாதே" என அவள் அந்த கட்டடத்தில் இருக்கும் அனைவருக்குமே காலையிலும் மாலையிலும் தேநீர் வேண்டிக் கொடுக்கத் தொடங்கினாள்.



இப்போ வருமானம் அதிகமானதாலும் 2 ரூபாய் அதிகம் எனப்பட்டதாலும் அதனை ஒரு ரூபாயாகக் குறைத்துக் கொண்டாள்.

மகராசி என்று எல்லா வியாபாரிகளும் சொல்லிக் கொண்டார்கள்.

சங்கரன் மட்டும் தொடர்ந்து 2 ரூபாயே கொடுத்து வந்தான்.

வாடிக்கையாளர் கூடியதால் தேனீர்க்கடைக் காரனே அதிக தேனீர் கிளாஸ்களை வைத்து எடுத்துச் செல்லக் கூடிய ஒரு இரும்புக் கம்பி கூடையையும் கொடுத்து உதவினான்.

நாளாக நாளாக அவளுக்கு தாய்க்கு உதவி செய்வதை விட தேநீர் வேண்டிப் பரிமாறுவதற்கே நேரம் போதுமாய் இருந்தது. தாயை விடவும்; வருமானம் அதிகமான் வந்தது. முதலோ முதலிற்கான வட்டியோ இல்லாத சம்பாத்தியம். தகப்பனும் அதிகமாய் குடித்து விட்டு மாலையில் தள்ளாடி தள்ளாடி வீடு வரத் தொடங்கினார்.

அவளின் தாய் வியாபாரம் செய்யும் கட்டடத்தைத் தவிர மற்ற இரண்டு கட்டத்தில் இருந்தவர்களும் இவளிடம் தேனீர் கேட்க இவள் மிகவும் சுறுசுறுப்படைய வேண்டி வந்தது.

அதே நேரத்தில் தேனீர்கடைக்காரனுக்கோ தனது தேனீரை வேண்டிக் கொடுத்து இவள் அதிகமாக உழைக்கின்றாள் என்ற எண்ணம் தொட்டு விட்டது.

அடுத்த நாளே தனது கடைக்காரப் பையனிடம் ஒரு கையில் மூடிபோட்ட தேனீர் வாளியையும் மறுகையில் கோப்பி வாளியையும் கொடுத்து சந்தைக்குள் அனுப்பினான்.

தேனீர் வேண்டிவரப் போன செவ்வந்தியின் முகம் இருண்டது.

வெறுங்கையுடன் திரும்பி வந்த செவ்வந்தியை சங்கரன் முறைத்துப் பார்த்தான்.

"என்ன உனக்கு கொழுப்பு மெத்திட்டுதா" என வினாவ முன் அவள் கண்ணும் முகமும் புடைக்க தேத்தண்ணிப் பையனை கையால் காட்டினாள்.

அவ்வளவுதான்!

"ஒருத்தியின்ரை பிழைப்பை இன்னொருத்தன்; கெடுக்கிறதோ" என்றபடி சங்கரன் நேராக சென்று தேநீர்ப் பையனின் கையில் இருந்த இரண்டு வாளிகளையும்; பறித்து நிலத்தில் ஒரே அடி!

தேனீரும் கோப்பியும் நிலத்தில் முற்றாக சிதறியது.

பையன் வாளிகளை அப்படியே விட்டு விட்டு சந்தையில் இருந்து தனது கடையை நோக்கி ஒரே ஓட்டம்.

பின்பு கொஞ்ச நேரத்திலை கடைக்காரன் வந்து கான்களை எடுத்துக் கொண்டு போனான் - சங்கரனை திரும்பி திரும்பி பார்த்தபடி....

சங்கரன் பீடி ஒன்றை இழுத்தவாறே, "அந்த பெட்டையின்ரை வயித்திலை அடிக்கப் பார்த்தால் சந்தைக்கு வெளியிலும் கடை வைச்சிருக்க ஏலாது கண்டியோ... திரும்பவும் கொழும்பு கண்டி எண்டு தான் போய் சாப்பாடு கடை போட வேணும்".

இதற்கு பிறகு செவ்வந்தி சங்கரனை ஒரு கடவுளைப் போலத்தான் பார்ப்பாள்.

அவன் தேத்தண்ணி கேட்கா விட்டாலும் அவளாய் கொண்டு போய்க் கொடுப்பாள். அவன் இப்போதும் 2 ரூபாய் அதிகமாய் கொடுத்துக் கொண்டு தான் வந்தான்.

"அண்ணை நான் 1 ரூபாய்தான் கூட வேண்டுறனான்"

"இல்லை நீ வைச்சிரு"

***

அடுத்த இரண்டு நாள் செவ்வந்தி சந்தைக்கு வரவில்லை.

"நான் பதினாலு வயதிலை... இவள் பன்னிரண்டிலையே குந்தீட்டாள்..."

"இனியாவது கொஞ்சம் மனிசனை கல்லுக் கொட்டிலே தவம் எண்டு கிடக்க விடாதை"

"அந்த அறுவான் சொன்னாக் கேட்கிறானே... குப்பைத் தண்ணி வார்க்கிறதுக்கும் தவறணையிலை போய்த்தான் இழுத்துக் கொண்டு வந்தது... இதெல்லாம் ஒரு மனுஷ சென்மங்கள்..."

"இனி சந்தைக்கு கூட்டி வருவியோ... என்ன மாதிரி..."

"என்னத்தை அக்கா செய்யுறது... அவளுக்கு நல்ல பிழைப்பு... கிழமைச் சீட்டு போட்டு போட்டு

நல்லாய் வாறாள்... கிட்டத்தட்ட ஒண்டுக்கு கிட்ட வரப் போகுது... ஒரு நல்லவன் கையிலை பிடிச்சுக் குடுக்கும்வரை அவள் என்னோடை சந்தைக்கு வரட்டும்.. வீட்டிலை குமர்பிள்ளை தனிய இருந்து என்ன செய்யிறது... இங்க எண்டால் நானும் பாத்துக் கொண்ட மாதிரி இருக்கும்"

மூன்றாம் நாளே செவ்வந்தி சந்தைக்கு வந்து விட்டாள்.

"நீ வந்தால் தான் ஆச்சி சந்தையே களை கட்டுது"ணு தன் பொக்கை வாயால் சிவதம்புக் கிழவன் சிரித்துக் கொண்டு அவளுக்கு ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தார்.

அவள் புரியாமல் பார்த்தாள்.

"கொம்மா எல்லாம் சொன்னவா... நீ இப்ப பெரிய மனுஷி... அதுதான் இது... சந்தோசமாய் வைச்சுக்கொள். எல்லாம் நிறைஞ்ச வாழ்க்கை உனக்கு வரவேணும்"

கிழவனை கும்பிட்டு விட்டு தனது தேனீர் காவும் கம்பி வலையை கையில் எடுத்துக் கொண்டாள்.

வீதியைத் தாண்டும் பொழுது சந்தையின் கிழக்கு மூலையில் நின்ற ஆமிக்காரன்,

"ஏ... பொட்டை இங்கை வா".

அவள் மிரண்டபடி மெதுவாகச் சென்றாள்.

"இனிமேல் எங்களுக்கும் தேத்தண்ணி வேண்டித்தா..."

ஆம் எனத் தலையாட்டினாள்.

பின்பு அவ்விடம் விட்டு விரைவாக நகர்ந்தாள்.

மீண்டும் சந்தைக்குள் வந்த பொழுது, "கவனம் ஆமிக்காரர்... சும்மா பல்லைக்கில்லைக் காட்டிப் போடாதை" என சங்கரன் எச்சரித்து விட்டுப் போனான்.

அதையே தாய் தங்கம்மாவும்; அன்று பின்னேரம் சொன்னாள்.

"பார்த்தியே சங்கரனுக்கு உன்னிலை எவ்வளவு அக்கறை எண்டு. சண்டியன் எண்டாலும் அவன் எங்கடை பக்கத்து பிள்ளை..."

செவ்வந்தி தலை ஆட்டினாள்.

***

இந்த ஆறு மாதத்தினுள் செவ்வந்திக்கு வருமானம் நன்கு கூடிவிட்டது. சந்தை கூடும் நாட்களில் வருகைதரும் வியாபாரிகளும் அவளிடம் தேனீர் வேண்டி குடிக்கத் தொடங்கினார்கள்.

அப்பொழுதுதான் சங்கரன் தங்கம்மாவிற்கும் செவ்வந்தியும் தானாக உதவி செய்ய முன் வந்தான்.

"பின் கட்டிட குடோன் திறப்பு என்னட்டை தான் இருக்கு... தேத்தண்ணிக் கடைக்காரன் ஆறு மணிக்குத்தான் கடை திறக்கிறவன்... நாலு மணிக்கோ... ஐந்து மணிக்கோ... நீங்கள் இரண்டு பேரும் வந்தால் அந்த நேரத்திலை அதுக்கை தேத்தண்ணி வைச்ச வித்தால் நல்ல வருமானம் கிடைக்கும். ஆனால் ஆறு மணிக்கு பிறகு தேத்தண்ணிக் கடையிலை தான் நீ வழமைபோலை தேத்தண்ணி வேண்டித்தான் விற்க வேணும். இல்லாட்டி குடோன் திறப்பை தந்ததுக்கு எனக்குப் பிரச்சனை..."

இருவரும் ஒரே நேரத்தில் அவனை கை எடுத்துக் கும்பிட்டார்கள்.

பின்னென்ன?...

செவ்வாயிலும் சனியிலும் செவ்வந்தியின் கையில் நல்ல காசு பிரள ஆரம்பித்தது.

அதிகாலைக் குளிருக்கு அவளின் தேனீருக்கு நல்ல மவுசு.

வியாபாரிகளைத் தவிர்த்து சந்தைக்கு வெளியே நிற்கும் ஆமிக்காரர்களும் உள்ளே வந்து அவளிடம் தேனீர் வேண்டிக் குடிக்க ஆரம்பித்தார்கள்.

"செவ்வந்தி நோனாவின் ரீ சுப்பர்" ஒருவன் சொன்னான்.

"செவ்வந்தி நோனாவும் சுப்பர்" மற்றவன் சொன்ன போது அவளின் முகம் இறுகியது.

சங்கரன் அந்த இடத்துக்கு வந்த பொழுது, "சும்மா செவ்வந்தி நோனாவோடை ஜோக்குப் பண்ணுறம்.." என்றபடி அவர்கள் இருவரும் அந்த இடத்தை விட்டுப் போனார்கள்.

"கவனம் செவ்வந்தி... சிரிச்சப் பேசினியெண்டால் மேய்ஞ்சிடுவாங்கள்..." சங்கரனும் எச்சரிக்கை செய்துவிட்டு போனான்.

மனத்தின் கிலேசம் ஒரு வினாடி என்றாலும் சங்கரனின் ஆறுதல் அவளுக்கு அமுதமாய் இனித்தது.

தேனீர் வியாபாரத்தில் காலைச் சஞ்சலங்கள் எல்லாம் அவளுக்கு மறந்து போக மீண்டும் கலகலப்பானாள்.

கடை திறக்கும் வரை செவ்வந்தி குடோனில் வைத்து தேனீர் ஊற்றி விற்கின்றாள் என்ற செய்தி கடைக்காரனின் காதுக்கு எட்டினாலும் சங்கரனுக்குப் பயந்து அவனால் ஏதும் செய்ய முடியவில்லை. நகர சபைச் சட்டத்தின்படி ஆறுமணிக்குத்தான் கடை திறக்க முடியும் என்றாலும்; ஏதோ ஒருவகையில் செவ்வந்தியின் வியாபாரத்துக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என மனம் கறுவியது.

***

அடுத்து சந்தை கூடும் சனிக்கிழமை வந்தது - அடுத்த நாள் பொங்கல் வேறு.

சந்தை அதிகாலையிலேயே நன்கு சூடு பிடிக்கத் தொடங்கி விட்டது.

கனகம்மா வழமையான தனது மரக்கறி வியாபாரத்துடன் பொங்கல் பானைக்கு கட்டும் மஞ்சள் - இஞ்சி இலையும் கரும்பும் வேண்டி பரப்பியிருந்தாள். எனவே செவ்வந்திக்கு பெரிதாக உதவ முடியவில்லை.

செவ்வந்தியே தனித்து அவசர அவசரமாக குடோனில் தேநீருக்கு தண்ணியை சூடாக்கிக் கொண்டிருந்தாள்.

குடோன் கதவு மெதுவாக திறப்பது தெரிந்தது - வெளியிருந்து வரும் வெளிச்சம் அவளுக்கு அதைச் சொன்னது.

ஒரு ஆமிக்காரன் நின்றிருந்தான்.

அவளுக்கு "திக்" என்றது.

"தே..த்..தண்ணி இன்னும்
மு...டி...யே...ல்...லை" விக்கினாள்.

"என்ன.. நீ பெர்மிஷன் இல்லாமல் தேத்தண்ணி விக்கிறியாம்"

பதில் சொல்லத் தெரியாது விறைத்து நின்றாள்.

குடோனின் கதவை உள்ளே நின்றவாறு அவன் சாத்தினான்.

அவள் வெளியே ஓட முயற்சித்த பொழுது அவனின் இரும்புக் கைகள் அவளைக் கெட்டியாகப் பிடித்தது.

சலசலப்பில் குடோனினுள் இருந்த எலிகள் அங்குமிங்கும் ஓடின.

சில நிமிடப் போராட்டங்கள் தான்...

அனைத்தும் முடிந்து விட்டது.

"குட்டி... எங்களையும் இடைக்கிடை கவனிச்சுக் கொள்ளு... உன்ரை வியாபாரம் நல்லாய் நடக்கும்..." தக்கித் தக்கி தமிழில் சொன்னவாறே துப்பாக்கியை தோளில் எடுத்துப் போட்டுக் கொண்டு வெளியேறினான்.

போகும் பொழுது மீண்டும் குடோன் கதவை மூடி விட்டுப் போனான்.

அவள் எழுந்திருக்க மனமில்லாது பிரமை பிடித்தவள் போல் அமர்ந்திருந்தாள்.

அடுப்பில் தண்ணீர் கொதித்துக் கொண்டு இருந்தது.

எல்லாம் கனவு போல இருந்தது...

ஒரு சில நொடிகளுள் எல்லாமே நடந்து போயிற்று...

மீண்டும் வெளியில் ஆளவரவம் கேட்டது.

பதட்டப்பட்டு தனது பாவாடையை சரி செய்ய முன் குடோன் கதவு மெதுவாகத் திறந்தது.

சங்கரன் உள்ளே வந்தான்.

அவனைக் கண்டதும் "அண்ணை" என பெருங்குரல் எடுத்துக் கத்தத் தொடங்கினாள்.

அவனுக்கு எல்லாமே விளங்கி விட்டது.

"உதுலை போற ஆமிக்காரனா" என கிட்டவாக வந்தான்.

ஆமாம் எனத் தலையாட்டி விட்டு அவன் கைகளைப் பற்றிக் கொண்டு அழத் தொடங்கினாள்.

"பயப்பிடததை.. பயப்பிடாதை... அவங்களை நான் பார்த்துக் கொள்ளுறன்"

அவள் இன்னமும் அழுதாள்.

"சத்தம் போட்டு ஊரைக் கூப்பிடாதை" என ஆதரவாக அவள் தோளை அணைத்தான்.

"அண்ணை நான் தேத்தண்ணி வைக்க வந்தனான்... அவன் தான்..."

"பயப்பிடாதை... பயப்பிடாதை..."

அவன் கைகள் அவளது கண்ணீரைத் துடைத்தன.

அவள் தொடர்ந்து விம்மினாள்.

தோளில் இருந்த அவனது கை அவளின் மார்புப் பகுதியை நோக்கி இறங்கியது.

"அண்ணை?..."

அவளாள் மீண்டும் திமிற உடலிலும் மனத்திலும் வலிமை இருக்கவில்லை.

ஆனாலும் முயற்சித்தாள்.

முடியவில்லை. கண்கள் சொருகியது மாதிரி ஓர் உணர்வு...

அவளது தலை விறைத்துக் கொண்டு வந்தது.

சந்தையின் பின்புறத்தில் கட்டாக்காலி ஆண் நாய்கள் ஒரு பெட்டை நாயைத் துரத்திக் கொண்டு இருந்தன.

எல்லாம் முடிந்த பின்பு எழுந்த சங்கரன் கலைந்திருந்த உடையினூடே அவளின் தேகத்தை மீண்டும் பார்த்தான்.

"இன்னும் உங்களுக்கு என்ன வேணும்" அந்த அதிகாலை இரவில் அவளின் அவல ஒலி குடோனின் சுவர்களில் பட்டுத் தெறித்தது.

இரண்டு கைகளாலும் தலைகளில் அடித்துக் கொண்டாள்.

அரிசியைக் கொறித்துக் கொண்டிருந்த இரண்டொரு எலிகள் சாக்குகளுக்கு பின்னால் அமைந்திருந்த தம் பொந்துகளுள் "கீச்"சசு "கீச்"சுக் கொன்று ஒலி எழுப்பியபடி போய் ஒழிந்து கொண்டன.

காறித்துப்பியபடி அவன் எதுவுமே பேசாமல் வெளியேறினான்.

திகைப்பு விடுபடாத நிலையில் அழுதபடி கலைந்திருந்த பாவாடையை அவள் சரிசெய்தாள்.

கையில் ஏதொ ஒன்று ஒட்டியது போல இருந்தது.

அவளுக்கு குமட்டல் எடுத்தது.

***

அடுத்த நாளிலிருந்து தங்கம்மாவையும் செவ்வந்தியையும் சந்தைப் பக்கம் காணவில்லை.

கிளிநொச்சிப் பக்கம் இடம் பெயர்ந்து போய் விட்டார்கள் என சந்தையடியில் பேசிக் கொண்டார்கள்.

ஆமிக்காரனுடன் ஓடிப் போய்விட்டதாயும் பேசிக் கொண்டார்கள்.

தேநீர்கடைக்காரனுக்கு மீண்டும் வியாபாரம் சூடு பிடித்திருப்பது குறித்து சந்தோசம்.

"ஐக்கிய இலங்கையில் இரண்டு இனங்களும் ஒற்றுமையாக...." என தேனீர்கடை வானொலிப் பெட்டி செய்தி வாசித்திக் கொண்டு இருக்கிறது.

கிழமைச் சீட்டு நடாத்தியவனுக்கும் செவ்வந்தி தன் காசை வேண்டாது போனது குறித்து மிகவும் மகிழ்வாய் இருக்கின்றான்.


வெற்றிலையும் பாக்குச் சீவலும் விற்கும் சிவதம்புக் கிழவனின் கண்கள் காய்ந்து போய் இருக்கின்றது.

சங்கரன் பீடியை வலித்தவாறு கக்கத்தில் வரிப்புத்தகத்தை கக்கத்துள் வைத்துக் கொண்டு மதிலில் குந்திக் கொண்டு இருக்கின்றான்.

கடைக்காரப் பையன் தேனீரைக் கொடுத்து விட்டுப் போகின்றான்.

ஆமி சந்தையின் நாலு மூலையிலும் இருவர் இருவராய் காவலுக்கு நிற்கிறார்கள்.

பொங்கல் முடிந்தாலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில வெடிகளின் சத்தம் கேட்டுக் கொண்டுதான் இருக்கின்றது.




# "I know" "I know" "I know"

"டேய்.... நீ தொண்ணூற்று ரண்டில தான் வில்லன்! நான் எண்பத்துரண்டில இருந்தே வில்லன்" என்று ரகுவரன் பேசும் வசனமொன்று "தயா" திரைப் படத்தில் இடம்பெறுகிறது. இயல்பான தகுநயத்தோடு தலைக்குப்பின்னால் கைகளைக்கட்டியபடி பிரகாஷ் ராஜ்ஜைப் பார்த்துச் சொல்லுவார். 1982 ஆம் ஆண்டிலே தான் ரகுவரனின் "ஏழாவது மனிதன்" வெளிவந்து வணிக ரீதியான தோல்வியை எதிர் கொண்டது. அற்புதமான நடிப்பாற்றலை வெளிப்படுத்தி யிருந்தார். ரஷ்ய திரைப்பட விழாவில் விருது பெற்ற போதும், தமிழ் நாட்டின் தொழுகைக்குரிய பிரதிமைகள் மத்தியில் ஏழாவது மனிதனை முன்னிறுத்த முடிய வில்லை.





கோயம்புத்தூர் உணவக நடத்துநரின் மூத்த மகனான ரகுவரன், B.A வரலாறு கற்ற காலத்தில் ஹிட்லர் முதலிய மாறுபட்ட மனிதர்களின் வாழ்க்கை ஈர்ப்பினை ஏற்படுத்த, வெகுமக்கள் மத்தியில் பிரபல்யம் பெறும் பொருட்டு திரைப்படக்கல்லூரியில் நுழைந்தார். இறுதி வருடக்கற்கையின் போது "ஏழாவது மனிதன்" வாய்ப்பு அமைந்தது. தொடர்ந்து "ஒரு ஓடை நதியாகின்றது" படத்திலும் நடிப்பின் உன்னத தருணங்களைப்பதிவு செய்தார். நாயக அந்தஸ்தைத் தக்க வைக்க வேண்டுமென்ற வறட்டுப்பிடிவாதம் துளியும் இல்லாததால் நண்பர்கள் தடுத்த போதும் - தானே விரும்பிச்சென்று "சில்க் சில்க் சில்க்" படத்திலே நடித்தார். நாயகன், எதிர்நாயகன் என இருவழிகளில் பயணித்தும் ஜெயதேவியின் அருட்கடாட்சம் முரண்டுபிடிக்க, தற்காலிக மீட்சிக்காக போதைப் பழக்கத்தினை நாடினார். "நினைக்கக் கூடாத ததை நினைத்தேன், செய்யக்கூடாததை செய்தேன்" என தொலைக்காட்சி நேர்காணலில் மனந் திறந்த தருணத்தில் சுயகாழ்ப்பிணை முகத்தில் காண முடிந்தது.




நடிகர் சத்தியராஜ் நாயகனாக களமிறங்கிய தமிழ்திரையுலகில் வில்லனுக்கான வெற்றிடமொன்று அகலவிரிந்தது. ரகுவரன் இரண்டாங்கட்ட ஆட்டத் தினை ஆரம்பித்தார். "பூவிழி வாசலிலே" படத்தில் வெகு இயல் பான முறையிலே வில்லத்தனத்தை வெளிப்படுத்தினார். அதீத ஒப்பனை, கொடூர மீசை, அதிரும் உறுமல்களோடு "வில்லன்"களைப்பார்த்த திரைச்சுவைஞர்களுக்கு வசீகரமான தோற்றத்துடன் எளிமையாகத் தோன்றிய ரகுவரன் அதிர்வினை ஏற்படுத்தினார். "உதயம்", "புரியாத புதிர்" போன்ற படங்களிலும் கவனிப்புக்குரிய தோற்றத்தினைத் தேர்ந்தெடுத்தார். புரியாத புதிரில் "I know" என்பதை தொடர்ச்சியாக இருபத்தேழு தடவை குரல் ஏற்ற இறக்கத்தில் பன்முக உணர்ச்சிகளின் பாவத்தில் பேசி, நடிப்பிலே புதிய பரிமாணத்தை வெளிப்படுத்தினார். ஒரு சொல்லைப் பன்முறை உச்சரித்தல், சுட்டுவிரலை அதிகமாகப்பயன்படுத்துதல், உதடுகளை உள்ளீர்த்தல், கண்களால் உணர்ச்சிகளை வெளிப்படுத்தல் போன்றன ரகுவரனின் தனித்துவமான பாணியாக மாறின. இயக்குனர் மணிரத்னத்தின் "அஞ்சலி" திரைப்படத்தில் மையநாயகனாகத் தோன்றி அலாதியான அளிக்கையினைப் பதிவுசெய்தார். எனினும் வெற்றியின் சாண் ஏறிய தருணங்களில் போதைப்பழக்கம் முழம் சறுக்கச் செய்தது. படப்பிடிப்பு ஒன்றிலே "சீலிங்கிளாஸ்" (சினிமாவுக்காக பயன் படுத்தப்படும் போலிக்கண்ணாடி) இல்லாத சந்தர்ப்பத்தில் நிஜக்கண்ணாடியை உடைத்து காயமடைய, போதை வெறியில் உடைத்தாக ஊடகங்கள் செய்தி வெளியிட வாய்ப்புக்கள்


இ.சு.முரளிதரன்

# "I know" "I know" ரகுவரன்



மறுபடியும் குறைவடைந்தன.

ஆன்மீகத்தின் பாதையிலே மனதைச்செலுத்திபோதையிலிருந்து விடுதலை பெற்று "காதலன்" திரைப்படத்தினூடாக மூன்றாம் கட்ட ஆட்டத்தினை ஆரம்பித்தார். காதலனில் வைக்கோற்போரின் பின்னிருந்து பிடரி மயிரைக்கோதியபடி வெளிப்படும் "மல்லிகார்ச்சுனா" கதாபாத்திரத்திற்கு வழங்கப்படும் பின்னணி இசையின் அதிர்வுக்கு சமாந்தரமான நடிப்பினை வெளிப்படுத்தி மிகப்பெரிய ஈர்ப்பினை கட்டமைத்தார். ரஜனிகாந்தின் சினிமாப் பயணத்தில் ரகுவரனின் வகிபாகம் குறிப்பிடத்தக்கது. "பாட்ஷா" படத்தில் நடிகர் தேவன் பத்திரிகையினைக் கீழிறக்க புதராக வளர்ந்த தாடிக்குள்ளே புதைந்த முகத்தினை பக்கவாட்டிலே சரித்தவாறு ரகுவரன் அமர்ந்திருக்கும் உடல் மொழியை வேறொரு நடிகர் நெருங்கமுடியுமா? என்பது சந்தேகமே! அப்படத்தில் அதீத அண்மைக்காட்சி ஒன்றிலே விழிகளுக்குள் உணர்ச்சி களைத் தேக்கியவாறு ஆசனத்திலிருந்தவாறே பார்வையாளரை நோக்கித் திரும்புவது அழகான கவிதை!



கமல்ஹாசனும் ரகுவரனும் இணைந்து நடித்ததில்லை சகபோட்டி யாளரின் தீவிர விசுவாசி என்பதால் முற்பாதியில் தவிர்த்திருக்கலாம். பிற்காலத்தில் ரஜனி - கமலின் "பனிப்போர்" முற்றுப்பெற்றாலும் ரகுவரன் ரோஹிணியிடம் விவகாரத்துப்பெற்றமை இருவரது இணைவிற்கும் தடையாக அமைந்திருக்கும்! கமல்ஹாசன் ரோஹிணியோடு நெருக்கமான நட்பை பேணிவருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

"ஏழாவது மனிதன்", "ஒரு ஓடை நதியாகிறது", "நீ தொடும் போது", "மைக்கேல்ராஜ்", "கூட்டுப்புழுக்கள்", "குற்றவாளி", "என்வழி தனிவழி" எனப்பல படங்களில் கதாநாயகனாகத் தோன்றினாலும் "வில்லன்" ரகுவரனே சராசரி ரசிகர்களைப் பெரிதும் ஈர்த்தார். யாழ்.பல்கலைக்கழகத்தில் நான் மாணவனாக இருந்த காலத்தில், பலர் ரகுவரனின் ரசிகர்களாக இருப்பதை அவதானித்தேன். "அபிமன்யூ" திரைப்படத்தில் வேட்டியை தொடை நடுவே மேலொதுக்குங் காட்சி அக்காலத்தில் மாணவர்களிடையே பெருவரவேற் பினைப் பெற்றிருந்தது. தெலுங்கு, கன்னடம், ஹிந்தி, மலையாளம் போன்ற மொழிகளிலும் ரகுவரன் நடித்துள்ளார். "தெய்வத்திந்த விக்ரிதைகள்" மலையாளப்படத்தில் "அல்பொன்ஸா" பாத்திரத்தில் அற்புதமாக நடித் துள்ளார். உளவியற் சிக்கல் நிறைந்த பாத்திரத்தினை பல படங்களில் ஏற்றதால் தேய்நடிப்பும், மிகையான வெளிப்படும் சில தருணங்களில் வெளிபட்டதுண்டு. "முதல்வன்" திரைப்பட இறுதிக்காட்சியில் தலைமைச்செயலகத்தை ஏக்கத் தோடு பார்த்து படிகளில் ஏறும் உடல்மொழியும் விதந்துரைக்கத்தக்கது. ஆசிரியர்கள் கற்பித்த போதும் பல குறட்பாக்கள் மறந்துவிடுவதுண்டு.




"அகலாது அணுகாது தீய்க்காய்வார் போல
இகல் வேந்தர் சேர்ந்தொழுகுவார்"

என்று "முதல்வன்" திரைப்படத்திலே ரகுவரன், "கருணாநிதியின்" விம்பத்தை உள்ளெடுக்க உச்சரிக்கும் குறட்பா என் நண்பர்கள் பலருக்கு இன்றுவரை ஞாபகத்தில் இருக்கிறது. ரகுவரன் இன்று நம்மிடையே இல்லையென்றாலும் - எதிர்நாயகர்களைத்தமிழ்த்திரையுலகம் வீணடித்துக் கொண்டிருப்பதால் - எந்த வில்லன் நடிகரும் முந்திச்செல்லமுடியாத விம்பமாகத்திகழ்வார் என நம்பிக்கை கொள்ளலாம்.

# அடைய முடியாத அழைப்பு

ஷெல்லிதாசன்



மதிய உணவுக்காக அலுவலகத்திலிருந்து வீட்டுக்கு வரும் மாதவன், நேரடியாகவே குளியலறைக்குச் சென்று கை, கால் முகங்கழுவி விட்டே சாப்பாட்டு மேசைக்கு வருவான்.

ஆனால் அன்றைய தினம் வழக்கத்துக்கு மாறாக, மதிய உணவுக்காக வந்த அவன், எங்கேயும் செல்லாமல் நேரே படுக்கை அறைக்குள் நுழைந்து கதவை மூடிக் கொண்டு படுக்கையில் குப்புற தொப்பென விழுந்து படுத்துக் கொண்டான்.

சமையல் வேலைகளை முடித்து, பிள்ளைகளை குளிக்கவாத்து, உடுப்பு துணிமணிகளை அலம்பிப்போட்டு, தானும் குளித்து அலங்கரித்துக் கொண்டு வந்த மாதவனின் மனைவி மஞ்சு, தனது கணவனுக்காக மேசையில் சாப்பாட்டை போட்டு வைத்துவிட்டு, பிள்ளைகளுக்கு உணவை ஊட்டியபடி அவனுக்காக காத்திருந்தாள்.

வெகு நேரமாயும் மாதவன் வருவதை காணாத மஞ்சு, எங்கும் தேடி விட்டு இறுதியில் மூடிக்கிடந்த படுக்கையறைக் கதவைத் திறந்து உள்ளே பார்வையை செலுத்தினாள். அங்கே படுக்கையில் குப்புறப்படுத்திருந்தான் மாதவன்.

“என்ன நடந்தது, ஏதாவது சுகவீனமோ” என மனதுக்குள் கேள்வியை கேட்டபடி மஞ்சு “என்னப்பா சாப்பிட வந்தநீங்கள் ஏன் படுக்கையிலை விழுந்து குப்புறக்கிடக்கிறியள் என்ன பிரச்சினை? என அருகில் வந்து கணவனின்

முதுகைத் தட்டி எழுப்பிய மனைவி மஞ்சுவை, தனது தலையை சற்றுத் திரும்பியபடி பார்த்த அவன், எதுவுமே கதைக்காமல் மௌனம் சாதித்தான்.

"என்னப்பா நான் கேக்கிறன் உம்மெண்டு பிடிச்சுக்கொண்டிருக்கிறியள். என்ன முகமெல்லாம் வாடிக் கிடக்குது... என்னப்பா நடந்தது உங்களுக்கு?"

"மஞ்சு... வாற மாதத்திலையிருந்து எனக்கு இட மாற்றமெல்லே திடீரென்று வந்திருக்கு... அது தான்"

"இடமாற்றமோ எங்கையாம்..." ஆச்சரியத் துடன் கேட்டாள் மஞ்சு

"தம்பிலுவிலுக்கு" என குரலை தணித்து பதில் சொன்னான் மாதவன்

"என்னப்பா மட்டக்களப்புக்கங்காலை வெகு தூரம் தம்பிலுவில் அங்கையே"

"ஓமப்பா..."

"நீங்கள் அங்கை போனா நான் இந்த ரெண்டு பிள்ளையளையும் வைச்சுக்கொண்டு தனிய இருக் கேலுமே.. இங்கை கிட்டவா வீடுகளுமில்லை... இரவிலை பயம்வேறை"

"அதுதானப்பா... உம்மையும் பிள்ளையளையும் நினைச்சாத்தான்... என்ன செய்யிறதெண்டு தெரியேல்லை"

"அதுசரி முதல்லை சாப்பிட வாங்கோ. சாப் பிட்டிட்டு என்ன செய்யிறதெண்டு முடிவெடுப்பம்..."

ஒரு மாதிரி கணவனைத் தேற்றி சாப்பிட அழைத்துச் சென்றாள் மஞ்சு.

***

மஞ்சுவின் தந்தையும், மாதவனின் தந்தையும் வவுனியாவில் ஒரே கம்பனியில் ஒன்றாக வேலை பார்த்து வந்தார்கள். இருவரது குடும்பமும் ஒரே வீதியில் அருகருகே வசித்து வந்ததால், அவர்களுக்குள் ஒருவகை நெருக்கமான உறவு குடிகொண்டுவிட்டது.

பரஸ்பரம் இரு குடும்பங்களும் உறவாடி வந்ததால் மாதவன் அடிக்கடி மஞ்சுவின் வீட்டுக்குச் சென்று வருவான்.

மஞ்சு அவர்களது குடும்பத்தில் மூத்தவள். மாதவனோ தந்தைக்கு ஒரே மகன்.

மஞ்சுவின் தந்தை ஒரு நாள் வேலைக்கு சைக்கிளில் சென்ற தருணத்தில், திடீரென ஏற்பட்ட விமானக்குண்டு வீச்சில் அகப்பட்டு ஒரு காலை இழக்க நேரிட்டு விட்டது. அதன்பின் அவரால் வேலைக்கு ஒழுங்காகச் செல்ல முடியாது போய்விட்டது. இடை யிலே, தகப்பனார் வேலையை இழந்த காரணத்தால், மஞ்சுவும், அவளது சகோதரங்களும் இனியில்லை யென்ற வறுமை நிலைக்கு தள்ளப்பட்டு விட்டனர்.

ஓ.எல் படித்துக்கொண்டிருந்த மஞ்சு தனது படிப்பைத் தொடரமுடியாது போக, தாயார் தனது நான்கு பிள்ளைகளையும் காப்பாற்ற பெரிதும் துன்பத்தை அனுபவிக்க நேரிட்டது. காலை இழந்த மஞ்சுவின் தகப்பன் தனது இயல்புக்கேற்றவாறு வீட்டுடன் ஒரு கடையைப் போட்டதால், அவர்களது குடும்பம் மூன்று வேளையில்லாவிட்டாலும் ஒரு வேளையாவது கஞ்சியைக் குடித்து பசியை ஆற்றி வந்தது.

அந்த வறுமை நிலையிலும் மஞ்சு, செவ்வந்திப் பூப்போன்ற நிறமும், சிந்தும் பௌர்ணமி நிலவு முகமும் கொண்டவளாய், ஒரு புள்ளி மான் போல துள்ளி துள்ளி வலம் வந்தாள். பருவ எழில் கொஞ்சும் பதுமையாக மஞ்சுவைக் கண்ட மாதவனுக்கோ அவளையே திருமணம் செய்து கொள்ள வேண்டுமெனவும் மனம் அவாவியது.

தனது ஆசையை நாசூக்காக தனது தந்தைக்கு தெரிவித்த மாதவனைப் பார்த்து "தம்பி ...மஞ்சு நல்ல பிள்ளை தான், அவளின்ரை தகப்பனுக்கும் இடையிலை நடந்த துர்ப்பாக்கிய நிலையாலை, அவங்கடை குடும்பமே வறுமையிலை விழுந்து உருக்குலைஞ்சு போச்சு. நீ...மஞ்சுவைக் கட்டினால் அந்தக் குடும்பத் துக்கு ஒரு ஆறுதலாக இருக்கும். ஆனால்...."

"என்னப்பா எல்லாத்தையும் சொல்லிப்போட்டு ஏன் யோசிக்கிறியள்?

"இல்லை தம்பி, கஷ்டப்படுகிற குடும்பத்துக்கை போற நீ உன்ரை சம்பாத்தியத்திலை, சொந்தக் காலிலை நிண்டு மரியாதையா குடும்பம் நடத்த வேணும். அந்தக் குடும்பத்திலை நீ சீதனபாதனம் எதையும் எதிர்பாக் கேலாது"

"உண்மைதானப்பா, நான் கிட்டடியிலை எழுதின தொழில்நுட்ப உத்தியோகத்தர் பரீட்சையிலை நல்லா செய்திருக்கிறன். எனக்கு நம்பிக்கை இருக்கு அந்த வேலை கிடைக்குமெண்டு."

"நீ சொல்லுறது சரி தம்பி. நல்ல மாக்ஸ் வாங்கிறவனே வேலைக்கு எடுபடுறான்? காலைக் கையைப் பிடிச்சு, காசுப்பணத்தைக் குடுத்து பின்கத வாலை போறவங்களுக்குத்தான் இப்ப காலம் மகன்"

"இல்லையப்பா, அப்படியும் நடக்குது தான். இல்லையெண்டு சொல்லேல்லை. ஆனால், திறமையான சிலபேருக்கும் இடம் கிடைக்கத்தான் செய்யுது"

"ஏதோ மகன் உன்ரை நல்ல மனசுக்கு, மஞ்சுவுக்கு அதிஷ்டம் இருந்தால் உனக்கு அந்த வேலை கிடைக்கும். நிச்சயம் உனக்கு வேலை கிடைத்தால் பாவம் மஞ்சுவுக்கு நீ வாழ்க்கை கொடுத்தால் என்ரை நண்பனுக்கு நான் செய்த உபகாரமாயுமிருக்கும், அந்தக் குடும்பமும் வாழும் தம்பி"

என்று தனது மனக்கிடைக்கையை மகன் முன்னே வைத்தார் மாதவனின் தந்தை. அவன் நினைத்தது போல் அந்த வேலையும் அவனுக்குக் கிடைத்ததால், மனம் போல மஞ்சுவை மணம் செய்து கொண்டு, தான் நியமனம் பெற்ற திருகோணமலை கட்டிடத் திணைக்களத்தில் ஒரு தொழில்நுட்ப வியலாளராக பதவியும் ஏற்றுக்கொண்டான் மாதவன்.

***

மாதவன் பதவியேற்று ஏழு வருடங்கள் சென்றதன் பின்பே அந்த இடமாற்றம் வந்திருந்தது. மஞ்சுவும் இரண்டு பிள்ளைகளுக்கு தாயாகிவிட்டாள். மூத்தவன் அனுஷனுக்கு ஐந்து வயதாகிவிட்டதால் அடுத்தவருடம் முதலாம் ஆண்டில் கல்வி பயில இந்துக் கல்லூரியில் பலவித போட்டிகளின் மத்தியில் இடம்கிடைத்திருந்தது. இரண்டாவது நாலு வயதாகும்

மகள் அனோஜா. முன்பள்ளியில் அடுத்த வருடத்தி லிருந்து செல்வதற்கு ஆயத்தங்கள் செய்யப்பட்டிருந்தது.

தானிருக்கும் போதே பிள்ளைகளை சமாளிக்க முடியாது அல்லாடும் மனைவி மஞ்சுவை எப்படி தனியே விட்டுவிட்டுச் செல்வது? ஒன்றுமாகப் புரியவில்லை அவனுக்கு. தன்னோடு அழைத்துச் செல்ல முடியாத நிலையில் பிள்ளைகளின் படிப்புக் குழம்பிவிடுமென்ற கவலை வேறு அவனை வாட்டியது.

"என்னப்பா, இப்படியே இருந்து கவலைப் பட்டுக்கொண்டிருந்தா என்ன செய்யிறது? சிந்தனையி லாழ்ந்திருந்த மாதவனை சுயநினைவுக்கு திருப்பினாள் மஞ்சு.

நான் தம்பிலுவிலுக்கு போயேதான் ஆக வேணும். நீர் தான் சமாளிக்க ஏலாமல் தடுமாறப் போறீர். அதுக்கான வழியை நீர்தான் சொல்ல வேணும்" என்றான் மாதவன்.

"என்னப்பா என்ரை தலையிலை போடுறீங்கள். குடும்பத் தலைவன் நீங்கள்தான் ஏதாவது முடிவை எடுங்கோ"

"ஆரும் வேலைகாரப்பிள்ளையை கேட்டுப் பார்ப்போமே மஞ்சு"

"வேலைகாரப் பிள்ளையோ, பத்தாயிரம் ரூபாயும் குடுத்து சாப்பாடு துணி மணி எல்லாம் குடுத்தும் ஒழுங்கா நிக்குங்களோ அதுகள். அதுகளை மேய்க்க என்னாலை ஏலாதப்பா."

"எனக்கும் இருந்த ஒரு அப்பாவும் சிவ சிவா எண்டு போய்ச் சேந்திட்டார். உமக்கு அப்பா, அம்மா சகோதரங்களெண்டாவது இருக்கினம். எனக்கு அம்மாவும் இல்லை சகோதரங்களுமில்லை. ஆற்றை உதவியும் கிடையாது. உம்மடை அம்மாவுக்கு காலே லாத அப்பாவையும், படிக்கிற சகோதரங்களையும் விட்டிட்டு வர ஏலாது. இல்லையெண்டா மனிசி நான் கேட்டா வர மறுக்கமாட்டா. அது சரி மஞ்சு, உம்மடை மூத்த தம்பி ரமணண் ஏ.எல் எடுத்திட்டானே?"

"ஓமப்பா, அவன் கிட்டடியிலை தான் ஏ.எல் எடுத்தவன். இப்ப சும்மாதான் நிக்கிறான் வீட்டிலை"

"அப்ப அவனை கொஞ்ச நாளைக்கு இஞ்சை வந்து இருக்கச் சொல்லுவமே? அவனெண்டா உமக்கு உதவியாயுமிருக்கும். பிள்ளையளை பொறுப்போடு பள்ளியளுக்கு கொண்டே விடுவான்"

"நீங்கள் சொல்லுறது சரிதான் ஆனால்..."

"என்ன அதுவும் உமக்கு விருப்பமில்லையா"

"இல்லையப்பா... அவன் ஒரு சிடுமூஞ்சி தொட்டதுக்கும் பட்டதுக்கும் கோவம் வரும் அவனுக்கு"

அப்படி நீர் அவனுக்கு கோவம் வராமல் பக்குவமா நடந்தாச் சரிதானே. உம்மடை பேச்சுக்களை வாங்கிக் கொண்டு நான் தான் ஒரு மடையன் சும்மா இருக்கிறனென்டா மற்றவையளிட்டை உம்மடை மந்திரமெல்லாம் பலிக்குமே?"

"அதுக்குள்ளை ஒரு பகிடி உங்களுக்கு. உங்கடை கந்தோர் குமரியளோடை பகிடிவிட்டு நக்கலடிக்கிறமாதிரி என்னோடை கதைச்சிங்க ளெண்டா... வேண்டிக் கட்டுவீங்கள்... ஓ" மஞ்சுவின் வார்த்தைகள் சற்றுச் சூடாக விழுந்தது மாதவன் மேல்.

"பாத்தியே பாத்தியே சும்மா ஒரு கதைக்குச் சொன்னா எப்படி வெருட்டுறீர் என்னை போட்டு. உம்மடை குணம் உம்மடை தம்பிக்கும் கொஞ்சமாவது இருக்குந்தானே" எனச் சிரித்தபடி கூறினான் மாதவன்.

சரி.... சரி... கதையை விடுங்கோ அப்ப தம்பியை கேட்டுப்பார்க்கப் போறீங்களே... சனி ஞாயிறு லீவு நாளிலை வவுனியாவுக்கு போட்டு போன கையோட திரும்பி வாங்கோ... இங்கை பிள்ளையளோடை தனிய என்னாலை மாரடிக்கேலாது ... விளங்குதே?"

"அதுக்கேன் எரிஞ்சு விழுகிறீர் மஞ்சு? கொஞ்சம் உம்மடை கோவத்தை குறையும். எப்பபாத்தாலும் சுடுகுது மடியைப்பிடி எண்டுதான் நிக்கிறீர் நீர். அப்ப நீரும் வாருமன் பிள்ளையளோடை ஒருக்கா போய் பாத்திட்டு ரமணனோடையும் கதைச்சு முடிவெடுத் திட்டு வருவம்" என்றான் மாதவன் மஞ்சுவைப் பார்த்து.

ஆனால் மஞ்சுவோ முந்திய மஞ்சுவல்ல இப்போது. ஏழு வருடங்களுக்கு முன் அவளிடமிருந்த கனிவான பேச்சுக்களும், மூத்தவர்களை மட்டுமல்ல, வறுமையால் வாடும் தனது உறவுகள், அயலவர்களை மதித்து அவர்களுடன் அன்பாகப் பழகும் அந்த மனப் பாங்கும் அவளை விட்டகன்று பலவருடங்களாகி விட்டன.

மாதவனைக் கைபிடித்து திருகோணமலைக்கு வந்தவள், அவனுடன் ஒரு சிறிய வாடகை வீட்டிலேயே தனது வாழ்க்கையைத் தொடங்கியிருந்தாள்.

கணவன் நல்ல உத்தியோகத்தில் கைநிறைய சம்பளம் எடுப்பவன் என்ற கர்வம் அவளுக்குள் காலப் போக்கில் குடிகொண்டு விட்டது.

மாதவனுக்கு, அவனது சம்பளத்துக்கு மேலாலை உழைப்பு. கிராம அபிவிருத்திச் சங்கம், விவசாய சங்கம், என்ற பொதுசன அமைப்புக்களை தன்கையில் போட்டு, அவர்களது பெயரில் தானே முதலிட்டு அந்தச் சங்கங்களின் தலைவர் செயலாளர் தனாதிகாரிளுக்கு உரிய கவனிப்புச் செய்து தனது வங்கிக் கணக்கை பெருப்பித்துக் கொண்டான்.

வாடகை வீட்டில், வசதிக்குறைவுடன் இருந்து, அதன் சொந்தக்காரியின் இரவு பகல் முணுமுணுப்புக் கள், நச்சரிப்புக்களைத் தாங்க தன்னால் முடியாதென்ற மனைவி மஞ்சுவின் கரைச்சல் தாங்காமல், விரைவில் உவர்மலையில் ஒரு காணியை வாங்கி, அதில் ஒரு குட்டி மாளிகை போல இரட்டைத்தட்டு வீட்டைக் கட்டிய மாதவன், தனது காரியாலய பணிப்பாளர் ஏனைய நண்பர்கள், ஒப்பந்தக்காரர்கள் எனப் பலரையும் அழைத்து வெகு ஆடம்பரமாக தனது புதுமனை புகு விழாவை கொண்டாடிப் பெருமை கொண்டான். புதுமனை புகு விழாவிற்கு மஞ்சுவின் வீட்டாரையும் அவர்கள் அழைத்திருந்தாலும், மஞ்சுவுக்கு, தனது அப்பா, அம்மா, சகோதரங்கள் அதற்கு வருவதன் மூலம், தனது குடும்பத்தவரின் ஏழ்மைநிலை தன்னைக் காட்டிக் கொடுத்துவிடலாம் என்ற காரணத்தால் அவர்களுக்கு எதுவித முக்கியத்துவங்களும் கொடுக்காது ஏனோ

தானோ என நடந்து கொண்டாள். இதையிட்டு அவர்களுக்கு பெரும் மனந்தாங்கல் ஏற்பட்டாலும், மஞ்சுவின் குடும்பத்துக்குள் தகராறை ஏற்படுத்த விரும்பாது மிக பெருந்தன்மையுடன் அவர்கள் எதனையும் கண்டும் காணாமல் விட்டுவிட்டு, புதுமனை புகுவிழா முடிந்தவுடன் வவுனியாவுக்குப் புறப்பட்டுச்சென்று விட்டனர்.

குடிசை வீடும், குடிக்கவெறும் தேனீரும், படுக்க கிழிந்த பழம் பாயுமாய் என தனது தாய் வீட்டில் காலங்கழித்த மஞ்சுவுக்கு பெருமை பிடிபடவில்லை. கழுத்தில் பாசிமணி மாலையும், கைகளில் றப்பர் வலையல்களும், காதில் இமிற்ரேசன் தோடுமாய் வலம் வந்த மஞ்சுவின் கழுத்தில் இப்பொழுது காளி கோயில் தேரின் வடம் போல தங்கத் தாலிக்கொடியும் முத்துச் சங்கிலிகளும் டாலடித்தன.

கைகளில் நாலைந்து சோடி பவுண் வளையல்கள், காதில் வைரத்தோடு, மூக்கில் மதுரை மீனாட்சியை நினைவுறுத்தும் சிவப்புக் கல் மூக்குத்தி, சரசரக்கும் காஞ்சிபுரம் பட்டு என அணிந்து நடுஉச்சி பிறித்து வாரி முடித்த கொண்டையில், எவகிறீன் இலையுடன் சிவப்பு ரோஜாப்பூவையும் சரிவாகக் குத்தி, நெற்றியிலும், உச்சி வகிடின் முன்புறமும் குங்குமத்தை வைத்து கல்யாணம், காட்சி, கோயில் திருவிழாக்களுக்கு மஞ்சு புறப்பட்டு சென்றாளானால், தற்கால மெகா தொடர்களில் வரும் கதாநாயகி வில்லிகள் போல அப்படி அபாரமாக அவள் காட்சி தருவாள்.

இப்படியெல்லாம் தன்னை மறந்து மூழ்கித் திளைக்கும் மஞ்சுவுக்கு இப்பொழுது தாய்வீடென்பது மிதிக்கக்கூடாத ஒருசேரியைப் போல ஆகிவிட்ட தென்றால் அதிலேதும் வியப்பில்லை.

“அப்பா நானெண்டால் அங்கை வரேல்லை....நீங்கள் போறெண்டாப் போங்கோ”

அதற்கு அப்பால் அவள் தனது மனக் கிடக்கை களை சொல்லவிரும்பாதது அறிந்த மாதவன்,

“சரி உமக்கு வர விருப்பமில்லையென்டால் நான் போய் ரமணனை கூட்டிக்கொண்டு வாறன் சரிதானே” என்று சொல்லி, வவுனியாவுக்கு ஒரு லீவு நாளாய் பார்த்துப் புறப்பட்டான்.

அக்கா மஞ்சுவின் அலட்சியப் போக்கை அறிந்திருந்தும், அத்தானின் சொல்லைத் தட்டமுடியாத ரமணன், தனது அக்காவை எதுவித சீதனமும் வாங்காது கைபிடித்து தமது குடும்பத்துக்கு ஆறுதலளித்த நன்றியை மறக்க முடியாத நிர்ப்பந்தத்தில் மறுப்பு ஏதும் தெரிவிக்காது, அத்தான்காரனுடன் திருகோண மலைக்கு வந்து சேர்ந்தான்.

***

மாதவன் இடமாற்றம் பெற்றுச் சென்று ஆறுமாதங்களுக்கு மேலாகிவிட்டது. அக்காவின் பிள்ளைகளை பள்ளிக்கும், முன்பள்ளிக்கும் கொண்டு போய் தினமும் விட்டுவிட்டு, மீண்டும் கூட்டிவருதல், கடைகண்ணிக்கு போய்வருதல், சந்தைக்குப் போய் அக்காவின் பிள்ளைகளுக்கு பிடித்தமான மீன், மரக்கறிகளை வாங்கி வந்து அவற்றை வெட்டிக் கொடுத்து தனது அக்காவுக்கு மிகுந்த உதவியாக இருந்தான் ரமணன். அதுமட்டுமல்ல திருகோணமலை தொழில்நுட்பக் கல்லூரியில் பகுதிநேர சிவில் எஞ்சினியரிங் பாடநெறிக்கு விண்ணப்பித்து அதற்கான அனுமதியும் அவனுக்கு கிடைத்திருந்தது. சனி ஞாயிற்றுக் கிழமைகளில் தனது படிப்பையும் மேற்கொண்டு, வறுமை நிலையில் வாழும், தனது பெற்றோர், சகோதரங்களை நினைத்துக் கவனமாகப் படித்தும் வந்தான்.

***

“ரமணன் மாமா ... உங்களை ஆரோ தேடிவந்து கேற்றடியிலை நிக்கினம்”என மஞ்சுவின் மூத்த மகன் மாமனை அழைத்தான்.

தனது அறைக்குள்ளே இருந்து அந்த மாலை வேளையில் படிப்பில் கவனம் செலுத்திக்கொண்டிருந்த ரமணன் வெளியே வந்து எட்டிப் பார்த்தான்.

“டேய் பாரதி... வா... வா உள்ளை வாடா”

அங்கு ரமணனுடன் சிறுவயது முதல் வவுனியாவில் ஏ.எல் வரை ஒரே கல்லூரியில் கல்வி பயின்ற நண்பனான பாரதியை கண்டதும் மகிழ்வுடன் அழைத்தான் அவன்.

ஒரு சிறிய ரவலிங் பாக்குடன் உள்நுழைந்த நண்பனை, தனக்கான பிரத்தியேக அறைக்கு ரமணன் அழைத்துச்சென்றான்.

“மச்சான் உங்கடை வீட்டைக் கண்டு பிடிக்கிறதுக்கிடையிலை களைச்சுப் போனன். பஸ்ராண்ரிலை பஸ்சை விட்டு இறங்கின நான், பொடி நடையா ஒரு மாதிரி தேடிக்கீடி உங்கடை வீட்டை வந்தது பெரிய விசயம் ரமணன். இதுக்கு முந்தி நான் திருகோணமலைக்கு வந்தது கிடையாது அதுதான் பெரிய கரைச்சல் பட்டுப் போனன்”

என்றான் பாரதி தனது நெற்றியால் வழிந்த வியர்வையை கைக்குட்டையால் துடைத்தபடி.

“நீ இந்த உவர்மலை சந்தியிலை இறங்கி யிருந்தால் நேரை இங்க வந்திருக்கலாமே.. அப்படி வந்திருந்தா நான் வந்து நிண்டிருப்பன், ஓ என்ற போன் நம்பரும் உன்னட்டை இல்லை அதுதான் வந்த பிரச்சினை”

என்ற ரமணன், மீண்டும் தனது கதையைத் தொடர்ந்தான்.

“அது சரியடா என்ன அவசரப்பட்டு திடீரெண்டு இஞ்சை”

“அது மச்சான், நான் ஸ்ருடன் விசாவிலை வாறமாதம் லண்டன் போக இருக்கிறன். அதோடை எங்கடை பெரியம்மா பாலையூத்திலை இருக்கிறா... உன்னோடை போய் அவவையும் சந்திச்சுப் போட்டு போவமெண்டு வந்தனான்”

“என்ன ஸ்ருடன் விசாவிலை போப்போறியோ. நான் வவுனியாவுக்கு வந்தால் சந்திக்கக் கூடிய ஒருதன் நீ தான் மச்சான். எவ்வளவு நட்போடை உயிருக்குயிரா பழகினனாங்கள். காலம் என்னைப் பிரிச்சு, கடைசியிலை உன்னையும் பிரிச்சு விட்டுதடா. இனி என்ன தான் செய்ய? மாற்றமில்லாத உலகமுமில்லை, வாழ்க்கையு மில்லை” எனப் பெருமூச்சுவிட்டபடி தனது ஆதங்கத்தை

வெளிப்படுத்தினான் ரமணன். இதற்கிடையில், தமது நட்பை தொடர்ந்து பேணும் பொருட்டு, தமது தொலைபேசி இலக்கங்களை பரஸ்பரம் பதிவு செய்து கொண்டனர்.

இருவரது உரையாடலும் இப்படி தொடர்ந்து கொண்டிருந்த வேளை,

"ரமணன் மாமா... சாப்பாட்டு மேசையிலை தேத்தண்ணி வைச்சிருக்கு உங்களை எடுக்கட்டாம் எண்டு அம்மா சொன்னவ"

என அவசரமாக அறைக்குள் நுழைந்த மஞ்சுவின் மூத்த மகன் பலமாக கத்திவிட்டு ஒரே ஓட்டமாக வெளியே ஓடினான்.

"இரு மச்சான் தேத்தண்ணி குடிச்சிட்டு போவம்... நல்லாக் களைச்சுப் போனாய்"

எனக் கூறிய ரமணன், சாப்பாட்டு அறைக்குள் நுழைந்து, மேசையில் வைக்கப்பட்டிருக்கும் தேனீரை எடுக்கச் சென்றான்.

அங்கே அவன் வழமையாக தேனீர் பருகும் மாபிள் கோப்பையில் மாத்திரம் தேனீர் ஊற்றி வைக்கப் பட்டிருந்தது. "ஒரு கப் தேனீரை என்ன செய்வது?" என நினைத்த ரமணன் சமையலறையில் நின்று வேலை செய்து கொண்டிருந்த அக்கா மஞ்சுவை நாடி,

"அக்கா, வவுனியாவிலை இருந்து பாரதி யல்லே வந்திருக்கிறான். என்னோடை படிச்சவன், உங்களுக்கும் தெரியும் அவனை நல்லா. பாவம் இப்ப தான் களைச்சு விழுந்து பஸ்சாலை வாறான். அவனுக்கு ஒரு தேத்தண்ணி வேணுமக்கா. போட்டுவைச்சிட்டுக் கூப்பிடுங்கோ நான் வந்து எடுத்திட்டு போறன்" என அக்காவிடம் பரிவாகக் கூறிவிட்டு நண்பன் இருந்த அறைக்குள் நுழைந்த ரமணன் நண்பனிடம் கதையை தொடர்ந்தான்.

"மச்சான்... பாரதி... எப்பிடி மச்சான் உன்ரை அப்பா, அம்மா, சகோதரங்கள் சுகமா இருக்கினமே"

"ஓம் மச்சான் சுகமா இருக்கினம். அக்காவுக்கு முப்பது வயது நெருங்கப்போகுது, கலியாணம் தான் தள்ளிப் போகுது. வாறவங்கலெல்லாம் வீடு வளவு காசெண்டு கேட்டா என்ன செய்யிறது. அப்பாவுக்கும் இப்ப ஏலாது. தம்பி தங்கையளின்ர படிப்பு வேறை. இப்பவும் அம்மா கடையப்பம்தான் செய்து கடை யளுக்கு குடுத்துவாறா. அதுதான் மச்சான் பாலையூத் திலை இருக்கிற பெரியம்மாவிட்ட வட்டிக்கு காசு வாங்கி ஸ்ருடன் விசாவிலை போய் அங்கை மாறி நிண்டு உழைச்சு வீட்டுக்கு அனுப்பலாமெண்டு யோசிக்கிறன்" எனச் சொன்ன தனது நண்பனின் ஆறாத கவலையை கேட்ட ரமணனுக்கு தனது நிலை பரவாயில்லை போல தெரிந்தது.


நீண்ட நேரமாகியும் அக்காவிடமிருந்து இன்னொரு தேனீருக்கான அழைப்பு இன்னும் வர வில்லையே என்ற காரணத்தால், மீண்டும் அக்காவை பார்க்க சமையலறைக்குள் சென்றான் ரமணன். அங்கே அக்காவை காணவில்லை. அக்கா தனது படுக்கை அறைக்குள் கணனி முன் அமர்ந்து ஸ்கைப்பிலை தனது வெளிநாட்டு நண்பியுடன் சிரித்துக் கதைத்தபடி இருந்தாள்.

"அக்கா, தேத்தண்ணி ஊத்தியாச்சே எங்கை வைச்சிருக்கிறியள்" ரமணன் அக்காவை பார்த்து பணிவாகக் கேட்டான்.

ஆனால் அக்கா மஞ்சு அதையெல்லாம் காதில் வாங்காது ஸ்கைப்பில் கதைத்தபடி இருந்தாள்.

"அக்கா நான் கேக்கிறன் ஒண்டும் சொல்லாமல் பேசாமல் இருக்கிறியள்" அக்காவைப் பார்த்து பலமாக வினவினான் அவன்.

"ரமணன் என்னை டிஸ்ரப்பண்ணாதை, உனக்கு தேத்தண்ணி வைச்சிருக்கு அதை எடுத்து நீ குடி. வருகிற போறவங்களுக்கெல்லாம் என்னாலை தேத்தண்ணி



சாப்பாடெண்டு குடுக்கேலாது. நாங்களென்ன சத்திரமே வச்சிருக்கிறம். உன்ரை சினேகிதன் பாரதி, அந்தக் கடை யப்பம் செய்து விக்கிற தங்கம்மான்ரை மகன் தானே. உனக்கு பிச்சைக்காறரோடை தான் சிநேகிதம் பிடிக்கத் தெரியும். உன்ரை அத்தானை பாத்தியே, சாதாரணமா யிருந்தவர் ஆராரையோ கைக்குள்ளை போட்டு இப்ப மாளிகை போல வீட்டை கட்டிட்டார். இப்ப நான் ராசாத்திபோல இருக்கிறன். என்னைப் பாத்து தேத்தண்ணி போடு எண்டு சொல்லுறதுக்கு உனக்கு மனம் வருதே"

எனப் பலமாக கத்தி ஆர்ப்பரித்தாள் மஞ்சு தனது தம்பி ரமணனைப் பார்த்து.

ரமணனுக்கு அக்காவின் அகங்கார வார்த்தை களைக் கேட்டுத் தலைவிறைத்தது. எப்படி இருந்த அக்காவை பணம் எப்படியெல்லாம் மாற்றி பந்தாடி விட்டதென நினைக்க மிகவும் மன வேதனையாக இருந்தது அவனுக்கு.

அக்காவுக்கு ஏதேனும் கதைக்க வேணுமென மனம் உந்திய ரமணுக்கு, தான் ஏதாவது கதைத்தால் அத்தானிடம் ஒன்றுக்கு இரண்டாகக் கதைத்து வீண் பிரச்சினைகளை உண்டு பண்ணி விடலாமென எண்ணியவன் மௌனமாக, ஏதும் செய்யத்தோன்றாது,

அங்கிருந்த ஜன்னல் வழியாக வெளியே பார்வையை செலுத்தினான். அந்திமாலை அவசரமாய் மறைய, பூமி மெல்ல மெல்ல இருளின் பிடியில் வீழ்ந்து கொண்டிருந்தது.

ஒருமாதிரி தனது நிலையை ஸ்திரப்படுத்திக் கொண்டு, தனது நண்பனுக்கு கடையிலாவது ஒரு தேனீர் வாங்கிக் கொடுத்து விடவேண்டுமென்ற உந்துதலில், தனது அறையை நோக்கி விரைந்தான் அவன்.

அங்கே பாரதி இருந்த இருக்கை காலியாக இருந்தது. நண்பன் எங்கே போனான் என்பதை அறிந்து கொள்ள, மேசையின் மேலிருந்த தனது கைபேசியை எடுத்து இயக்கினான் ரமணன்.கைபேசி திரை ஒரு "மிஸ் கோல்" வந்திருப்பதை அவனது அவதானத்துக்குக் கொண்டுவந்தது. பாரதியின் இலக்கந்தானது என அறிந்த அவன் அந்த இலக்கத்திற்கு தொடர்பை ஏற்படுத்தி.

" மச்சான் பாரதி ..... நான் ரமணன். ஏனடாப்பா சொல்லாமல் கொள்ளாமல் போனனி"?

"உனக்கு சொல்லிவிட்டுப் போற அளவுக்கு எனக்கு பொறுமை இல்லாமல் போச்சு ரமணன். உன்ரை அருமை அக்காவும் நீயும் கதைச்ச கதையெல்லாம் என்ரை காதிலையும் விழுந்ததடா. ஒரு கோப்பை தேனீருக்காக உன்னையும், என்னையும், ஏன் என் குடும்பத்தைக் கூட இழுத்து மிகக் கேவலமாக தூசித்த உனது அக்காவின் கதைகளைக் கேட்டு என்னால் பொறுமை காக்க முடியவில்லை. நான் மேலும் அங்கை நிண்டால் எனது கோபம் கட்டுக்கு மீறலாமென எண்ணி வெளியேறி விட்டன். மன்னிச்சுக் கொள்" மேலும் கதையை தொடர்ந்தால் தனது வார்த்தைகளும் வரம்ப மீறி, தனது நண்பனின் இதயத்தை ரணமாக்கி விடலாம் என்று எண்ணியவனாய் தனது உரையாடலை இடைநிறுத்தி துண்டித்துக் கொண்டான் பாரதி.

நண்பனின் இடைநிறுத்தப்பட்ட காரசாரமான உரையாடல் ரமணனின் இதயத்தை ஓர் எரிமலையாக்கி கோபக் கனலை கொட்டவைத்தது.

ஒரு கோப்பை தேனீருக்காக, நண்பனின்முன் மான பங்கப்பட்டுவிட்டதை எண்ண எண்ண ரமணனுக்கு அக்கா மஞ்சுவின் மேல் இனியில்லையென்றதொரு வெறுப்பு விஸ்பரூபமெடுத்து, அவளை ஒரு அந்நியப் பட்டவளாக்கியதுடன், சகோதர பாசமென தான் இது வரை கட்டிக்காத்துவந்த அழகிய கோட்டை சடசட வெனச் சரிந்து மண்ணோடு மண்ணாகி நிலத்தில் புதைவது போலொரு பிரமையும் அவனுள் எழுந்து மேலும் அவனை வாட்டி வதைத்தது.

ஸ்கைப்பில் தனது வெளிநாட்டுத் தோழியிடம் கதைத்துச் சிரித்து களிப்படைந்த மஞ்சு, தனது முகநூலுக்கு தாவினாள். முகநூலில் சென்றவாரம் தான் போட்டிருந்த ஒளிப்படங்களைப் பார்த்து "லைக்" செய்திருந்தவர்களை அறிந்து அவர்களுக்கு நன்றி தெரிவித்துவிட்டு, புதிதாகவும் பல படங்களை அதில் திணித்து தனது படாடோப வாழ்வின் பிம்பங்களை உலகமெலாம் பரைசாற்றிய பெருமையுடன் தனது செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தவள், படுக்கை அறையை விட்டு வெளியே வந்தாள்.

நடுவிறாந்தையில் போடப்பட்டிருந்த சோபா செற்றியில், அம்மாவுக்காக பசியோடு காத்திருந்த அவளது பச்சிளம் குழந்தைகள் இருவரும் காலைக் கையை எறிந்தபடி தூங்கியவண்ணமிருந்தன. அம்மாவை குழப்பினால் அடி உதை வாங்க வேண்டும் மென்ற பயம் அந்தப் பிஞ்சுகளுக்கு. அந்தக் காட்சியைக் கூட கண்டும் காணாதது போல அலட்சியமாக எண்ணிய அவள், நேரடியாக சாப்பாட்டு மேசையருகே சென்றாள், தனது பசியை ஆற்றிவிட்டு படுக்கையில் போய் விழுந்துவிட.

ரமணன் எப்பொழுதும் தனது சாப்பாட்டுக்கு அக்காவை எதிர்பார்ப்பது கிடையாது. எந்த வேளை யிலும் அவளும், வாதம்பி வந்து சாப்பிடு என்று அன்பாக இதுவரை அழைத்ததும் கிடையாது..

அன்றும் ரமணன் வந்து இரவுச் சாப்பாட்டை சாப்பிட்டுவிட்டுப் போயிருப்பான் என்ற வழமையான எண்ணத்துடன் தனக்கான சாப்பாட்டைப் போட்டுக் கொள்ள ஆயத்தமான அவளது கண்களுக்கு, தான் ரமணனுக்காக கொண்டு வந்து வைத்த தேனீர் கோப்பை கண்ணை உறுத்தியது. காரணம் அந்தத் தேனீர் அவனால் பருகப்படாமலேயே ஆறி பச்சைத் தண்ணீராக சில்லிட்டுக் கிடந்தது. அதைப் பார்த்த மஞ்சுவுக்கு ஆத்திரம் மேலிட "உவனுக்கு நல்லா கொழுப்பேறிப் போச்சு. நான் அனுப்பின தேத்தண்ணியைக் கூட குடிக்க அவருக்கு ஏலாமல் போட்டுது. அரைப்பட்டிணி, காப்பட்டினியா கிடந்தவனை கூட்டியந்து, மூண்டு நேரமும் மூக்குமுட்ட சாப்பாடும் போட்டு, தேத்தண்ணி, பால் படுக்க மெத்தையெண்டு குடுத்தவுடனை அவருக்கு கெப்பர் வந்துட்டுது போல, இப்பபார் அவருக்கு குடுக்கிற குடுவையில எல்லாம் சரிவரும். கண்டறியாத சிநேகிதம் அவருக்கு. அவனுக்கு தேத்தண்ணி குடுக்கேல்லையெண்ட ரோசத்திலை இவர் தன்ரை தேத்தண்ணியைக்கூட குடிக்காமல் ஆற வைச்சிருக் கிறார்" என தனது சகோதரனைப்பற்றி மிக ஏளனமாக எண்ணிய மஞ்சு, கோபம் மேலிட அவனது அறையை நோக்கி விரைந்தாள்.

ரமணனின் அறைக்கதவு சாத்தப்பட்டிருந்தது. அதைப்பார்த்ததும் மேலும் அவளது சினம் அதிகரிக்க, அறைக்கதவை தனது காலால் எட்டி ஒரு உதை உதைத்தாள். கதவு "படார்" என திறந்து கொண்டது. அறையின் மின் விளக்கு அணைக்கப்பட்டிருந்ததால், அறை ஒரே இருளில் மூழ்கியிருந்ததைக் கண்ட அவள், மின் சுவிச்சைத் தேடி மின் விளக்கை ஒளிரவிட்டாள்.

திடீரெனப் பாய்ந்த மின்னொளி, அங்கேயொரு அசாத்திய வெறுமையைப் பறைசாற்றி மஞ்சுவை பெரும் பீதிக்குள்ளாக்கி மிரளவைத்ததால் பதட்டமடைந்த அவள், அவசர அவசரமாக தனது கைபேசியை தேடியெடுத்து ரமணனின் இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தினாள்.

"மன்னிக்கவும், நீங்கள் அழைத்த இலக்கத்தினை அடைய முடியாதுள்ளது. சிறிது நேரத்தின் பின் மீண்டும் முயற்சிக்கவும்."

மீண்டும் மீண்டும் அதேகுரல்...! அதேபதில்...!

## புனிதமற்று உதிரும் வார்த்தை

கடாசி வீசப்பட்ட
கடைசி வார்த்தையும்
முற்றுபுள்ளியின்றி
முடிந்திருந்தது…
உனது இரண்டாம்
வருகையை
நினைவுறுத்தியபடி…

நேற்றையின்
உனது வார்த்தைகளில்
உதிர்ந்து கிடந்த
அறியாமையை மெது மெதுவாக
பொறுக்கி எடுத்த போது
புனிதங்கள்
செத்துக் கிடந்தன
மிகப்பெரும் விரிசல்களுடன்…

உனது வருகையை
எதிர்பார்த்தபடி காத்திருக்கிறது
மனசு
எந்த விருப்புமற்று…

கொல்லும் வார்த்தைகளால்
இட்டு நிரப்புகிறாய்
எனது வினாக்களுக்கான
பதில்களை…

இப்பொழுதும்
கடாசி வீசப்பட்ட
கடைசி வார்த்தையும்
முற்றுபுள்ளியின்றி
முடிந்திருந்தது…

– யாத்ரிகன்

## உறங்கும் பிணங்கள்

ஓ மனிதா
போகும் இடமெங்கும்
காற்றிடைவெளியே
உறங்கும் பிணங்களின்
வாடைகள் ஆங்காங்கே
ஒற்றை வரப்போரம்
ஓநாய்களின் கதறல்களும்
மரண ஓலங்களும்
வானைத் தொட்டன
ஒரு பிடி சாம்பல் கூட எடுக்க முடியா
மஞ்சள் ஆற்றுத்திடலில்
புதைக்காமல் விதைக்கப்பட்ட
உடலங்களின் பொத்தல் வழியே
பாய்ந்த குருதியாற்றால்
மண்மாதா சிந்திய
கண்ணீர் துளிகளினால்
பிண உடலங்கள்
உறைந்து விறைத்துக்கொண்டன.

ந. பாக்கியநாதன்



## ஒருக்கால்

மூன்றாம்கால்
பெண்என்றால்
முந்தி வரும் யோகம் என்பர்
முக்காலும் உணர்ந்தவன்
உலகில் ஞானியாவான்
கொடிகால் ஏற்றி கோயில்
திருவிழா நடக்கும்
கன்னிகால் நட்டு
வீட்டில் பொன்னுருக்கி
பந்தல்கால் நட்டு
கல்யாணம் சிறப்பா நடக்க
பொய்கால்
குதிரை கட்டி
ஆலயத்தில்
கொண்டாட்டம்
எத்தனைகால்
இருந்தும் முதுமைக்கு
மூன்றாம் கால் கைதடியாகி
எவர்காலும் வேணாம் நான்
சொந்த காலில் நிப்பன்
என்று இருந்தாலும்
இறுதியிலே
பத்துகால் ஆகதான்
சுடுகாடு போக வேளை வரும்
ஒருக்கால்
சிந்தித்து பார்போமா?

## குருவி குஞ்சு

குருவி குஞ்சு போலே
நான் எட்டி எட்டி பார்கிறேன்
கூட்டை விட்டு என்னாலே பறக்க
முடியலை
வானில் ஓடும் மேக கூட்டம் பார்த்து
நான் ரசிக்கிறேன்
வெண்ணிலவின் அழகை நான் அள்ளி
அள்ளி குடிப்பேன்
காணும் தூரம் வரைக்கும் பசுமை
கண்ணை பறிக்கும்
வண்ண வண்ண பூக்கள் என்னை
மின்னி மின்னி இழுக்கும்
பறந்து செல்ல ஆசை கொண்டேன்
பாதையின்றி தவிப்பேன்
ஓடும் நதியின் ஓசை
என் காதில் சங்கீதம் பாடும்
உயர்ந்த மலையின் சிகரம் என்
எண்ணங்களை
உயர உயர வைக்கும்
கடவுளின் கை வண்ணங்களை
உலகில் கண்டு வியப்பேன்
மனசு போகும்
தூரம் வரை
பறக்க நானும் துடிப்பேன்
இறக்கை இன்றி நானும் பாவியாகி
தவிப்பேன்
பாவியாகி தவிப்பேன்

**மீனாவின் 2 கவிதைகள்**



## ஒளியை ஏற்று கவிதைகளே

எங்கே
மனிதம் மரணிக்கிறதோ
அங்கே
குரல் கொடு கவிதைகளே!

எங்கே
சமூகம் அழுகிறதோ
அங்கே
கண்ணீர் துடை கவிதைகளே

எங்கே
சுயநலம் ஆள்கிறதோ
அங்கே
பொதுநலம் பாடு கவிதைகளே

எங்கே
அநீதி நடக்கிறதோ
அங்கே
நீதி கொடு கவிதைகளே

எங்கே
அறியாமை வளர்கிறதோ
அங்கே
அறிவைப்பரப்பு கவிதைகளே

எங்கே
பொய்கள் வாழ்கிறதோ
அங்கே
மெய்களை உயர்த்து கவிதைகளே

எங்கே
மடமை தெரிகின்றதோ
அங்கே
புலமையைப்பரப்பு கவிதைகளே

எங்கே
போலிகள் வாழ்கிறதோ
அங்கே
அசல்களை
வாழ்த்து கவிதைகளே

எங்கே
இருள் இருக்கிதோ
அங்கே
ஒளியை ஏற்று கவிதைகளே

எங்கே
கொடுங்கோல் ஆழ்கிறதோ
அங்கே
செங்கோல் தூக்கு
கவிதைகளே

வடஅல்வை-கே.சின்னராஜன்.

## புத்தகத்தின் யாசிப்பு

நான்
புத்தகம் பேசுகிறேன்
என்னைப்
படைத்தவர் இப்போ
எங்கிருப்பானோ
அறியேன்
தூசி படிந்த
சாய்மனைக் கதிரை
நாட்களாய்
கழிகின்றன
என் நாட்கள்
மாதந்தோறும்
வாசித்த சுவாசிப்பை
இழந்து இப்போ
வாசிப்பு மாதத்திலாவது
என்னை யாரும்
நேசிப்பார்களா – என்ற
யாசிப்புடன் நான்.

நேரமில்லையென
அலைபவர்களே
தேடலைத் துறந்தவரே
இணையம்
எல்லாம் தரும் என
நினைப்பவரே
உங்களுக்கெப்படி
என் துயர்
புரியப் போகிறது.

- புலோலியூர் வேல்.நந்தன்

## தகுதி

நாளை
நேர்முகத்தேர்வு
நேற்று
விழுங்கி விட்டார்கள்
என் சான்றிதழ்களை

பட்டதாரி பெயர் அளவில்
பதவியும் இல்லை
பசிக்கும் வயிற்றுடனேயே
பாடசாலை துவக்கம் இன்று வரை!

விளம்பரம் கண்டதும்
விண்ணப்பிப்பதும் – முடிவில்
கையெப்பம் தெரியாதவன்
பெயரால் வெற்றிடம்
நிரப்பப்பட்டிருக்கும்!

தேர்தல் காலத்து வால்கள்
நேர்முகப்பரீட்ச்சையில்லாமல்
தேர்ச்சியடைந்து விடுகிறான்
பல்கலைகற்று பட்டம் பெற்றவன்
தகுதி இல்லையென்று
தவறி விழுகிறான்!

ஓ!
இன்றைய உலகில் படிப்பும் பட்டமும்
பெயர் அளவில்தான்
அடுத்த தேர்தலிலாவது
அவன் வாலாக வேண்டும்

- மிஹிந்தலை ஏ.பாரிஸ்





# கொழும்பில் உலகத் திரைப்பட விழா!

-பயணி

முதன்முறையாக உலகத் திரைப்பட விழாவொன்று, இலங்கையில் நடைபெற்றிருக்கிறது! இதைச் சாதித்துக் காட்டியவர்கள், பிரசன்ன விதானகே தலைமையிலான **இலங்கைத் திரைப்பட நெறியாளர் கழகத்தினர்**. புரட்டாதி 2 – 7 வரை கொழும்பில் இது நடைபெற்றது. ஏறக்குறைய 90 படங்கள் காட்டப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை 2013, 2014 ஆம் ஆண்டுகளில் பல்வேறு நாடுகளில் உருவாக்கப்பட்டுக் கவனத்தையும் விருதுகளையும் பெற்றவை. நாளாந்தம் ஒவ்வொரு திரை அரங்கிலும் நான்கு படங்கள் வீதம், ஐந்து திரை அரங்குகளில் காட்டப்பட்டன; அதுவும் இலவசமாக! உலகத் திரைப்பட விழாக்களில் இவ்வாறு இலவசமாகக் காட்டும் வழக்கம் இல்லையாம்! ஆயினும், யப்பானின் ஒக்கிநாவா திரைப்பட விழாக்குழுவின் அனுசரணையுடன், இவ்விழாவின் ஏனைய அம்சங்களுடன் இதனையும் சாதித்திருக்கிறார்கள் இலங்கைத் திரைப்பட நெறியாளர் கழகத்தினர். திரைப்படக் காட்சிப்படுத்தல்கள் தவிர, இலங்கைத் திரைப்பட வரலாறு பற்றிய கண்காட்சி, பிரபல வெளிநாட்டுக் கலைஞர்களின் பயிலரங்குகள், திரைப்பட முடிவில் நெறியாளருடன் உரையாடல் போன்ற நிகழ்வுகளும் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன. இவற்றாலெல்லாம் திரைப்பட ஆர்வலர்கள் மிகுந்த பயனை அடைந்திருக்கின்றனர்.

நான் பார்த்த 20 படங்களில் குறிப்பிடத்தக்கவையாகப் பல இருந்தன; எனினும், சிலவற்றைப் பற்றி மட்டுமே சுருக்கமான குறிப்புகளை இங்கு தர முயல்கிறேன்.



ஒரு துப்பாக்கியும் ஒரு மோதிரமும்

*1.ஒரு துப்பாக்கியும் ஒரு மோதிரமும்*
*(A GUN & A Ring)*

இது ஒரு தமிழ்ப் படம்; கனடாவில் வாழும் ஈழத் தமிழரான **லெனின் எம். சிவம்** இதன் நெறியாளராவார். பெரும்பாலான கலைஞர்கள் புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழ்க் கலைஞர்களே. நம்மெல்லோருக்கும் பெருமை சேர்க்கும், உலகத் தரத்திலான கலைப் படைப்பாக இது அமைந்துள்ளது.

கனடிய வாழ்க்கைச் சூழலிலும், ஈழத்திலுமான தமிழ் மக்களின் வாழ்க்கையின் சில பகுதிகளை இது உயிர்ப்புடன் சித்திரிக்கிறது. வழமையான நேர்கோட்டுப் பாணியிலல்லாது வித்தியாசமாகச் சொல்லப்படும் கதைகூட ஒற்றை மையமுடைய தல்ல. மனைவி வேறொருவனுடன் சென்றுவிட அவளைக் கொலைசெய்யத் துப்பாக்கி தேடும் முன்னாள் போராளியான கணவன், துப்பாக்கிக்காகப் பணம் வாங்கிவிட்டு அவனை ஏமாற்றும் தமிழ் இளைஞன், தமிழக இயக்க முகாமில் முன்பு பலரை அடித்தே கொன்ற இரும்பன், சமப்பாலுறவில் ஏற்பட்ட தடையில் தற்கொலை புரியும் அவனது மகன், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடும் வெள்ளையனால் கொல்லப்படும் தமிழ்ச் சிறுமி – மகளான இச்சிறுமியுடன் கணவன் கனடாவுக்குச் செல்ல, தாயகத்தை நீங்க மறுத்து, அநாதைப் பிள்ளைகளைப் பராமரித்து, ஒரு நாள் 'வெள்ளை வானில்' கடத்தப்பட்டு மரணமடையும் பெண், ஓர் இளைஞனின் அனுதாபத்தால் திருமணத்துக்காக வன்னியிலிருந்து அழைக்கப்பட்டு விமான நிலையத்தில் கைவிடப்படும் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பெண், பழைய தலைமுறைப் பெற்றோருடன் முரண்படும் புதிய தலைமுறை, சூடான் போராட்டச் சூழலில் இராணுவத் துணைப்படையால்



விவியன் அம்சலெமின் விசாரணை

குடும்பத்தினர் அனைவரும் கொல்லப்படத் தனியனான முன்னாள் கிறீஸ்தவப் போதகர் போன்றோரின் சிறு சிறு கதைகள் பிணைந்து உருவாகும் – அவை பற்றிய புரிதலை உணர்வுபூர்வமாக நம்மில் எழுப்பும் – தனிவிதமான கதை.

நடிப்பு, இசை, காட்சிப்படுத்தல்கள், படத் தொகுப்பு என்பவை நேர்த்தியாக அமைந்து கலை அனுபவத்தைத் தருகின்றன. திரைப்பட விழாவில் மிகச் சிறப்பாகக் கருதப்படக்கூடிய படங்களில் ஒன்றாக, இது அமைந்துள்ளது. நெறியாளருக்கு எமது பெருமைமிகு பாராட்டுக்கள்!


**2. ஃவெறி** (Ferry)

முந்தைய படத்தைப் போலவே மனதை மிகவும் கவர்ந்த சீன மொழிப் படம் இது. கதாநாயகன் ஓடக்காரனான கிழவன். இயற்கையுடன் இணைந்த அவனது வாழ்வும், சக மனிதருக்கு உதவுவதைத் தனது தார்மிகக் கடமையென உணர்ந்து செயற்படும் அர்ப்பணிப்பும், சில நாள்கள் தங்கவென நகரத்திலிருந்து வரும் அவனது மகனும் எனக் கதை நகர்கிறது. வாழ்வின் அர்த்தம் பற்றிய புரிதலைச் சிறப்பாக வெளிப்படுத்துகிறது. நதி, ஓடம், ஓடக்காரக் கிழவன் என்பவை ஆழ்ந்த குறியீடாக மாறி பரவச உணர்வைக் கிளர்த்துகின்றன.

**ஷி வெய்** இதனை நெறியாள்கை செய்துள்ளார்.

**3. விவியன் அம்சலெமின் விசாரணை** (The Trial of Viviane Amsalem )

இஸ்ரேலிய சமய நீதிமன்றில் கணவனிடமிருந்து மணவிலக்குக்கோரி, விவியன் அம்சலெம் தொடர்ந்த வழக்கு, ஐந்து வருடங்களாக இழுபடுகின்றது. ஆணுக்குச் சார்பானதாகச் சட்டங்களும் ஏனைய நடைமுறைகளு முள்ளன; அவைதான் காரணம். பெண் ஒடுக்குமுறைச் சூழல் பெண்ணுக்கு ஏற்படுத்தும் அவலங்களையும், விசாரணையின் குளறுபடிகளையும் உணர்வுபூர்வமாக அம்பலப்படுத்துவதாகப் படம் உள்ளது. நீண்ட நீதிமன்ற விசாரணை உரையாடல்களைக் கொண்டுள்ளபோதும், பிரச்சாரமாகாது நல்லதொரு திரைப்படமாக உருவாகி யுள்ளது.



த கோல்டன் ட்றீம்

**றொனிற் எல்க்காபெற்ஸ்** என்ற சகோதரியும், **ஷ்லோமி எல்க்காபெற்ஸ்** என்ற சகோதரனும் இணைந்து நெறியாள்கை செய்த படமாகும் இது!

**4. த கோல்டன் ட்றீம்** (The Golden Dream)

**தியகோ குவேமடா டயஸ்** நெறியாள்கை செய்த இப்படம், கௌதமாலாவி லிருந்து மெக்சிக்கோ ஊடாகக் குறுக்கு வழிகளில் கள்ளமாய் அமெரிக்கா செல்ல முயல்பவர்களைப் பற்றியது. இரண்டு நண்பர்களும் ஓர் இளம் பெண்ணும் பயணப்படுகின்றனர்; இடையில் மெக்சிக்கோவைச் சேர்ந்த செவ்விந்திய இளைஞனும் இணைகிறான், பல்வேறு நெருக்கடிகளை அவர்கள் எதிர்கொள்ள நேர்கிறது. எல்லைப் படையினாலும் வேறு வன்முறையாலும் இருவர் கொல்லப்படுகின்றனர் ஆயுதக் குழுவால் பெண் கடத்தப்படுகிறாள். இறுதியில் ஒருவன் மட்டுமே அமெரிக்காவுக்குள் செல்கிறான். வளமான பொருளாதார வாழ்வுக் காகச் செல்வந்த நாடுகளுக்குள் ஊடுருவ முயலும், வறிய நாடுகளைச் சேர்ந்தோரின் அவலங்கள் மீது கவனத்தைக் குவியச் செய்யும் நல்ல படம்.



அபுர் பாஞ்சாலி

பின்வரும் படங்களும் கவனத்துக் குரியவை. **அபுர் பாஞ்சாலி** (Apur Panchali) என்ற வங்காளப் படம், சுபிர் பானர்ஜி என்பவரின் வாழ்வுக்கும், அவர் அபு என்னும் சிறுவனாக முன்பு நடித்த பதேர் பாஞ்சாலி படத்திலும், அதன் ஏனைய இரண்டு பாகங் களைக் கொண்ட படங்களிலும் அபு பாத்தி ரத்துக்கு நிகழும் சம்பவங்கள் பல வற்றுக்குமுள்ள அதிசய ஒற்றுமைகளைச் சித்திரிக்கிறது. **கௌசிக் கங்குலி** இதன் நெறியாளர். **அன்னாவும் ரசூலும்** என்னும் மலையாளப் படம், கத்தோலிக்கப் பெண்ணுக்கும் முஸ்லிம் இளைஞனுக்கும் இடையில் நேரும் காதலின் பின்னணியில் நடந்த அவலங்களைச் சொல்கிறது. **ராஜீவ் ரவி** இதன் நெறியாளர். **ஃவன்றி** என்னும் படத்தை **நாகராஜ மஞ்சுளே** நெறியாள்கை செய்துள்ளார். தலித் மக்களின் வாழ்க்கை யின் சில பகுதிகளைக் காட்டும் படம் இது. மராத்தியில் ஃவன்றி எனப்படுவது தமிழில் பன்றியையே குறிக்கிறது. அந்த மக்களின் இழிவான – துன்பப்பட்ட வாழ்க்கை, இன்னும் ஆழமாகச் சித்திரிக்கப்பட்டிருக்க வேண்டும்; இந்த விதத்தில் படத்தின் திரைச்சுவடியில் போதாமை உள்ளது. ஆயினும், காலாதி காலமாக அடக்கி வைக்கப்பட்டிருந்த ஆத்திரம், கதாநாயக தலித் சிறுவனின் எதிர்த் தாக்குதல்மூலம் இறுதிக் காட்சியில் வெளிப்படுவது (உயர் சாதி ஆளின் கட்டளையினால், பன்றியைப் பிடிக்க முழுக் குடும்பமே முயன்று அல்லல்பட்ட பிறகு), அதன் குறியீட்டுத் தன்மையினாலும் மனதைக் கவர்கிறது!

இலங்கைத் திரைப்பட வரலாற்றில் முக்கிய நிகழ்வாகவும், அண்மைக்கால உலகத் திரைப் படைப்புகளைப் பார்க்கும் அரிய வாய்ப்பைத் திரைப்பட ஆர்வலருக்கு அளித்ததுமான இத்திரைப்பட விழா பற்றிய விரிவான செய்திகளை, ஆங்கில நாளேடு களும் சிங்கள நாளேடுகளும் வெளி யிட்டன. ஆயினும், கொழும்பிலும் யாழ்ப் பாணத்திலும் இருந்து வெளியாகும் தமிழ் நாளேடுகள், இதற்கு உரிய முக்கியத்தைக் கொடுக்கவில்லை. நல்ல திரைப்பட இரசனையை வளர்ப்பதற்கு, இத்தகைய விழாக்கள் பற்றிய செய்திகள் பர வலாக்கப்பட வேண்டும்; நமது நாளேடு களின் மந்தத்தனம் கவலைக்குரியது!

*14.10.2014.*

***

# மு.அநாதரட்சகன்

# நேர்காணல்

## சந்திப்பு
வே.ஐ.வரதராஜன்

மு.அநாதரட்சகன் அவர்கள் ஈழத்து படைப்பாளிகள் அனைவருக்கும் நன்கு அறிமுகமானவர். அமைதியாக தரமான சிறுகதைகளை வாசகர்களுக்கு தருபவர். சிறந்ததொரு விமர்சகர். சமூகம் சார்ந்த இலக்கியங்களை படைப்பதில் வல்லவர். இவரது சிறுகதைகள் "நிமிர்வு" என்னும் தொகுப்பாக கொடகே வெளியீடாக வெளிவந்துள்ளது. மு.அநாதரட்சகன் அவர்களின் நேர்காணலை ஜீவநதி வாசகர்களுக்கு தருவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

**வே. ஐ.வரதராஜன்**

**தாங்கள் ஆக்க இலக்கியத்தில் ஈடுபடுவதற்கு அமைந்த சூழ் நிலை அல்லது பின்னணியினைக் கூறுங்கள்.**



**மு.அநாதரட்சகன்**

சிறுவயதில் இலக்கியத்தின் மீது ஆர்வம் ஏற்பட எனக்குக் கற்பித்த ஆசிரியர்கள் முதற் காரண மாக இருந்தார்கள். ஆரம்ப கல்வியை அல்வாய் சிறிலங்கா வித்தியாசாலையில் கற்றேன். அங்கு தலைமை ஆசிரியராக இருந்த அல்வையூர் கவிஞர் மு.செல்லையா, வித்துவான் க.முருகேசு என்போரிடம் தமிழ் கற்றேன். பின்பு இடைநிலைக்கல்வியை யாழ்ப் பாணம் ஸ்ரான்லிக்கல்லூரியில் (கனகரத்தினம் ம.ம.வி) பயின்ற வேளை, தமிழ் இலக்கியத்தை அந்தோனிப் பிள்ளை ஆசிரியர்; அவர் குருநகரைச் சேர்ந்தவர், மற்றும் வித்துவான் க.ந.வேலன் ஆகியோரிடம் கற்கும் வாய்ப்புக் கிடைத்தது. அன்று எனக்கு வாய்த்த ஆசிரியர்கள் தமிழையும், இலக்கியத்தையும் நயத்துடன் கற்றுத்தந்தனர். அந்த ஈர்ப்பு என்னை இலக்கியத்தின் பால் திசைப்படுத்தியது.

இன்னொன்று, அன்றைய காலத்தில் எமது கிராமச் சூழலில் இயங்கிய சனசமூக நிலையத்தின் இலக்கியப் பணி குறிப்பிடக்கூடியது. வடஅல்வை இளங்கோ சனசமூகநிலையம் ஆண்டுதோறும் முத்தமிழ் விழாவை நடாத்தி அதில் இயல், இசை, நாடக அரங்குகள் மூலம் தமிழை வளர்த்தது. அந்த அரங்கு களிற்கு ஈழத்தில் அன்று பிரசித்தி பெற்றிருந்த எழுத் தாளர்கள், கவிஞர்கள், அறிஞர்கள் அழைக்கப் பட்டிருந்தனர். நிலையத்தில் நானும் நண்பர்களும் சேர்ந்து "சிலம்பொலி" என்ற கையெழுத்துச் சஞ்சிகையை வெளியிட்டோம். எனது இலக்கிய ஈடுபாடு காரணமாக என்னை ஆசிரியராக்கி பொறுப்பை என்னிடம் தந்தார்கள். என்னிடம் ஓவியம் கீறும் திறன், உறுப்பாக எழுதும் திறன் இருந்ததும் ஒரு காரணமாக இருக்கலாம். "சிலம்பொலி"யின் பக்கங்களை நிரப்புவ தற்காக கட்டுரை, சிறுகதை, துணுக்குகள், ஓவியம் என்பவற்றை எழுத வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. அது எனக்கு ஒரு பயில்களமாகவும் வாய்த்தது.

பின்னர்; எழுபதுகளில் எமது கிராமத்தில் எழுச்சி பெற்றிருந்த இடதுசாரி அரசியல் என்னை மாற்றுவழியில் சிந்திக்க வைத்தது. அதுவரை எமது கிராமத்தில் தமிழரசுக்கட்சியின் செல்வாக்கும் முன்னெடுப்புகளுமே இருந்தன. நானும் அதில் ஈடுபட்டு தேர்தல் காலங்களில் தமிழரசுக்கட்சிக் கூட்டங்களுக்கு நண்பர்களுடன் சென்று வந்ததும் நினைவுக்கு வருகிறது.

தோழர் நா.சண்முகதாசனின் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையும், செயற்பாடுகளும் என்னை ஈர்த்தது. அன்றைய சமூகச் சூழலில் எம்மைப் போன்றவர்கள் இடதுசாரி அரசியலுக்குள் கவரப்பட்டது இயல்பான விடயம் தான். எங்கள் சமூக நிலைமை, வாழ்வியல் இருப்பு பற்றி எம்மைச் சிந்திக்க வைத்த தத்துவமாக மாக்சியம் இருந்தது. அக்கட்சியில் இணைந்து தோழர்களுடன் விவாதிக்கவும், தெளிவு பெறவும் பலவிடயங்கள் இருந்தன. அது என்னுள் புதிய மார்க்கத்தை திறந்து விட்டது. சோவியத் ரஸ்யா சீனாவி லிருந்து வெளிவந்த மாக்சிய நூல்களை வாசித்தேன். அதன்வழி தமிழக, ஈழத்து எழுத்தாளர்களது படைப்புக் களை நிறைய வாசிக்க நேரமும் இருந்தது. நல்ல நண்பர்களும் வாய்த்தனர். இடதுசாரி இலக்கியங்களின்

வழித்தடத்தினை இனங்காட்டிய பல தோழர்கள் இருந்தனர். அவர்களுள் எழுத்தாளர் நந்தினி சேவியர் முக்கியமானவர்.

அவர் எனக்கு நல்ல படைப்புக்களை அறிமுகப் படுத்தி படைப்பின் புதிய தரிசனங்கள், போக்கினை அறிமுகம் செய்தார். பின்பு அறிமுகமான "ஆகசி" என்ற கவிஞர், ஆங்கில ஆசிரியர் மல்லிகையில் தொடர்ந்து கவிதை எழுதியவர். அவரும் வாசிப்பைத் தூண்டினார். இவர்களாலும் எனது சுய தேடலிலும் வாசிப்பு நெறிப் படுத்தப்பட்டது. எண்பதுகளிலேயே எனது முதலாவது சிறுகதை வெளிவந்தது. அதுவும் மல்லிகையில்.

எண்பதுகளில் எனது பல்கலைக்கழகக் கல்வியை முடித்து ஆசிரியர் நியமனம் பெற்றேன். பணியின் நிமிர்த்தம் களுத்துறை மாவட்டத்தில் புலத்சிங்கள என்ற இடத்தில் மில்லக்கந்த தமிழ் வித்தியாலயம் என்ற தோட்டப் பாடசாலையில் கற்பித்தேன். அங்கு தேயிலைத் தோட்டங்கள், இறப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் வாழ்வியல் அவலங்கள் என் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது. அது இலக்கியத்தில் வர்க்கப் பார்வையின் அவசியத்தை என்னுள் பிரத்தியட்சப் படுத்தியது. அம்மக்களது அவலங்கள் குறித்து சிறுகதைகளை "சிந்தாமணி" ஈழநாட்டிலும் எழுதியிருந்தேன். தொண்ணூறில் இடம் பெற்ற இடப் பெயர்வின் போது, காணாமல் போனவற்றுடன் அவையும் தொலைந்து போய்விட்டன.

போர்ச்சூழலில் நான் இழந்து போனவை நிறைய அவற்றில் நான் பாதுகாத்து வைத்திருந்த பிரதிகளும் முக்கியமானவை.

பின்னர், தொண்ணூறுகளில் இடமாற்றம் கிடைத்தது. என்னை யாரென இனங்கண்டு கொண்ட கல்வி அதிகாரிகள் யா/தேவரையாளி இந்துக்கல்லூரி யில் கற்பிக்க அனுமதி தந்தார்கள். அது என் சமூகம் சார்ந்த பாடசாலை. அதுவும் எனக்கு நன்மையே பயத்தது. காரணம் பிரபல எழுத்தாளர் தெணியானும் அங்குதான் பணிபுரிந்தார். அவருடன் நெருங்கிப் பழகி உறவாடும் வாய்ப்புக் கிடைத்தது. அவரிடமிருந்த பலங்களை புரிந்து கொண்டு பழகினேன். என்னை இன்றுவரை எழுதத் தூண்டிக் கொண்டிருப்பவர் அவர். அவரது தூண்டு தலால்தான் எனது சிறுகதைத் தொகுப்பு கொடகே வெளியீடாக வந்தது. "நிமிர்வு" என்ற அத்தொகுப் பினை வெளியிட மேமன்கவி, நந்தினிசேவியர், டொமினிக் ஜீவா, லெனின் மதிவானம் ஆகியோரது பங்களிப்பும் இருந்தன.

**வே.ஐ.வரதராஜன்**

**தாங்கள் மாக்சியக் கோட்பாடுகள்/சித்தாந்தங்களை ஏற்றுக் கொண்டவர் எனும் ரீதியில் தங்களது படைப்புகளில் அவை விஞ்சி நிற்காதவாறு கையாளுதல் எவ்வாறு சாத்தியமாகிறது.**

**மு.அநாதரட்சகன்**

எங்களுக்கு முன்னோடிகளாக இருந்தவர்கள் கே.டானியல், செ.கணேசலிங்கன், டொமினிக் ஜீவா, நீர்வை பொன்னையன், என்.கே.இரகுநாதன்(பட்டியல் பூரணமானதல்ல) போன்றோர். அவர்களது படைப்பு களில் மாக்சிச கோட்பாடு சித்தாந்தம் சார் முனைப்பு தூக்கலான இருந்தன. அவற்றில் பிரசாரம் மிகுந்தும், அழகியல் நீர்த்துப் போயும் உள்ளதாக எதிர் விமர்சனங்கள் இருந்தது. இவர்களது படைப்புகள் சமூக மாற்றத்தை அவாவி நின்ற காலத்துக்குரியவை. அப்போது மாக்சிய பொதுவுடமைச் சித்தாந்தம் எழுச்சி பெற்றிருந்த காலம் அன்றைய படைப்புகள் சமூகமாற்றம் கருதி எதிர்குரலாக எழுந்தவை. அவை சமூகத்தில் புரையேறிப் போயிருந்த பிரச்சினைகளை குறிப்பாக சாதியப் பிரச்சினைகளை ஆக்கிரோசமாகச் சொல்ல முற்பட்டபோது பிரச்சாரம் சில படைப்புகளில் மேலோங்கி இருந்தது உண்மைதான். சாதிய ஒடுக்கு முறை, வர்க்க ஒடுக்குமுறை மற்றும் சமூகப் பிரச்சினை கள் அன்றைய சமூகத்தில் கூர்மையடைந்திருந்தன. அதைப்பற்றி எழுதியவர்களிடம் ஆவேசம் இருந்தது. அதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதற்குப் பின்னர் வந்தவர்களான தெணியான், செ.யோகநாதன், நந்தினி சேவியர், ஐ.சாந்தன், கே.ஆர்.டேவிட், முருகபூபதி (பட்டியல் பூரணமானதல்ல) போன்றோரின் படைப்புக் களில் புதிய மாற்றங்கள் தெரிந்தன. அவர்கள் புறநிலை யதார்த்தங்களை ஏற்றுக் கொண்டு அகநிலை உணர்வு களையும் தமது படைப்புகளில் கொண்டு வந்தார்கள். இவர்களது படைப்பு மொழியில் உருவநேர்த்தி, உத்திச்சிறப்பு, அழகியல் சிறப்பு மெருகுபடுத்தப்பட்டன. இது மாக்சியப் படைப்புகளுக்கு விரோதமானதல்ல.

என்னைப் பொறுத்தவரை இயல்பிலேயே மென்போக்கானவன். கு.அழகிரிசாமி, கு.பா.ரா, தி.ஜான கிராமன் ஆகியோரில் ஈர்ப்பு எனக்குண்டு. அவர்களது படைப்பில் உள்ள மென்மையாகக் கூறும் உத்தி என்னைக் கவர்ந்தது. அது என் எழுத்திலும் தாக்கத்தைக் கொண்டு வந்திருக்கலாம். படைப்பிலக் கியம் என்பது புற உலகம் சார்ந்தது மட்டுமல்ல, மனிதனின் அகஉலகமும் சார்ந்ததும் தான் என்பது என் கருத்து.

**வே.ஐ.வரதராஜன்**

**"ஆக்க இலக்கியத்தில் கையாளப்படும் மொழியின் தன்மையினால் படைப்பிலக்கியம் சிறப்புப் பெறுகின்றது" எனும் கூற்று எவ்வகையில் பொருந்தும்?**

**மு.அநாதரட்சகன்**

சிருஷ்டி இலக்கியம் என்பது மொழிக்குள் நிகழ்கின்ற ஒரு செயல்முறை(Process) மொழியின் தன்னியல்பான தனித்துவம் குறித்தும் அது எமக்குள் ஏற்படுத்தும் அதிர்வுகள் குறித்தும் நாம் புரிந்து கொள்வது அவசியம். இலக்கியத்துக்கு படைப்பாளியின் மொழியின் வீச்சு வளம் சேர்க்கிறது என்பது உண்மைதான். கூடவே மொழியின் கருத்து வெளிப்பாடு எளிமைத் தன்மையை யும் கொண்டிருப்பது நல்லது. படைப்பு மொழி என்பது படைப்பாளியின் தனித்துவத்தைக்காட்டுவது. அதற் கென்று ஒரு நியமத்தை நாம் வகுக்க முடியாது. புதுமைப் பித்தனின் படைப்புமொழியை நாம் ஜெயகாந்தனிடமோ, சுந்தரராமசாமியிடமோ தேட முடியாது. அண்மைக்

காலத்தில் மொழியை நியமமாகக் கொண்டு படைப்புகள் வருகின்றன. அவை மொழிக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கின்றன. புதிய சொல்லாடல்கள், உச்சமான மொழிக்கையாளுகை, பூடகமாகச் சொல்ல விளைதல் இது சாதரண வாசகனை தடுமாற வைப்பதுடன், சொல்ல வரும் விடயத்தில் கருச்சிதைவினையும் ஏற்படுத்தி விடுகின்றது. குறிப்பாக அண்மைக்கால பின்நவீனத்துவப் படைப்புக்களில் இதைப் பார்க்க முடிகிறது.

ஜெயமோகன், ஆதவன் தீட்சண்யா, எஸ்.ராமகிருஷ்ணன், கோணங்கி, ரமேஸ் பிரேம் போன்றோரின் எழுத்துக்களிலும் பின்நவீனத்துவக் கூறுகள் உள்ளனதான். ஆனால், அவை சில கருத்துநிலை முரண்களுக்கு அப்பால் அவர்களது மொழி புரிதலுக்குரியது என்பது எனது அபிப்பிராயம்.

**வே.ஐ.வரதராஜன்**

**நவீன படைப்புகளின் உள்ளீடாக வரும் "இஸங்கள்", "கோட்பாடுகள்" படைப்புக்கு செழுமையை சேர்ப்பவையாக உள்ளதா அல்லது பின்னடைவை ஏற்படுத்துகின்றனவா?**

**மு.அநாதரட்சகன்**

கோட்பாடு இல்லாமல் இலக்கியம் இல்லை. ஒவ்வொரு படைப்பாளியிடமும் கோட்பாட்டுத்தளம் இயங்கிக் கொண்டிருக்கும் என்பது எனது கருத்து. அது அவரது படைப்பில் விரும்பியோ விரும்பாமலோ வெளித் தெரிய வரும். படைப்பில் பிரதிபலிக்கும். அந்தக் கோட்பாடு படைப்புக்கு செழுமை சேர்க்கின்றதா என்பது கோட்பாட்டின் சமூக அக்கறை, சமூகப் பிரக்ஞையைப் பொறுத்தது. இலக்கியம் என்பது அடிப்படையில் சமூக உணர்வின் வெளிப்பாடுதான். (A Form of social consciousness) மனித விடுதலைக்கான சிறந்த வாழ்க்கையை நோக்கிய பயணமே படைப்பின் இலட்சியமாக இருக்க வேண்டும். இத்தகைய சாரத்தைக் கொண்டது மாக்சியக் கோட்பாடு என்பதை மறுக்க இயலாது. இதற்குப்பல உதாரணங்களை உலக இலக்கியங்களிலும் நவீன தமிழ் இலக்கியங்களிலும் காட்ட முடியும்.

இலக்கியக் கோட்பாடு என்பது மனிதனின் சமூக இயக்கம் பற்றிய தெளிவை அடைவதாக இருக்க வேண்டும். கருத்து நிலைப்பட்ட பிரகடனமாக இருக்கக் கூடாது. அத்துடன் கோட்பாட்டின் தெளிவினை அல்லது தெளிவின்மையை அடிப்படையாகக் கொண்டே படைப்பின் செழுமை தீர்மானிக்கப் படுகிறது.

**வே.ஐ.வரதராஜன்**

**தங்களது சிறுகதைகளில் பாடசாலை செல்ல மறுக்கும் சிறுவர்களின் பிரச்சினைகளும் ஊழியர்களின் குடும்ப வறுமையும், அவலங்களும் சித்திரிக்கப்பட்டுள்ளன. இவற்றை வெறும் புள்ளிவிபர அடிப்படையிலா அல்லது தங்களது வெளிக்கள அனுபவ வாயிலாகக் கொண்டு வர முடிந்ததா எனக் கூறுங்கள்?**

**மு.அநாதரட்சகன்**

எமது கல்வி முறைமைக்குள் பல குறைபாடுகள் போதாமைகள் உள்ளன. பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பி வைக்க முடியாத நிலையில் பெற்றோர்கள் இருக்கின்றனர். அதுவும் அடிநிலையில் வாழும் பின்தங்கிய மக்களே இத்தகைய பாதிப்புக்குள்ளாகி உள்ளார்கள். இவ்வாறானவர்கள் இடம்பெயர்ந்தோரின் குடியிருப்புக்கள், மீள்குடியேறிய பகுதிகளில் செறிவாக வாழ்கிறார்கள். போரில் பெற்றோரை இழந்த பல பிள்ளைகள் வயதான பேரன் பேத்திமாருடன் வாழ்கிறார்கள். உடல் ஊனமுற்று மன அழுத்தங்களுக்குள்ளான பிள்ளைகளும் எமது சூழலில் வாழ்கிறார்கள். சிறுவயதில் வேலைக்குப் போக நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இதனால் பொதுக்கல்வியை பெறாமல் இடைவிலகி விடுகிறார்கள். இவர்களைக் காப்பாற்றி கல்விக்குள் கொண்டு வருவதற்கான சமூக அக்கறை எம்மிடம் இல்லை. எமது அரசியல் வாதிகளிடமும் இல்லை. இன்று இலவசக்கல்வியின் நன்மைகளைச் சுகிப்பவர்கள் சமூகத்தில் மேன்நிலைப்பட்டவர்களே. உண்மையில் போய்ச்சேர வேண்டியவர்களுக்கு இலவசக் கல்வி போய்ச் சேரவில்லை. அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும்கூட பாடசாலையின் உள் கட்டமைப்பிலும், அதிபர், ஆசிரியர்களுக்கான செயலமர்வுகளை நடாத்துவதிலும் பெரும் நிதியை வீணடிக்கின்றனரே தவிர, கல்வியில் புறக்கணிக்கப் பட்டவர்களின் தேவைகளுக்கு செலவு செய்வதில்லை.

கல்வியின் ஆபத்துவிளிம்பில் உள்ள இப்பிள்ளைகள் மீது என்றுமே எனக்கு பரிவு உண்டு. அப்படியானவர்களை நேரடியாக அணுகி பலரை மீளவும் பாடசாலைக் கல்வியினுள் சேர்த்துள்ளேன். அதுபோல, அலுவலகங்களில் கடைநிலை ஊழியர்களது பிரச்சினைகளும் எனக்குப் பரிச்சயமானவைதான். இத்தகையவர்களின் அவலங்கள் என்னை வெகுவாகப் பாதித்திருக்கின்றன. இந்த கள அனுபவங்களை சிறுகதைகளில் கொண்டுவர முயன்றிருக்கிறேன்.

**வே.ஐ.வரதராஜன்**

**தாங்கள் ஒரு சிறுகதை எழுத்தாளர் என்பதைவிட ஒரு விமர்சகராகவும் பல இதழ்கள் மூலம் இனங்காட்டியுள்ளீர்கள். கட்டுரைக்கும், சிறுகதைக்குமான மொழியினைக் கையாளுவதில் ஏதேனும் இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளதா?**

**மு.அநாதரட்சகன்**

நாம் எல்லோரும் ஒருவகையில் விமர்சகர்கள் தான். எல்லோருக்கும் பகுத்தாய்கின்ற விமர்சன மனம் என்பது இயக்கம் பெறுகிறது என்பது தான் உண்மை. நாம் எமது வாசக அனுபவத்தில் படித்தவை பற்றி எமக்கான தளத்தில் பார்வையில் நின்று அபிப்பிராயம் கூறும்போது அது விமர்சனமாக வெளிப்படுகிறது. அந்த வகையில் எனக்கென்று ஒரு பார்வைத்தளம் உள்ளது. கட்டுரை என்று வரும்போது அதன் மொழி சற்று வித்தியாசமானதுதான். மொழிப் பிரயோகத்தில் கனதியை இறுக்கத்தைக் கவனிப்பேன். சிறுகதை மொழி என்பது அவ்வாறனதல்ல. அதில் நெகிழ்ச்சித்தன்மை,

சொற்செட்டினைக் கையாளுவேன்.

இரண்டும் வெவ்வேறு விதமான அறிவுணர்ச்சியை (perception) தருபவை. இவற்றில் எனது மொழியைக் கையாள்வதில் சிரமங்களை ஏற்படவில்லை என்றே கூறுவேன்.

**வே.ஐ.வரதராஜன்**

**இலக்கியங்கள் மனிதநேயத்தை வலியுறுத்துகின்றன என்ற தன்மையை விடுத்து சிலவேளைகளில் தடம்மாறிப்போகும் ஆக்க இலக்கியங்கள் பற்றிய தங்கள் கருத்து யாது?**

**மு.அநாதரட்சகன்**

கலை இலக்கியங்கள் மனித மனங்களைப் பண்படுத்த வேண்டும், சகமனிதனை நேசிக்க வேண்டும், மானிட நேசிப்பை மக்களது மனங்களில் விதைக்க வேண்டும் என்பது அடிப்படையான விடயம். இன்று வருகின்ற சிலவற்றைப் படிக்க நேர்கையில் இலக்கிய உலகம் நச்சுப்பட்டுவிட்டது போல் தெரிகிறது. பரஸ்பர வசை பாடல்கள், கொச்சைப்படுத்தல்கள், அந்தரங்கத்தைச் சீண்டிப் பார்த்தல் என்கிற அளவுக்கு ஆரோக்கியமற்றுப் போய்விட்டதோ என எண்ணத் தோன்றுகிறது. ஆற்றலும், தகைமையும் உள்ளவர்களே இப்படி தரமிழந்து போவது கவலை அளிக்கிறது

முன்னர், கருத்துநிலையில் எதிரெதிராக இயங்கியவர்களிடையே கூட ஒரு நாகரிகம் இருந்தது. அதை இயன்றளவு கடைப் பிடித்தார்கள். இலக்கிய ஈடுபாட்டுக்கு ஒரு நோக்கம் இருந்தது. தளம் இருந்தது. இன்று அந்த நிலைமை காணப்படவில்லை. இன்னொரு படைப்பாளியின் சுயத்தை ரணப்படுத்தக் கூடியவகையில் எழுதுவது அகமன உழைச்சலை ஏற்படுத்திவிடும். இதனால் அப்படைப்பாளியின் சுய பலம் பாதிக்கப்படுகிறது. தொடர்ந்து படைப்பில் ஈடு படவும் தயக்கம் காட்டலாம். எனவே, தனிநபர் தாக்குதல்கள் நீண்டகாலத்தில் இலக்கிய வளர்ச்சிக்கு ஆரோக்கியமாக இருக்காது. இது என் தனிப்பட்ட கருத்து.

**வே.ஐ.வரதராஜன்**

**ஒரு தீவிர வாசகன் என்ற அடிப்படையில் தமிழில் வந்த இலக்கியப்படைப்புக்களிலா அல்லது பிறமொழி இலக்கியப் படைப்புக்களிலா காத்திரத்தன்மை பிரதிபலிக்கின்றன என்பதை பதிவு செய்யுங்கள்?**

**மு.அநாதரட்சகன்**

முதலில் நான் தீவிர வாசகனல்ல என்பதைக் கூறுகிறேன். வாசிப்பில் "தீவிரம்", "அதி தீவிரம்" எனப்பார்ப்பதில் எனக்கு உடன்பாடில்லை. அப்பதங்கள் கூட அச்சமூட்டக்கூடியவை. எனது வாசிப்பு அனுபவத்தில் உங்களது வழிகாட்டல் பெரியது. உங்களைப் போன்றவர்கள் தேர்ந்து தரும் நூல்களை வாசிக்கின்றேன். அவ்வளவுதான்.



எமது தமிழ்ச் சூழலில் வந்தவை தரம் குறைந்தவை அல்ல. பல நல்ல படைப்புக்கள் வந்துள்ளன. சமூகச்சூழலில், தனிமனிதனிடத்தில் எழும் பிரச்சினைகளை சித்திரிப்பதில் வெற்றி கண்ட படைப்புக்கள் பல உள்ளன. அவை எமது சமூகம் குடும்பம், தனிமனிதன் சார்ந்த பல தகவல்களைத் தந்துள்ளன.

ஆனால் தமிழில் வந்த மொழிபெயர்ப்புக்கள் இவற்றை விஞ்சியே நிற்கின்றன. ரஷிய மொழிப் படைப்புக்கள் என்ற வகையில், தோல்ஸ்ரோயின் "அன்னா கதிரினா", "புத்துயிர்ப்பு", அன்ரன் செக்கோவின் "மூன்று ஆண்டுகள்", தஸ்தாவொஸ்கியின் "வெண்ணிற இரவுகள்", "கரமசோவ் சகோதரர்கள்", ஒஸ்திரோவ்ஸ்கியின் "வீரம் விளைந்தது", லத்தீன் அமெரிக்க எழுத்தாளர் சினுவா அச்சுபேயின் "சிதைவுகள்", "வீழ்ச்சி", இந்தியப் படைப்புகளான, பிரேம்சந்தின் "கோதானம்"(இந்தி) சிவராம கரந்தின் "மண்ணும் மனிதரும்", "சோமனின் உடுக்கை" (கன்னடம்), தகளியின் "கயிறு"(மலையாளம்), வைக்கம் முகம்மது பசீரின் "இளம் பருவத்து தோழி" மற்றும் மராத்தி தலித் படைப்புக்களான, லட்சுமன் மனோவின் "உபாரா"(அன்னியன்), லட்சுமன் கெய்க்வாடின் "உச்சாலியா"(பழிக்கப்பட்டவன்) கிஷோர் சாந்தாபாயின் "குலாத்தி"(தந்தையற்றவன்)

இவை எனது ஞாபகத்திற்கு வந்தவை. இன்னும் பல உள்ளன. இவற்றில் தெரியும் தர்க்கச் செறிவும், தரிசனமும் விரிவும், பன்முகத்தன்மையும் எனது வாசக அனுபவத்திற்கு செழுமை சேர்த்தவை. இவை தரும் உணர்வுகள் தமிழ்ப்படைப்புக்களில் கிட்டவில்லை என்றே கூறுவேன். இன்னொரு விடயத்தையும் அழுத்தமாகக்—

கூறவேண்டும் - இம்மொழியெபர்ப்புக்களை தமிழுக்குத் தந்த மொழிபெயர்ப்பாளர்களது பணி மகத்தானது. அவர்களது உழைப்பையும் படைப்பாளிக்குச் சமதையாக மதிக்க வேண்டும் என்பது எனது அபிப்பிராயம்.

**வே.ஐ.வரதராஜன்**

**இடதுசாரி இலக்கியப் படைப்புகள் ஈழத்து இலக்கியத்தில் ஒரு காலகட்டத்தில் ஏற்படுத்திய மாற்றங்கள் பற்றிக் கூறமுடியுமா?**

**மு.அநாதரட்சகன்**

ஈழத்தில் பொதுவாக இடதுசாரி இலக்கியப் படைப்புக்கள் ஐம்பதுகள் முதல் எழுபதுகள் வரை செல்வாக்குப் பெற்றிருந்தபோது இலக்கியத்தின் நோக்கிலும், போக்கிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. ஈழத்து இலக்கியத்துக்கு புதிய கருத்தாக்கங்கள், பார்வைகள் கிடைத்தன. இதனால் ஈழத்து இலக்கியத்தின் ஆற்றல் வலுவடைந்தது என்பதை மறுக்க முடியாது. சமூகத்தில் அடிநிலை மக்களது பிரச்சினைகள் இலக்கியத்துக்குள் கொண்டு வரப்பட்டது. ஆக்க இலக்கியங்களில் கோட்பாடு பற்றிய பிரக்ஞை உருவானது. ஈழத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் குரலை முன்வைத்த படைப்புகள் தோன்ற இடதுசாரி இலக்கியமே வழிகாட்டியது. மாக்சிய விமர்சன செல்நெறியை வளர்த்த பங்கும் அதற்குண்டு.

அத்துடன் கலை இலக்கியங்களின் உருவாக்கத்தில் சமூகத்தின் இயங்கியல் கூறுகளை இனங்காட்டியதும் இடதுசாரி இலக்கியப் படைப்புக்களே.

இடதுசாரிப் படைப்புகளே வர்க்க அடிப்படையையும், அரசியலையும் முதன்மைப்படுத்தின. ஒடுக்கப்பட்டவர்களிடையே இருந்து படைப்பாளிகள் உருவாக முடிந்தமைக்கும் ஒருவகையில் துணை செய்தது இடதுசாரி இயக்கமும், படைப்புக்களுமே ஆகும்.

இன்று, இடது சாரி இலக்கியம் என்றால் முகம் சுழிப்பவர்கள் உள்ளார்கள். மனிதகுலத்தில் ஏற்றத்தாழ்வுகள், ஒடுக்குமுறைகள் இருக்கும் வரை இலக்கியத்தில் இடதுசாரிப் பார்வை இருக்கவே செய்யும். அதுகாலம் காலமாகவே தொடரும். சமகால வாழ்வினை விட இன்னும் சிறந்த வாழ்வை நோக்கிய பயணத்தையே படைப்பின் இலட்சியமாகக் கொண்டது இது. இன்றைய வாழ்க்கை யதார்த்தம் என்ன? கோளமயமாதலும், அதன் விளைவான நுகர்வுக் கலாசாரமும் மனிதனுக்கு தீங்கு விளைவிக்கவில்லையா? அது மனிதனை மனிதன் சுரண்டுவதை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லையா? இன மத சாதி ஒடுக்குமுறை இன்று அற்றுப் போய்விட்டதா? இவை பற்றியெல்லாம் எம்மில் எத்தனைபேர் எழுதுகிறோம். இவை அடிப்படையில் இன்றைய படைப்புக்களின் மீது எழுப்பப்படும் கேள்விகளே. இவற்றுக்கான விடைகளை இடதுசாரி இலக்கியத்தில்தான் பெற முடியும். இவற்றை விட்டு விட்டு நாம் வானத்தில் சஞ்சரித்துக் கொண்டு மனவெளி யாத்திரை போவதால் யாருக்குப் பயன். கீழே இறங்கி வந்து அல்லலுறும் மக்களின் அவலங்களைப் பார்க்க வேண்டும்.

**வே.ஐ.வரதராஜன்**

**ஈழத்து இலக்கியத்துக்கு வலுச்சேர்த்தவையாக பல சிற்றிதழ்கள் காத்திரமான பங்களிப்பைச் செய்துள்ளன. இவ்வகையில் "ஜீவநதி"யின் வகிபங்கு எத்தகையது எனக்கூறமுடியுமா?**


**மு.அநாதரட்சகன்**

கடந்த காலத்தில் குமரன், அலை, சமர், மல்லிகை போன்ற சிற்றிதழ்கள் காத்திரமான பங்கையாற்றின. இவை எமது கலை இலக்கிய கலாசாரச் சூழலில் புதிய விடயங்களை கட்டமைக்கும் நோக்கோடு வெளிவந்தன. அவை சென்றடைந்த வாசகர்வட்டம் எதுவாக இருந்தாலும், அவை உருவாக்கிய கருத்து நிலை பலமாகவே இருந்தது.

தற்போது வெளிவருகின்ற ஜீவநதி, ஞானம், கலைமுகம், தாயகம், மகுடம் என்பவை கூட சிற்றிதழ்களே. இவை ஒவ்வொன்றும் அவற்றின் நோக்கில் தனித்துவமானவை. தமக்கென தனித்த பார்வை கொண்டவை. இவற்றின் பங்களிப்பை குறைத்து மதிப்பிட முடியாது.

ஜீவநதியினைப் பொறுத்தவரை தனது இலக்கிய முயற்சிகளை பரந்த தளத்துக்கு முன்நகர்த்தி வருகின்றதை அவதானிக்க முடிகிறது.. அனுபவம் வாய்ந்த ஆளுமைகளின் பின்புலத்தில் வருவது இதன் பலம். சிறுகதை, குறுநாவல், கவிதை, வரலாறு, பண்பாடு, தத்துவம், சினிமா, நேர்காணல், மொழிபெயர்ப்புகள் என்பவை தொடர்பில் பல்துறை சார்ந்த விடயங்கள் வெளிவருகின்றன. உள்நாட்டவர்களுக்கும், புலம்பெயர் நாட்டவர்க்கும் களம் கொடுத்துள்ளது.

அத்துடன் "ஜீவநதி"யின் சிறப்பிதழ்கள் முக்கியமானவை. கவிதை சிறப்பிதழ், சிறுகதை சிறப்பிதழ், மலையகச் சிறப்பிதழ், கே.எஸ்.சிவகுமாரன் சிறப்பிதழ்... இன்னும் பலவற்றைக் கூறலாம். இதனை விட ஜீவநதியின் பதிப்பு முயற்சி பிரமிக்க வைக்கிறது. இதுவரை முப்பத்தெட்டு நூல்களை வெளியீடு செய்துள்ளது இதன் சாதனை. பலரது கட்டுரைகள், கவிதைகளை தொகுத்து நூல்களாக வெளியிட்டு உள்ளது. அண்மையில் கூட காலநதியின் கற்குழிவு என்ற சிறுகதைத் தொகுப்பினை வெளியிட்டுள்ளது. யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த நாற்பது எழுத்தாளர்களது படைப்புக்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இவை ஜீவநதியின் ஆக்க முயற்சிகள் மற்றும் அறிவுச் செயற்பாட்டை சாத்தியப்படுத்தியுள்ளது. ஜீவநதியின் இன்னொரு செயற்பாட்டுத்தளம் "அவை"(Forum) என்ற கலை இலக்கிய சமூக வட்டத்தின் இயங்குநிலை. "அவை"யில் பல்துறைசார்ந்த ஆளுமைகள் அழைக்கப் பட்டு கலந்துரையாடி கருத்துப் பரிமாற்றம் இடம் பெறுகின்றது. இது கூட ஜீவநதிக் குடும்பத்தின் இலக்கியப் பங்களிப்புத்தான். அந்த வகையில் "ஜீவநதி" தனது தடத்தில் பயணித்து ஈழத்து இலக்கியத்தின்வளர்ச்சிக்குவலுச்சேர்க்கின்றது.





அஞ்சலி





# ரொபின் வில்லியம்ஸ்

அபூர்வன்













அமெரிக்க சினிமா உலகின் கவன ஈர்ப்பிற்குரிய நகைச்சுவை நடிகரான ரொபின் வில்லியம்ஸ் ஒகஸ்ற்.12.2014 அன்று, தனது 63 வது வயதில் மரணமடைந்துள்ளார். "Stand up comedy" ஊடாக மேடை நிகழ்ச்சிகளில் பங்கேற்று, தொலைக்காட்சியில் நுழைந்து Can I do It Till I need Classes (1977) என்ற படத்தின் மூலம் திரையுலகில் பாதம் பதித்தார். அங்கத ஆற்றுகையின் செல்நெறியில் கோடிக்கணக்கான சுவைஞர்களை ஈர்க்கும் வகையிலே பல படங்களில் நடித்துள்ளார். Good morning Vietnam(1987), Dead poets society(1989), Mrs.Doubt fire(1993), Good will Hunting(1997), Patch Adams(1998), Bicentennial man(1999) என்பன விதந்து குறிப்பிடத்தக்க திரைப்படிமங்களாகும்.


உளப்பாதிப்பிற்கு உள்ளான மனிதர்களுக்கு மருத்துவம் புரியும் நிபுணராக நடித்த Good will Hunting திரைப்படத்திற்காக ஒஸ்கார் விருது பெற்றுள்ளார். மருத்துவமனைக்குள் கும்மாளமிடும் சிரிப்பு மருத்துவர் வேடமேற்ற Patch Adams திரைப்படத்தில், அப்பிள் பழத்தை மூக்கிலே செருகி நோயாளிக் குழந்தையை மகிழ வைக்கும் காட்சியை எவருமே எளிதில் மறந்து விட முடியாது. இத்திரைப்படமே தமிழில் "வசூல்ராஜா MBBS" என நகலெடுக்கப் பட்டுள்ளது. விவாகரத்தை மறுபரிசீலனைக்குட்படுத்திய Mrs.Doubt fire திரைப் படத்தையே தமிழில் "அவ்வை சண்முகி" என மீளுருவாக்கம் செய்துள்ளனர். Bicentennial man படத்தின் கதையும் தமிழ்திரை விரும்பிகளுக்கு அதிர்ச்சி தரும் வகையிலே தான் காணப்படுகின்றது. விலைக்கு வாங்கப்பட்ட ரோபோ ஒன்றுக்கு உணர்வுகள் தோன்ற, அந்த வீட்டுப் பெண்ணையே காதலிப்பதும், இயந்திரத்தைக் காதலிக்க முடியாதென அவள் மறுப்பதும் தன்னை மனிதனாக அங்கீகரிக்கக்கோரி ரோபோ நீதிமன்றம் செல்வதுமான கதையினை அத்திரைப் படத்திற் காணலாம். வேலைக்கு கூலி கேட்பது, சமையலுக்கு விறகெடுத்து உதவுவது("எந்திரன்" சமையலே செய்கிறது) குதிரை பொம்மையை உடைப்பது ("எந்திரன்" T.V உடைக்கிறது) எனப் பல காட்சிகள் இயக்குநர் ஷங்கரின் பார்வையில் விழுந்துள்ளன. (புத்திசாலி(!) இயக்குநர் என்பதால் பாதியையே நகலெடுத்தார். மிகுதிக்கு வில் சிமித் நடித்த I Robot உதவியது)

முகிழ்நிலைக் காலத்தில் போதைப்பழக்கத்திற்கு அடிமையாகியிருந்த ரொபின் வில்லியம்ஸ் அதிலிருந்து விலகித் தற்காத்துக்கொள்ள மீட்சி மையத்தில் இணைந்துள்ளார். வரட்டு கௌரவத்தினையும் தாழ்வு மனப் பாங்கினையும் சலவை செய்யும் வகையிலான வகிபாகத்தை அற்புதமாக வெளிப்படுத்திய அங்கத ஆளுமை, கலிபோணியா மாகாணத்திலுள்ள அவரது இல்லத்தில் தற்கொலை புரிந்துள்ளமை திரைச்சுவைஞர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. "ரொபின் வில்லியம்ஸ் தற்கொலை செய்து கொண்டதாக வரும் செய்திகள் உண்மையென்றால், அவரை நான் அதற்காக வெறுக்கிறேன். அவரைப் போன்ற ஒரு திறமையான கலைஞரிடமிருந்து நான் இதை எதிர்பார்க்கவில்லை" என ரொபின் வில்லியம்ஸின் தீவிர ரசிகரான நடிகர் கமல்ஹாசன் தனது இரங்கற் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். நகைச் சுவை நடிகராக மிளிர்ந்தாலும் Good morning Vietnam, Dead Poets Society போன்ற படங்களில் அவரது மாறுபட்ட ஆற்றுகையினை தரிசிக்க முடியும். மாறுபட்ட குணாம்சங்களை எள்ளல் சார் உடல்மொழியோடு மிக நேர்த்தியாக வெளிப் படுத்திய அங்கதக் கலைஞனின் மரணம் அவலம் நிறைந்ததாக அமைந்தமை நெருடலாகவே உள்ளது.



## கிண்ணியா சபருள்ளா

இன்றோடு இருபதாவது நாள்... இருபதாவது நாளின் தொடக்கம்.... பத்தொன்பது நாட்களின் மரணக் கிரியையின் காலை எட்டு மணியிலிருந்து மாலை நான்கரை வரைக்கும் சுமார் பதினாரடி உயரத்தில் சுற்றிக் கட்டப்பட்ட அந்த கொம்பவுண்டுக்குள் சதாவும் சுற்றிக் கொண்டிருப்பதும் தரப்படுகின்ற வேலைகளை அல்லது அதிகாரத் தோரணையில் அதிகாரிகள் மிரட்டி பணியச் செய்து

# விளிம்பு நிலை மனிதர்கள்

கட்டளையிடப்படுகின்ற வேலைகளை செய்வதும் நான்கரை மணிக்குப் பின்னர் உள்ளே தள்ளி அடுத்தநாள் காலை எட்டு மணிவரை...

உள்ளே அடைபட்டுக்கிடக்க வேண்டும். எல்லாம் கழாகத்தர்... எனது கழாகத்தர் மட்டும் கருப்பு மையால் எழுதப்பட்டிருக்க வேண்டும். அணுவளவு ஒளிக்கதிரும் கசியாத இருண்ட குகைக்குள் நான் இருக்க வேண்டும் என்று காலம் இரக்கமின்றி சொல்லுக்கின்ற போது... இல்லாதவனுக்கு எதிர்வினையாற்றுகின்ற திராணி எப்போதுமே இருப்பதில்லை.



நேரம் இரவு பத்து மணி.

அந்த அறைக்குள் சுமார் முப்பது பேர் மட்டில் தங்களுக்கேற்ற வசதிகளை அமைப்பதில் தோல்வி கண்டு சுருண்டு போய்க்கிடந்தனர். வழமை போலவே அனீபா இன்னும் கண்களை மூடி விழித்துக் கொண்டிருந்தான். ஒற்றை லைட் மட்டும் தனித்து நின்று கொண்டு அந்த அறையில் வெளிச்சத்தின் உற்பத்திக்காக போராடிக் கொண்டிருக்கையில் அனீபாவும் வராத உறக்கத்தோடு வாற்போர் செய்து கொண்டிருந்தான்.

என்னைப் போல இந்த அறையில் எல்லோரும் இந்தக் கணத்தில் போராடிக் கொண்டிருப்பார்களோ பக்கத்தில் மிக நெருக்கமாய் தனது உடலோடு உரசிப் படுத்துக் கொண்டிருந்த பெரேரா என்கிற அரச திணைக் களமொன்றில் பிரதான கணக்காளராக பணியாற்றிக் கொண்டிருந்த பெரேரா என்கிற டெஸ்மன் தூக்கத்தில் தன் மீது போட்ட வலக்காலை சற்று மெண்மையாக எடுத்து ஒரு பக்கத்தில் போட்டுவிட்டு புரண்டு படுத்த அனீபாவை தூக்கம் வெளியே போ வெளியே போ என்று விரட்டியடித்துக் கொண்டிருந்தது.

பெரேராவுக்குப் பக்கத்தில் சில்வா.... வஹலே கெதர வசந்தகுமார... அப்புறம்... யா அல்லாஹ் எனக்கு மட்டும் ஏனிந்த...அது யார்...அது வாடி சரத்...இன்னும் பெயர் தெரியாத பலர்.

மீதி வார்த்தைகள் இப்போதெல்லாம் வராமலே நா உச்சரிக்கும் இந்த வாக்கியம் பாதியிலேயே தந்தி அறுந்து போய்... இங்கே ஒட்டு மொத்த வாழ்க்கையுமே அலுத்து போய்க்கிடக்கின்றது. இந்த பத்தொன்பது நாளில் திருகோணமலை மறியற்சாலை அவருக்கு ஓரளவு பழக்கப்பட்டுவிட்டது... நரகம்தான்... ஆனாலும் மனசைக் கல்லாக்கிக் கொண்டு கல்லாக்கிக் கொண்டு... கல்லாய் இறுகிப் போய்கிடக்கின்றார்... காலத்தின் மாயாஜாலம்.

அவரைப் பொறுத்தவரை

இருட்டும் வெளிச்சமும் ஒன்றுதான். அவர் படுத்திருந்த அந்த அறையில் எந்தவித மின்விசிறியும் இல்லாததால் ஏற்பட்ட உடற் புழுக்கத்தினை விட

உள்ளத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் அந்தப் புழுக்கம்.. நாசித் துவாரங்களில் கதவுகளில்லாத மறியற் சாலைகளின் அழுக்குப் படிந்த கக்கூசுகளிலிருந்து.. என்ன அது

வ்வே...

ஏன் ஒரு மின் விசிறி கூட இந்த ஹோலில் இல்லை..." அதுக்கு காரணமிருக்கு... மறியச்சாலைக்கு கொண்டு வரப்படுறவங்கள்ள சிலர் கஷ்டம் தாங்காம சில நேரம் தற்கொல பண்ணிக்குவாங்க...தற்கொல செஞ்சுக்க ஃபேன யூஸ் பண்ணிருவாங்கன்னு பணம்... ஏன்னா முந்திய காலத்துல அப்படி மறியச்சாலைல நடந்திருக்கு...அதுக்காகத்தான் மறியச்சாலைல ஃபேன் போடுறது கெடையாது..." என்று மறியற் சாலை அனுபவஸ்தர் ஒரு நாள் அடுத்தவரிடம் சொல்லிக் கொண்டிருந்த போது அனீபாவின் காதில் விழுந்தது.

லொஜிக் சரியாகத்தானிருக்கின்றது

இப்போது ஃபேனற்ற மறியற்சாலை கலா சாரம்....புழுக்கம்...கக்கூஸ் நாற்றம்...இதற்கெல்லாம் பழக்கப்படு மனமே இல்லாவிட்டால் ஒவ்வொரு கணமும் இங்கே நரகம்தான்.. ஒவ்வொரு நிமிஷமும் தீப்பிடிக்கும்... பிராணவாயுவும் உன்னைப் பிணமாகப் பார்க்கும். செத்து செத்தே வாழ்வாய்.. அது எதனோடும் ஒப்பீடு செய்து பார்க்கவே முடியாத துயரத்தின் அக்னிக் குண்டம். செத்துப் போக நினைத்தால் கூட உன்னால் இங்கே தற்கொலை கூட செய்து கொள்ள முடியாது... கயிறில்லை... கயிற்றை மாட்ட பேன்களிலில்லை. கக்கூசுக்குள் சென்று ஏதாவது செய்யலாம் என்றால் மூடிக்கொள்ள கதவுகள் இல்லை.. ப்ளேட் கிடையாது.. இப்படி செய்யலாம்... அடுத்தவனிடம் சொல்லி கழுத்தை நீட்டி குரல்வளையை வேண்டுமானால் குதறி எறியச் செய்யலாம்.

உறங்க மறுத்த கண்களுக்குள் ரத்தக் காட்டேறிகள் சுதந்திரமாக உலாவித் திரிந்தன. கரு வளையம் விழுந்த அவனது வலக்கண்ணில் சோகம் சிருங்காரம் செய்யும் அவனது மனைவியின் பாதிதாபத் துக்குரிய முகமும்... இடக்கண்ணில் பொது வைத்திய சாலையில் இன்னும் நோய் சுகமாகாத நிலையில் ஒரு சிற கொடிந்த புறாக்குஞ்சான அவனது மகள் சஹானாவும்..

இவர்களுக்காகவாவது இவன் வாழ வேண்டும் என்பது கூட கழா கத்ர்தான் விதியின் எளிதற்ற சூத்திரத்தில் விடைதெரியாது முழிக்கும் இவனுக்கு வாழ்க்கை ஒரு அட்சரகணிதம்.. படிக்கும் வயசில் வராத கணிதத்தைப் போலவே இப்போது இவனது வாழ்க்கை யும்... அப்போது கணிதம் வந்திருந்தால் இப்போது அவன் இந்த புழுங்கிய நான்கு சுவற்று நரகத்துக்குள் கிடந்து அழுது கொண்டிருக்க மாட்டானோ... சாதாரண தரத்தில் கோட்டை விட்டவன்..அதிலும் கணிதப்பாடத்தில் கோட்டை விட்டதில் படிப்பு முடிவுக்கு வந்து அப்புறம் அன்றாடக் காய்ச்சியாக மாறிப் போனான்.

சிறுவர் துஷ்பிரயோக வழக்கில் கைது செய்யப் பட்டு கடந்த இரண்டு மாதகாலமாய் உள்ளேயிருக்கும் அறுபது வயதான அபோன்ஸோ குறட்டைவிடும் சப்தம் அனீபாவின் காதுகளுக்குள் இத்துப்போன டேப் ரெக்கோர்டரிலிருந்து வருகின்ற ஆயிரத்து தொள்ளா யிரத்து ஐம்பதுகளில் வட இந்திய இசையாக அது வந்து விழுந்தது. அறுபது வயசுக்கார அபோன்ஸோ சிறுவர் துஷ்பிரயோக வழக்கில் பொலிஸாரால் கைது செய்யப் பட்டு உள்ளே கிடக்கின்றார்...பாலிச்சை வயசு பார்க் காது என்பதெல்லாம் சரிதான் அதற்காக இந்த வயசில் போயும் போயும் ஒரு சிறுவனை....சற்றுக் கோபம் கூட வந்தது அனீபாவுக்கு...எனினும் அது வந்த கொஞ்ச நேரத்தில் க்ளீன் போல்டாகி விட்டது...நமக்கே ஆயிரம் பிரச்சினை...இருபது நாட்களாக ஜெயில் களி... வாழ்வதற்கே வக்கத்து நிற்கையில் அடுத்தவன் பற்றிய நியாய அநியாயங்கள் அவசியமற்றது.

புதினமான மனிதர்கள்... சிந்தனை மன அழுத்தத்திலும்.... அழுக்குப் படிந்து பிசுபிசுக்கும் தரையில் இப்படி எப்படி குறட்டை சங்கீதத்தோடு ஒரு குதூகலத்தூக்கம்... இது சாத்தியமானதா... இதோ சாத்தியம் என்பது நிரூபணமாகிக் கொண்டிருக்கின்றது.

பெரேரா.... தான் பணி புரிந்த திணைக்களத்தில் ஐம்பது இலட்சம் ரூபா கையாடல் செய்த குற்றத்திற்காக உள்ளே வந்திருக்கின்றார்... ரொம்பவும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்.. சுகர் பேஷன்ட்.... முன்னூற்று ஐம்பதினை சுகர் தாண்டிவிட்டதாம்... எப்படியும் அடுத்த கிழமை பிணை கிடைத்துவிடும் என்ற அடுத்த கிழமை நம்பிக்கையில் கிட்டத்தட்ட இதுவரை ஒன்றரை மாசத்தை கடத்தியிருக்கின்றார் பாவம் மனுஷன்.. அங்கால இங்கால என்று தூக்கம் வராமல் உழன்று கொண்டிருந்தார்.

"இப்ப புதுசா வந்திருக்குற நீதவான் சரியான கறாரப் பேர் வழியாம். பிணையே கொடுக்க மாட்டா ராம்... நம்மளும் கேஸ்ல மாட்டுப்பட அந்தாளும் வந்து தொலைச்சிட்டான்...எல்லாம் நம்ம தலைவிதி பொய் வழக்கப் போட்டு பொலிஸ்க்காரன் என்னப் புடிச் சிட்டான்..." என பெரேரா அனீபாவிடம் சொல்லி இன்று பகல் தலையில் அடித்துக் கொண்டார்.

"அதெல்லாம் அரசாங்கக் காச கையாடல் செய்யக்க இருந்திருக்கனும்...இப்ப அழுது என்ன பிரயோசனம்" என பெரேராவிடம் சொல்ல வேண்டும் போலிருந்தாலும் அனீபா தனது நாவுக்கு தடையுத்தரவு போட்டு விட்டார். "என்ன சொல்லி என்ன செய்ய... நாமளே உள்ளுக்குள்ள கெடந்து வெந்துக்கிட்டு இருக்கோம்..நாம ஏதாவது கேக்கப் போயி..." நீ மட்டும் ரொம்ப யோக்கியம்...குத்தம் பண்ணாம எப்படி உள்ளுக்க வந்தன்னு திருப்பிக் கேட்டுட்டாளங்கே போய் முகத்த கொண்டு வைக்கின்றது.

சிறைச்சாலையினைப் பொறுத்தவரை அங்கிருப்பவன் உண்மையில் குற்றம் செய்தானா இல்லையா என்றெல்லாம் பார்க்க மாட்டார்கள்... அங்கிருப்பவர்களெல்லாம் குற்றவாளிகள்தான். அனீபா என்ன செய்தான்... ஒன்னுமே செய்யாதவனை பொலிஸ் பிடித்து வந்து கேஸ் போட்டு...இப்போ அவனும் குற்றவாளியாக்கப்பட்டவன். இவற்றையெல்லாம் ஆராய்ந்து கரக்டர் சேர்ட்டிஃபிகேட் கொடுப்பதற்கு எந்தத் தேவையும் எவருக்கும் அங்கு இருக்கவில்லை என்பது மட்டும் அக்மார்க் யதார்த்தம்.

சுதர்சன்... இளைஞன்... களவுக் கேசில் வந்திருக்கின்றான்... பத்தாவது கேஸாம்.

ரூபன்... பாலியல் இடையூறு குற்றம்... பக்கத்து வீட்டுப் பெண்ணுக்கு சண்டை வாய்த்தகராறின் போது சாரத்தைஉசத்திக்காட்டினானாம்...த்தூ...

மஹ்ரூப் குடித்துவிட்டு பக்கத்து வீட்டுக் காரனுக்கு கன்னா பின்னா என வாளால் வெட்டி இன்னும் காயப்பட்டவன் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில்... பிழைத்தால் இவன் பிழைப்பான்.. இல்லை யென்றால் கொலைக் கேஸாகிவிடும்.

ரூபசிங்க... கஞ்சாக் கேஸ்.

விமலசிறி... குடு கேஸ்.

இரண்டு பேருக்கும் அஞ்சாரு முற்குற்றங்கள் இருக்கின்றதாம். அதனால் நீதிமன்றம் இவர்களுக்கு கருணை காட்ட....மறுத்து விட்டது ம்ஹூம்.. பொலிஸாரின் கோரிக்கைக்கு ஏற்ப இதோ இந்தா... கடந்த ஒரு வருஷமாக உள்ளுக்குள் இருக்கின்றார்கள். ஆனாலும் என்னமா நிம்மதியா தூங்குகின்றார்கள்.

ஹெபிச்சுவில் கிரிமினல்ஸ் எனப்படுகின்ற பழக்கப்பட்ட வழக்கமாக குற்றம் நிகழ்த்துகின்ற க்ரைம் ராஜாக்கள்... இந்த இடம் அவர்களுக்கு ரொம்பவும் பழக்கப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதனை அவர் களது உறக்க நிலையும் அவர்களது சூழலின் உறங்கு நிலையும் ஒரு படிகக்கல்லின் வெண்மையாக பளிச் பளிச்...

அங்கிருந்த ஒவ்வொருதனுக்கும் ஒவ்வொரு கேஸ்... கஞ்சா... குடு... அடுத்து களவு என்கிற மூன்று டொப் டென்னில் முதல் மூன்று இடங்கள். அதி பயங்கரமாக நாட்டில் பஞ்சம் தலைவிரித்தாடுகின்றது என்ற யதார்த்தம் எவருக்கும் விளங்கும் இந்தக் குற்றங்களின் எண்ணிக்கையின் பெருக்கத்தினை பார்க்கும் போது.

எனினும் நான் செய்யாத குற்றத்துக்காக செய்ததாக அப்பாவித்தனமாக நானே ஏற்றுக் கொண்டு... எதற்கும் வகையில்லாமல் இப்படி நாறிப்போய் நாதியற்றுப் போய் மனிதக் கழிவுகளின் வாசத்தை சல்லாபித்துக் கொண்டு... சாபம் தவிர வேறென்ன...சாபத்தின் ரூபம் பார்ப்பதற்கு அதி பயங்கரமாகத் தோற்றமளித்தது அனீபாவுக்கு.

நீங்க குற்றவாளியா சுற்றவாளியா நீதவான் நீதி மன்றத்தில் கோர்ட் முதலியார் குற்றச்சாட்டுப் பத்திரத்தினை சுருக்கமாக வாசித்துவிட்டு குற்றவாளிக் கூண்டில் பசி, பட்டினி பயம் இயலாமை என அத்தனை யும் மிக்ஸாகிப் பிரசவித்த நடுக்கத்தின் மத்தியில்.... என்ன சொல்ல

"இந்தா கோர்ட் நேரத்த வீணடிக்காம குயிக்கா சொல்லுங்க... நெறய வழக்கு இங்க இருக்கு... இந்த கோர்ட் ஒங்களுக்கு மட்டுமில்ல..." என அதிர்ந்த கோர்ட் துலக் முதலியாரின் குரலும், அந்த பகிரங்க நீதிமன்றில் கூடியிருந்த கறுத்தக் கோட்டுக்குள்ளிருந்த சட்டத்தரணிகள், பொலிஸ் உத்தியோகதர்தர்கள், வன இலாகா அதிகாரிகள், வன வாழ்க்கை அதிகாரிகள், கலால் திணைக்கள அதிகாரிகள், நீர் வள மற்றும் மீன் பிடித் திணைக்கள உத்தயோகத்தர்கள், அங்கே எஸ் எஸ் பி... அத்தோடு பொதுமக்கள்,... கொஞ்ச நஞ்ச ஈரமும் போயே போச்சு... ஏற்கனவே உலர்வலயத்தில் பிரயாணம் செய்த உதடுகள் ஒட்டுமொத்த உமிழ் நீரையும் தொலைத்துவிட்டு ஆனாலும் உயிரின் மேற்பரப்பு வியர்த்துக் கொண்டிருந்தது.

உடலின் ஈரத்துக்கும் உதடுகளின் ஈரத்துக்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன... ஆகக் குறைந்தது குமுதம் ஸ்டைலில் ஆறு வித்தியாசங்கள்... இதை யெல்லாம் யோசிக்க சாவகாசம் தருவதில்லை நீதி மன்றங்கள்.. "குத்தவாளிங்க".. தயங்கித் தயங்கி பயந்து பயந்து அவனாகச் சொன்னான்.

எந்த சட்டத்தரணியும் அவனுக்காக ஆஜராயிருக்கவில்லை.

காரண இல.01

அனீபாவைக் கைது செய்த பொலிஸார் குறிப்பாக கோர்ட்டுக்கு பிடிபட்டவர்களைக் கொண்டு வரும் கோர்ட் சாஜன் "இது சின்னக் குத்தந்தான். நீங்கள் யாரும் பயப்படத் தேவையில்லை (நீங்கள் என்று பன்மையானவை ஏன்? அனீபாவோடு சேர்ந்து இன்னும் பலரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.) பொலிஸின் பொது உபதேசம்.... ஆகவே.. "நீங்க லோயர் யாரையும் பிடிக்கத் தேவையில்ல... அது வீண் செலவு... குத்தவாளியா சுத்தவாளியான்னு கேப்பாங்க... குத்த வாளின்னு சொல்லுங்க... சின்னதா ஒரு தண்டப்பணம் அடிப்பாரு ஜட்ஜ் அய்யா... சின்னத் தண்டப்பணம் வார அளவுக்குத்தான் நாங்க வழக்க போடப்போறோம்...."

காரண இல.02

லோயர் புடிக்க அனீபாவின் கையில் காசு இல்லை. அன்றாடக் காய்ச்சி... வயிற்றுப் பிழைப்பே ஒரு சாதனை என்றாகிவிட்ட நிலையில் வக்கீல் பீஸ்... அவனுக்கு இமாலயச்சாதனை...

காரண இல 03.

கோர்ட்டு, பொலிஸ், சட்டம், வக்கீல்கள் எல்லாம் அவனுக்குப் புதுசு... புதுசு என்பதனைவிட இவை அனைத்தும் அவனுக்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்துகின்ற பேய்கள். பாட்டி சின்ன வயசில் சொன்ன கதைகளில் வருகின்ற பிசாசு கணங்களைப் போல அவனுக்குள் கூரிய நகங்கள் கொண்டு குத்திக் குதறி.... படிப்பறிவில்லாத பாமரன் வாழ்வின் ஒரே ஒரு இலட்சியம் தனதும் தனது மனைவி பிள்ளைகளினதும் வயிற்றுப் பசியை ஓரளவுக்கேனும் தணிப்பதாகும். அந்தளவுக்கு அப்பாவி... இவனிடம் போய் எப்படி..

காரண இல.04

பொலிசாரால் அனீபா கைது செய்யப்பட்டு கோர்ட்டுக்கு கொண்டு வந்து அவனுக்கெதிராக குற்றச்சாட்டுப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு அது வாசிக்கப்பட்டு தான் குறித்த குற்றச்சாட்டுக்கு குற்றவாளி என அவன் சொல்லி நீதவானால் தண்டப்பணம் அடிக்கப்படும் வரை அவனுக்கு உதவி ஒரு சின்னக் குஞ்சு கூட... அப்படி எதுவுமில்லை.... இல்லாதவனுக்கு ரத்த

சொந்தம் கூட மத்த சொந்தமாகக் கூட இருப்ப தில்லை... உள்ளவனுக்கு மற்ற சொந்தம் கூட ரத்த சொந்தமாக இருக்க மறுப்பதில்லை. அது அனீபாவின் விடயத்தில் அக்மார்க் நிகழ்வு.

யதார்த்தத்தின் சுவை எப்போதுமே கசப்புதான்.

இருபத்தொரு நாளைக்கு முன்னர் அனீபா குரங்குபாஞ்சான் காட்டுக்கு விறகு வெட்டப் போயிருந்தான்... அதுவும் ரொம்பப் பயந்து பொலிஸ் தொல்லை... போதாதற்கு எஸ்.டி.எஃப் அம்புஷ் கிடந்து தீடீரென பூதங்களாகி முன்னே வந்து நிற்பார்கள். எந்த அலாவுதீன் இவர்களது விளக்கினை உரசுகின்றானோ தெரியவில்லை... ஆனாலும் அடிக்கடி உரசுகின்ற அந்த அலாவுதீன் ஓர் அரக்கன்... இந்த அனீபா போன்ற அன்றாடப் பிழைப்புக்காரர்களுக்கு.

நாட்டில் யுத்தம் முடிந்து சொந்த இடமான குரங்குபாஞ்சானுக்கு மீள் குடியேற்றம் செய்யப்பட்ட அனீபா தனக்குத் தெரிந்த ஒரே தொழிலான விறகு வெட்டுவதனை பக்கத்தில் பரந்து விரிந்து போயுள்ள காட்டில் இடைக்கிடை செய்து வந்தான் ஏனையவர்கள் போல.... அதுவும் ஒவ்வொரு தடவையும் காட்டுக்கு விறகு வெட்டப்போகும் போதும் உசுரை உள்ளங் கையினில் பிடித்துக்கொண்டு எப்போது பொலிஸ் வரும்... எப்போது எஸ்.டி.எஃப் வரும் என்ற அதி தீவிர அச்சத்தோடு காய்ந்து போன கைகளால் விறகு வெட்டி வெட்டிய விறகுகளை சைக்கிளின் கேரியரில் லாவக மாகக் கட்டி அதனை வீடு கொண்டு வந்த பின்னர்தான் திகிலில்வியர்த்து வழிந்த உசிருக்கு விசிறி கிடைக்கும்.

பயந்த மாதிரியே அன்று நடந்துவிட்டது. பல நாள் திருடன் ஒருநாள் பிடிபடுகின்ற மாதிரி பலநாள் பயம் இதோ இந்த நாளில் பயந்த மாதிரி நடந்தே விட்டது.. கொடிய வெயிலின் ருத்ர தாண்டவத்தில் மொத்த சக்தியையும் திரட்டி விறகுகளை வெட்டிக் கொண்டு சோற்றுக்கனவுகளுடனும் விறால் கருவாட்டுக் கனவுகளுடனும் கொளுத்தும் வெளியில் வந்து கொண்டிருந்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அப்புறம் இதோசிறைச்சாலையில்.

அவன் மட்டுமில்ல அவனோடு சேர்ந்து அன்றையதினம் இன்னும் மூன்று நபர்களும் பொலிஸாரால் ஒரேவிதமான குற்றத்துக்காக கைது செய்யப்பட்டிருந்தனர். அவரவருக்கு அவரது துயரம் அடுத்தவர்களை விட உசத்தியானது. தீவிரமானது.. அனீபாவுக்கும் அப்படித்தான்.. அன்றாடம் ஜனநாயக பயத்துக்கும் சர்வாதிகார குரூரத்துக்கும் அடிமையாகி தொழில் செய்து வயிற்றுப் பிழைப்பு நடாத்தும் இவர்களைப் பொறுத்த வரை இந்த தேசத்தின் சட்டமும் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளும் இரத்தம் அருந்தும் டிராக்குலாக்களாக அடி மனசில் அப்படியே பதிந்து போயிருக்கின்றனர் என்பதற்கு வயிற்றுப் போராட்டத் தில் நிராயுதபாணியாக நிற்கின்ற அனீபாக்கள் நல்ல உதாரணங்கள்.

அரச காட்டுக்குள் எந்த விதமான உத்தரவுப் பத்திரமுமில்லாமல் அத்துமீறி நுழைந்தமை அவ்வாறு அத்துமீறி நுழைந்து எவ்வித உத்தரவுப்பத்திரமு மில்லாமல் அரச காட்டில் மரங்கள் வெட்டியமை மற்றும் அவ்வாறு மரங்களை வெட்டி அரசுக்கு ரூபா முப்பதினாயிரம் நஷ்டம் விளைவித்தமை..

ஏன் என்னைக் கைது செய்தீர்கள் என்று கேட்க வேண்டும் என்று மனசு துடித்தாலும் பொலிசுக்குப் பயந்து அந்தக் கேள்வியை கேட்காமல் இருந்தாலும் அனீபாவுக்கு பொலிஸ் ஸ்டேஷனில் வைத்து யாரோ ஒரு காக்கிவாய் கொச்சைத் தமிழில் விடயத்தினை பராபரித்தது.

என்ட அல்லாஹ்

என்ன அநியாயமிது

பொய்க்கு மேல் பொய்.. ஜனநாயகம் நசுங்கிப் போன அலுமினியத்தட்டில் சர்வாதிகாரத்தின் பித்தளை சில்லறைகள்.. சட்டவாட்சி உயிரினை சர்வாதிகாரம் திண்ணும் அழகினை அந்த ஏழைகளால் சகிக்கவோ ரசிக்கவோ முடியவில்லை.

பொலிஸார் தாள்களை தம்மிஷ்டத்துக்கு தயாரித்து தயாராக வைத்திருந்த குற்றச்சாட்டுப் பத்திரத்தோடு அனீபாவை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது பொலிஸார் அச்சுறுத்தல் கலந்த "லோயர் யாரையும் பிடிக்க வேண்டாம்" என்கிற வாசகத் தினாலும் பீஸ் கொடுக்க ஒத்தை சல்லி கையில் இல்லாத காரணத்தினாலும் அனீபா சட்டத்தரணி எவரையும் தன்சார்பாக பேசுவதற்காக பிடிக்கவில்லை.

சின்னக்கேசு

"குற்றத்தை ஒத்துக்கொண்டா சின்னதா தண்டம் அடிப்பாரு நீதவான் ஐயா..."

என்கிற காக்கி யூனிபோர்மின் யாரது... கோர்ட் சாஜன்... அவன்தான்... அந்த அழுக்கேறிய காக்கியின் வெற்றிலைக்காவி படிந்த பற்களின் இடுக்குகளில் வந்த கறை படிந்த வார்த்தையை பொலிஸ் அச்சத்தாலும் பொலிஸ் திகிலாலும் கசாப்புக்கு கொண்டு வரப்பட்ட பலியாடாக செவிகளில் சேமித்துக்கொண்டு நீதவான் நீதிமன்றத்தில் அனீபாவுக்கெதிராக மூன்று குற்றச் சாட்டுக்களையும் துலக் முதலியார் வாசித்து

சுத்தவாளியா குத்தவாளியா

குத்தவாளிங்க..

ஆச்சு மூன்று குற்றச்சாட்டுக்கும் மொத்தமாக முப்பதினாயிரம் ரூபா தண்டப்பணம்.

என்னது முப்பதினாயிரம் ரூபாவா...

தண்டப்பணத்தை கட்டத்தவறும் பட்சத்தில் ஆறு மாத கடூழிய சிறை..

என்னது ஆறு மாத கடூழிய சிறை தண்டனையா...

தலைசுற்றியது அனீபாவுக்கு.

திகில் உலாவும் கண்களுக்குள் அழுத விழிகளோடு தாம்பத்ய அரசியும், நியூமோனியாவால் பாதிக்கப்பட்டு அரச வைத்தியசாலைகளில் அரை உயிருக்கும் அரை மரணத்துக்கும் இடையில் சமர் செய்து கொண்டிருக்கும் சஹானா.. இரண்டாவது குழந்தை

மாறிமாறி மங்கலாக வந்து போயினர். தண்டப்பணம் கட்ட முடியாமல் இதோ அனீபா இந்த சிறைச்சாலைக்குள் இன்றோடு இருபதாவது நாளாக

முப்பதினாயிரம் தேடி புறப்பட்டுப் போன மனைவியை எதிர்பார்த்து.. எதிர்பார்த்து

இன்றைக்காவது காசு கிடைக்கவேண்டும். என்ட அல்லாஹ்... நான் வெளியே வந்தாத்தானே இந்தக் குடும்பத்த காப்பாத்த ஏலும் என்ன பாடு படு ராங்களோ... சஹானா இன்னும் ஆஸ்பத்திரியிலா கிடக்கா...

விளிம்பு நிலை மக்களின் வயிற்றுப் போராட்டம் மரணம் மட்டும் முற்றுப்புள்ளி எதுவு மின்றி ஆக்ரோஷமாய் தொடர்ந்து கொண்டிருக் கின்றது என்ற கருத்துப்பட அனீபா வெளுத்துப்போன முகத்துடன் வண்ணான் தெரு வண்ணமற்ற துணியில் சாயமின்றிக் கிடந்தான்.

ஒரு இரண்டு நாளைக்கொரு தடவை அனீபாவை ஜெயிலுக்கு வந்து பார்த்துவிட்டுப் போவாள் அவன் மனைவி. அவள் வருகின்ற ஒவ்வொரு தடவையும் எப்படியாவது தண்டப்பணத்தை கட்டுவதற்கான காசை தனது மனைவி கொண்டு வருவாள் என்கிற பகற் கனவோடு

பகற் கனவென்று தெளிவாகத் தெரிந்தும் பகற் கனவோடு அவளது கைகளைப் பார்த்திருப்பான். ஆனால் அவளது பிரகாசமற்ற முகத்தைப் பார்த்தும் அவனது கனவுகள் கருச்சிதைவுக்குள்ளாகி... இத்தோடு பல கருச்சிதைவுகள் ஆயிற்று... நம்பிக்கையில்லாத நம்பிக்கை... பலவீனமான நம்பிக்கையில் ஒரு சில விநாடி களில் சிலிர்த்தெழுகின்ற சந்தோஷம் புஷ்வாணமாகி அவரவர் தலையில் என்ன எழுதியிருக்கோ அதுதானே நடக்கும்..

எல்லா வழிகளும் அடைபட்டதும் இனி எந்த விதமான ஆதாரமும் இல்லை என்கிற விடயம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் நாவின் நுனியில் அனுமதிப்பத்திரம் இல்லாமல் இந்த வார்த்தையில் நதிக்கரை நாகரீகம் வளர்க்கும்.

இன்று மனைவி அவனை விசிட் பண்ணவரும் நாள்... எதிர் பார்ப்போடு.. மனைவியின் முகத்தை யாவது பார்த்து கவலையை கொஞ்சமேனும் அஞ்சோ பத்தோ நிமிஷங்கள் மறந்து அஞ்சோ பத்தோ நிமிஷங் கள் தான் ஜெயில் காவலர்கள் அனுமதிப்பார்கள்... அவளும் என்னதான் செய்வாள் காசுக்கு... உலகம் தெரி யாத அப்பாவி... புருஷனே எல்லாமென்று வாழ்ந்து பழக்கப்பட்ட பொம்பிள... எங்கே போவாள் காசுக்கு... என்ட அல்லாஹ்... வீடு அதனை விட்டால் வாசலென்று வாழ்ந்தவள் வீதிக்கு இறங்கி திசை தெரியாமல் திரிவாளே பணத்துக்கு.... துடிக்கின்ற இதயம் பல நேரங்களில் என்ன செய்ய வேண்டு மென்பதனையே மறந்து போய் விடுகின்றது.

எனினும் எல்லா நம்பிக்கையினை இழந்திருந் தாலும் கடைசி நம்பிக்கையாக அவனது வீட்டுக்காரி மட்டுமே அவனுக்கென்றிருந்தாள்... அவள் கடைசி நட்சத்திரம்.

"இந்தா அனீபா ஓம் பொஞ்சாதி ஒன்னப் பார்க்க வந்திருக்கா"

குப்"ரெனத் தொற்றிக் கொண்ட உற்சாகத்தோடு விசிட்டர்களை பார்த்து கதைத்துக் கொண்டிருக்க கட்டப்பட்டிருந்த அந்த ரூமுக்கு அனீபா கொண்டு வரப்பட்டான். ஏற்கனவே அந்த ரூமில் அவனைப் போல ஆறேழு கைதிகள்.. அவ்வப்போது விசும்பல் சத்தம் கேட்டது... கைதி அழுகிறானா... அல்லது கைதியோடு பேசிக் கொண்டிருக்கும் அவனது மனைவியோ அல்லது யாராவது உறவினரோ... அங்கே எப்போது பஞ்சமிருந்தது அழுகைக்கு. அது தினசரிக் காட்சி.

"நல்லாருக்கியா..."

"................"

இந்த இருபது நாளில் அனீபாவைப் போலவே அவனது மனைவியும் எலும்பும் தோலுமாகி கருப் பாயிருந்தாலும் செதுக்கி வைத்த சிற்பம் போல கண்ணுக்குள் கைகொட்டிச் சிரித்தவள்... அவளது அலங்கோலம் அனீபாவை அச்சுறுத்திற்று.

"புள்ளைங்க எப்படியிருக்காங்க... சஹானாவுக்கு இப்ப எப்படி.."

"சஹானாவுக்கு இப்ப பரவால்லங்க... இன்னமும் ஆஸ்பத்திரிலதான் இருக்கா... இன்னும் ஒரு கெழமைல டிக்கட் வெட்டலாம்னு பேசிக்கிட்டாங்க.."

அவள் வார்த்தையில் ஒட்டுமொத்த சந்தோஷத்தையும் தொலைத்த கணக்கில்

"ஏன்தான் அல்லா இல்லாதவங்கள மட்டும் இப்படி சோதிக்கிறானோ தெரியல்ல..."

"என்னங்க... இன்னிக்கு உங்கள வெளீல எடுத்திரலாம்னு கோர்ட்ல சொன்னாங்க...."

"என்ன சொல்லுறநீ..."

"தண்டப்பணம் கட்டுறதுக்கு முப்பதுனாயிரம் காசு கெடச்சிட்டுங்க... இன்னிக்கே அத கோர்ட்டுல கட்டினா நீங்கள் இன்னிக்கு பின்னேரமே வெளியே வந்துரலாம்னு கோர்ட்ல சொன்னாங்கள்.. கோட்டுக்கு போயிட்டுத்தான் ஒங்கள பார்க்க வந்தேன்...."

வரண்டு போய் பாளம் பாளமாய் வெடித்துக் கிடந்த பாலைநிலத்தில் இருண்ட மேகமொன்று கீழே இறங்கி வந்திருக்கின்றது அனீபாவுக்கு.

என்றாலும்

"அது சரி... இந்தப் பெரிய தொக

"........"

"ஏன் மௌனமாயிருக்க சொல்லு எப்படி கெடச்சுது இந்தக் காசு..."

"அது அது வந்து..."

"ஏன் தடுமார்ர சொல்லு..."

"இல்லங்க வேற வழி எதுவுமில்லை... எவ்வளவோ முயற்சி செஞ்சு பாத்தேன்... ஒன்னுமெ நடக்கல... அதனாலதான் வேறு வழியில்லாம நாம குடி யிருந்த காணிய ஒரு லெட்சத்துக்கு நேத்தே வித்திட்டேங்க...."

"என்ன ஒரு லெட்சம் ரூபாக்கு குடியிருக்குற காணி வித்திட்டியா...."

இல்லாதவன் இன்னும் இல்லாதவனாகிக் கொண்டிருந்தான் சொந்தமென்றிருந்த ஐந்தாறு இலட்சம் பெறுமதியான காணியும் பறி போன பிறகு.

"எப்படி கெடச்சுது.."

க.சட்டநாதன்

# ஏதோ பார்த்து நட

உனது பெயர்
என்ன....?

கம்பனா
கவி காளமேகமா
ஒட்டக்கூத்தன்
அருணாசலக்கவிராயர்....?

அதுவும் இல்லையா?

இன்னும் சொல்வேன்
கேட்டுப்பதில் சொல்.

வள்ளுவனா
இளங்கோ
ஔவையின் அழகு
உன்னிடம் இல்லை
இருப்பினும்
ஔவையா...?
மாணிக்கவாசகனா
சுந்தரன், நாவுக்கரசன்
ஞானசம்பந்தன்....?

உனது
இதழ்கள் உடைய
இள நகை மலர்வது
எனக்குத்தெரிகிறது.
இருந்தாலும்
கேள்.
பதில் தா...?

பிசிராந்தையர் போல்
தெரிகிறாய்
புகழேந்தி
இன்னும்
ஜெயங் கொண்டான்
இவர்கள் இல்லையா.....?
பின்
யார் நீ!

மு.த.
தி.ஜா.
சு.ரா.
பு.பி.
பாரதி
எஸ்.பொ.
ஏ.ஜே.
மௌனி
ஜெயகாந்தன்
ஜெயமோகன்
பிரமிள்...?



இவர்களில் நீ
எவருமே இல்லையா?

மாப்பசான்
செக்காவ்
சிங்கிஸ்
கோர்க்கி
க.ஃ.ப்கா
தல்ஸ்தோய்
தாய்தயேவ்ஸ்கி
துர்கனேவ்....?

இவர்களில்
ஒருவனாய்த்தான்
நீ
இருக்க வேண்டும்!

'இல்லை....
இல்லை
இவர்களில் ஒருவனாய்
நான்
எப்படி இருக்க முடியும்!'
உனக்கென்ன
பித்தா பிடித்திருக்கின்றது
நிச்சயம்
நீ
இவர்களில் ஒருவன் தான்.

இன்னும்
மலையாளம் வங்கம் என்று
எழுத்தாளர் பலரைத் தேடிப்
போகலாம் –
பெயர்கள்
நிரம்ப இருக்கிறது.
இப்போதைக்கு இதுபோதும்!

சிரிக்காதே
உனது சிரிப்பு
அசடாய் உதிர்கிறது.
இவர்களில் உனது
பேனாவின் கூர்தீட்டு,
அப்பொழுதாவது உன்னால்
எழுத்தை ஆளமுடிகிறதா
என்று பார்க்கலாம்....?

'அட
இவர்கள் எல்லாரும்
எழுதிய, எழுதும்
பிரம்மாக்களா.....?
சத்தியமாய்
இது எனக்கு
இப்பொழுதுதான் தெரிகிறது.'

ம்......
ஏதொ பார்த்து நட......!

அ. யேசுராசா



# நினைவுக் குறிப்புகள் – 4

ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும், 'தமிழ்ச் சுடர் நிலையம்', 'ஏ. கே. கோபாலன் பப்ளிஷர்' என்ற பதிப்பகங்கள் மூலமாக ஏராளமான மொழிபெயர்ப்பு நூல்கள் வெளிவந்தன. ஏ.கே.ஜெயராமன், ஏ.கே. கோபாலன் ஆகிய சகோதரர்கள் இவற்றின் உரிமையாளர். நோபல் பரிசு பெற்ற நூல்களுட்பட பல்வேறு நாடுகளின் பிரபலமான நாவல்கள், சிறுகதைகள் என்பவற்றை இவ்வாறு வெளியிட்டனர். நிலவளம், மதகுரு, அன்னா கரீனா, புத்துயிர், அன்புவழி, துன்பக்கேணி, ரோம் நகரப் பெண், தபால்காரன், அவமானச் சின்னம், நீதியின் வஞ்சம், குடியானவர்கள், போரும் அமைதியும், மலைவீடு, கடலும் கிழவனும், திமிங்கில வேட்டை, சித்தார்த்தன், தாசியும் தபசியும், அன்னை, மூடுபனி முதலியன அவற்றுள் சில. இவற்றில் சில நூல்கள் என்னிடமுள்ளன; வேறு சிலவற்றை நூலகத்திலும் பிறரிடமும் பெற்றுப் படித்துமிருக்கிறேன்; சிலவற்றைக் கண்டதுமில்லை. பழைய நூல்கள் என்பதால் இவை கிடைப்பது அரிதாகவே இருந்தது.




1984 இன் முற்பகுதியில் தமிழகம் சென்றபோது, 'வைகை' சிற்றிதழை நடத்திய குமாரசாமியைச் சென்னையில் சந்தித்தேன். ஏ. கே. கோபாலனை அல்லது ஏ.கே. ஜெயராமனைச் சந்திக்க முடியுமா என விசாரித்தபோது, ஒருவரிடம் அழைத்துப் போவதாகக் கூறி, அடுத்த நாள் அங்கே கூட்டிச் சென்றார்; சகோதரர் இருவரில் நாங்கள் சந்தித்தது யாரென்பது இப்போது நினைவில்லை. நான் அவர்கள் வெளியிட்ட நூல்களின் பிரதிகள் கிடைக்குமாவென விசாரித்தேன். அவர் சில நூல்களின் பிரதிகள் மட்டுமே தற்போது உள்ளதாகவும், அவற்றை யாருக்கும் கொடுப்பதற்கில்லை என்றும் சொன்னார். நான் இலங்கையிலிருந்து வந்துள்ளதையும், அங்கே இவை கிடைப்பது அரிது என்பதையும், மொழிபெயர்ப்பு நூல்களில் எனக்குள்ள ஆர்வத்தையும் விளக்கி, கொஞ்ச நூல்களையாவது விலைக்குத் தந்துதவும்படி வேண்டினேன்; அவரோ பிடிவாதமாக மறுத்துவிட்டார். ஏமாற்றத்துடன் நாங்கள் வெளிக்கிளம்பிய போது, தமிழ்நாட்டில் பல இடங்களில் இவை இருக்கும் - ஆனால் இலங்கையில் அரிதென்பதால் கட்டாயம் தந்து உதவ வேண்டுமெனவும், அங்கு பலருக்கு இவை உதவியாகும் எனவும், நீங்கள் இன்னொருமுறை யோசிக்க வேண்டுமெனவும் கூறினேன். அவரில் சிறிது மனமாற்றம்; "யோசிக்கிறேன் - எதற்கும் நாளை வந்து பாருங்கள்" என்றார். மறுநாள் இருவரும் சென்றபோது, ஒரு பெட்டியில் உள்ளவற்றை சுமார் நாற்பது நூல்கள் இருக்கும் - தந்தார். அவர் பணம் பெற்றுக்கொள்ளவில்லை என்றே நினைவு. மிகுந்த சந்தோஷத்துடன் நன்றி கூறி விடைபெற்றோம்!

நான் அன்றே கோவை சென்று, அங்கிருந்து பெங்களூர் செல்லவேண்டியிருந்தது. அதனால், நூல்கள் உள்ள பெட்டியை மதுரையில் பெற்றுக்கொள்வதாகக் குமாரசாமியிடம் (அவர் மதுரையைச் சேர்ந்தவர்) கூறிவிட்டுப் பயணமானேன். பெங்களூரிலிருந்து மதுரை வந்தபோது புத்தகப் பெட்டி வந்திருக்கவில்லை; குமாரசாமியையும் சந்திக்க முடியவில்லை. எனவே, அதை இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு குமாரசாமியிடம் தெரிவிக்கும்படி வேறொரு நண்பரிடம் சொல்லிவிட்டு, இலங்கை வந்துவிட்டேன். அந்த நாள்களில் இலங்கைக்குப் படகுப் போக்குவரத்துகள் தாராளமாக இருந்தன; குமாரசாமி தனக்குத் தெரிந்தவர்கள் மூலமாக புத்தகங்களை அனுப்பி வைப்பார் எனக் கருதினேன். ஆனால் ஆறு மாதங்களாகியும் அவை எனது கைக்கு வந்துசேரவில்லை. கடித மூலம் குமாரசாமியைத் தொடர்பு கொண்டபோது, யாரோ ஒருவர் மூலம் படகில் அனுப்பிவைத்ததாகப் பதில் போட்டார். என்ன நடந்த



தெனத் தெரியவில்லை. "கைக் கெட்டியது வாய்க்கு எட்டவில்லை" என்பதாகிவிட்டது! அதிலும் துயரம் என்னவென்றால், பெறுமதி மிக்க அரிய நூல்களைத் தர மனமின்றி இருந்தவர் இலங்கையர் என்ற அனுதாபத்தில் மனம் மாறித் தந்தவை, இறுதியில் அவருக்கும் எனக்கும் இல்லையென்றாகி விட்டமை!

**

சென்னையில் கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்(C.L.S.) இருக்கிறது. எழுபதுகளில் கலை இலக்கியக் கருத்தரங்குகளை அது நடத்தியது; பல நூல்களையும் வெளியிட்டிருக்கிறது. இந்த விபரங்களைத் தமிழகச் சிற்றேடுகள் மூலம்தான் முதலில் அறிந்தோம்; பின்னர் சில புத்தகங்களும் எமக்குக் கிடைத்தன. இதேபோல் கொழும்பிலும் ஒரு கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் இருக்கிறது; அதன் புத்தக நிலையம் அப்போது, பிரதான வீதியும் பூந்தோட்ட வீதியும் இணையும் மூலையிலுள்ள கட்டடத்தில் இருந்தது. கூடுதலாக ஆங்கிலப் புத்தகங்களும் சிறிய அளவில் தமிழ், சிங்கள நூல்களும் அங்கு விற்பனைக்கிருந்தன. பூபாலசிங்கம் புத்தக நிலையம் போன்ற பெரிய தமிழ்ப் புத்தக நிலையம், அப்போது கொழும்பில் இருக்கவில்லை. ஏனைய சிறிய தமிழ்ப் புத்தக நிலையங்களில் தமிழ்நாட்டுப் புத்தகங்கள் கிடைத்தாலும், தமிழ்நாட்டில் ஆழமான படைப்புகளை வெளியிடும் 'க்ரியா', 'அன்னம்' முதலிய சிறு பதிப்பகங்கள் மற்றும் தனிநபர் - சிற்றேடுகள் சார்ந்தோர், வெளியிடும் நூல்கள் கிடைப்பதில்லை. இந்த எழுபதுகளின் பிந்திய ஆண்டுகளில், கொழும்பில் கடமையாற்றிக்கொண்டிருந்த பத்மநாப ஐயர், சி.எல்.எஸ். நிறுவன முகாமையாளருடன் கதைத்து - சென்னை நிலையத்தின் செயற்பாடுகளையும் விளக்கி, நல்ல தமிழ் நூல்களை இறக்குமதி செய்ய ஊக்கப்படுத்தினார். யாழ்ப்பாணப் பகுதியிலும் நல்ல நூல்களுக்குத் தேவை உள்ளதையும் சுட்டிக்காட்டினார். அவரது முயற்சி வெற்றி அளித்தது. நல்ல நூல்களின் விபரங்களைத் திரட்டி பத்மநாப ஐயர் தயாரித்த பட்டியலிலுள்ள ஏராளம் நூல்களை, சி.எல்.எஸ். இறக்குமதி செய்தது. நூற்பெயர், நூலாசிரியர், விலை ஆகிய விபரங்கள் கொண்ட சிறு விலைப்பட்டியலும் பத்மநாப ஐயரால் தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டுப் பரவற்படுத்தப்பட்டது. ஒருதொகை நூல்கள், யாழ்ப்பாணத்தில் மருத்துவமனை வீதியில் இயங்கிய சி.எல்.எஸ். புத்தகக் கிளைக்கும் வந்தன. யாழ்ப்பாணத்திலிருந்த நான், நண்பர்களிடையே தகவல் களைப் பரப்பினேன். நல்ல நூல்கள் பரந்த அளவில் விற்பனையாகின.

இதுபோலவே 1989 ஆம் ஆண்டளவில், யாழ்ப்பாணத்தில் மின்சார நிலைய வீதியில் இயங்கிய சோதிட விலாச புத்தக நிலையத்தின் மூலமும், ஏராளம் நல்ல நூல்களைத் தமிழகத்திலிருந்து பத்மநாப ஐயர் தருவித்தார். அப்போதும் அவர் கொழும்பில் இருந்தாலும், அதன் உரிமையாளர் வெங்கடேச ஐயர் மூலம் இதனை அவர் ஒழுங்கு செய்தார். எமது அலை 35 ஆவது இதழில் (வைகாசி 1990), சோதிட விலாச புத்தக நிலையத்தின் விளம்பரமும் வெளியானது. அந்த விளம்பரம், "தரமான புதிய நூல்கள் நாநூறுக்கு மேற்பட்ட தலைப்புகளில்!" என்னும் குறிப்புடன் வெளியாகியுள்ளது. தமிழகச் சிற்றேடுகளான நுண்கலை, யாத்ரா, கொல்லிப் பாவை, கூரியர், காலச்சுவடு, இனி, கணையாழி, மனஓசை, முன்றில், படிகள், பாலம், பார்வை, மீட்சி, புதுயுகம், நிகழ், கிரணம், விருட்சம் ஆகியனவும் விற்பனைக்கு இருந்தன.

தொடர்ந்தும் இவ்வாறு சோதிட விலாச புத்தக நிலையத்தின் மூலம் நூல்களை இறக்குமதி செய்வதற்கு, விற்பனையில் நாமும் உதவவேண்டுமென்பது பத்மநாப ஐயரின் கருத்து. அதனால், ஏராளமான புத்தகங்களை அந்த நிலையத்திலிருந்து பெற்று, எனது வீட்டில் (இப்போதைய வீடல்ல; இல. 48, சுய உதவி வீடமைப்புத் திட்ட வீடு) வைத்து, நண்பர்களுக்கு விபரம் அறிவித்து விற்பனை செய்தேன்; வெங்கடேச ஐயரின் சம்மதத்துடன், விலையில் சிறிய கழிவும் கொடுத்தேன். அரிய புத்தகங்கள் - சிற்றிதழ்கள், விலையும் மலிவு என்பதால் ஏராளமானோர் வந்து வாங்கினர்; விரைவில் பெரும்பாலான நூல்களும் சிற்றிதழ்களும் விற்பனையாகின. நாற்பதினாயிரம் ரூபாவுக்குப் புத்தகங்களை விற்றுப் பணத்தை உரிமையாளரிடம் கொடுத்தேன்; அவருக்கு ஆச்சரியம்!

ஒருநாள், பல்கலைக்கழக மாணவியாகவிருந்த கவிஞர் செல்வியும் தோழியும் வந்து புத்தகங்கள் சிலவற்றை வாங்கினர்; தெருக்கூத்துப் பற்றிய புத்தகமும் அவ்வாறு வாங்கப்பட்டதொன்றாகும். திரும்பிச் செல்லும்போது, "அதில் இன்னொரு பிரதியும் தேவை; ஆனால் காசு போதாது" என்று சொன்னார். அதன் விலை எண்பதோ தொண்ணூறோ ரூபாவாகும். நான், "பிறகு தாருங்க..." என்று சொல்லி அதைக் கொடுத்தேன். ஆனால், அடுத்த கிழமையளவில், புலிகள் இயக்கத்தால் செல்வி கடத்தப்பட்டுக் காணாமற்போன துயரச் சம்பவம் நேர்ந்தது!

**

தீவுப்பகுதியிலிருந்த நிலாந்தன் 1986 அளவில் திரும்பிவந்து, தனது ஊரான ஈச்சமோட்டையில் வீட்டாருடன் வசிக்கத் தொடங்கினார். எனது ஊருக்குப் பக்கத்து ஊர்தான் ஈச்சமோட்டை. தீவுப் பகுதியில் இருந்தபோது சு.வில்வரத்தினத்துடனும் மு.பொன்னம்பலத்துடனும் நெருக்கமான உறவு அவருக்கு இருந்தது. ஒருநாள் நிலாந்தனை எனக்கு அறிமுகப்படுத்திய வில்வரத்தினம், அவர் பல துறைகளில் ஆர்வமானவர்; வாசிப்பு ஈடுபாடும் உள்ளவர்; அதனால் அவருக்குப் புத்தகங்கள் கொடுத்து உதவ வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். நானும் சம்மதித்தேன். அதன்பிறகு எனது வீட்டுக்கு வரும் நிலாந்தனுக்கு, பொதுவாக அவரது விருப்பம் என்னவெனக் கேட்டு (குறிப்பாக எவற்றையும் தேர்வு செய்யும் நிலையில் அவர் இருக்கவில்லை), புத்தகங்களை எடுத்துக் கொடுப்பது வழக்கமாகியது; ஏராள

மான முக்கிய நூல்களை அவர் இவ்வாறு பெற்றுப் படித்துள்ளார். எனது வீட்டின் முன்புறத்திலிருந்து, இலக்கியம் பற்றியும் வேறு விடயங்கள் பலவற்றைப் பற்றியும் கதைப்பதும் தொடர்ந்தது. சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற, ஓவியர் மாற்கு மாஸ்ரரின் மாணவியர் மூவரின் (அருந்ததி, சுகுணா, நிர்மலா) ஓவிய அரங்கேற்ற நிகழ்வின் பின் ஒருநாள், தனது தம்பி ஓவியம் பயில விரும்புவதால் மாற்கு மாஸ்ரரிடம் சொல்லிச் சேர்த்து விடும்படி நிலாந்தன் கேட்டார். இருவரையும் ஒருநாள் வரச்சொல்லி, எனது வீட்டுக்கு அண்மையிலுள்ள மாற்கு மாஸ்ரரின் வீட்டுக்குக் கூட்டிச் சென்று அறிமுகப்படுத்தி வைத்தேன்!

1989 ஆம் ஆண்டு; அப்போது நான் 'திசை' வாரப்பத்திரிகையில் துணை ஆசிரியராக இருந்தேன். யாழ்ப்பாணத்தில் மார்ட்டின் வீதியும் பிரதான வீதியும் இணையும் மூலையில் உள்ள ஒரு வீட்டில், அச்சகமும் திசை அலுவலகமும் இருந்தன. விற்பனைக்குரிய ஒருதொகைப் புத்தகங்களை (சோதிட விலாச புத்தக நிலையத்தில் பெற்றவை) அலுவலக அலுமாரியில் வைத்திருந்தேன்; அங்கு வருபவரில் தேவைப்படுவோருக்குக் கொடுக்கலாம் என்ற எண்ணத்தில். ஒருநாள் அலுவலகம் வந்த நிலாந்தன், சண்முகம் சிவலிங்கத்தின் 'நீர் வளையங்கள்' கவிதைத் தொகுப்பு நூலை ஏதோ தேவைக்காகத் தரும்படி கேட்டார். அதற்குச் சில கிழமைகளின் முன்பு கதைக்கையில் அவர், "புத்தகம் சேர்ப்பது விசர் வேலை" என்று சொன்னது நினைவுக்கு வந்தது. அவர் காசு கொடுத்துப் புத்தகம் வாங்குவதில்லை; இரவல் வாங்கிப் படிப்பதே வழமை! "நீங்கள் புத்தகம் சேர்க்காமல் இருக்கலாம்; அதற்காக இப்படியெல்லாம் சொல்லக் கூடாது" என்று அப்போது அவருக்குச் சொன்னேன். மறுபடியும் அவர், "அது விசர் வேலைதான்" என்றே வற்புறுத்திச் சொல்லியிருந்தார். எனவே, "நீங்கள் கேட்கும்போது தருவதற்காக, புத்தகம் சேர்க்கும் விசராக




நாங்கள் இருக்க வேண்டுமா?" என, இப்போது கேலியாகக் கேட்டேன்.

"பகிடியை விட்டு புத்தகத்தத் தாங்க..." என்றார்.

என்ன நினைத்தேனோ தெரியவில்லை,

"இரவல் தர ஏலாது.... தேவையென்றால் புதுப் புத்தகம் இருக்கு வாங்குங்க."


என்று சொன்னேன்.

"எவ்வளவு....?" என்று கேட்க, "ஐம்பது ரூபா" என்றேன்.

ஐம்பது ரூபாவை சேர்ட் பையிலிருந்து எடுத்தவர் அதை நீட்டியபடியே, "இந்தாங்க காசு... அந்தப் புத்தகத்த இதிலேயே கிழிச்சுப் போட்டுட்டுப் போறன்" என்றார்.

"நீர் கிழிச்சுப் போடுறதுக் கெல்லாம் புத்தகம் விக்க ஏலாது...!" என்று மறுத்துவிட்டேன்." அவரும் போய்விட்டார்.

முன்னர் ஒருமுறை, யாழ்ப்பாணம் மணிக்கூண்டு வீதியிலிருந்த வசந்தம் புத்தக நிலையத்தில் (இதனைச் சீன சார்பு இடது கொம்யூனிஸ்ற் கட்சியினர் நடத்தி வந்தனர்), அலை வெளியீடான, ஏ.ஜே. கனகரத்தினாவின் 'மார்க்சியமும் இலக்கியமும் சில




நோக்குகள்' நூற்றுப்பிரதிகளை விற்பனைக்காகப் பத்மநாப ஐயர் கொடுத்திருக்கிறார். கடையில் இருந்தவர் ஒரு பிரதியை எடுத்துப் பார்த்தபின், "ட்ரொட்ஸ்கியக் குப்பை..." என்று சொல்லியபடி நிலத்தில் வீசியிருக்கிறார். வீசப்பட்ட புத்தகத்தை எடுத்த பத்மநாப ஐயர், "விற்க ஏலாதென்று சொல்லியிருக்கலாம்.... புத்தகத்த இப்பிடி எறியிறது சரியில்ல..." என்றபடி திரும்பி விட்டார்! சண்முகம் சிவலிங்கத்தினதும் ஏ.ஜே. கனகரத்தினாவினதும் நிலை, இப்படிப் பரிதாபத்துக் குரியதாக வேண்டுமா?!

**


கலை இலக்கியச் செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. அவற்றில் ஈடுபடுவோர் மிகுந்த சிரமங்களுடன்தான் செயற்படுகிறார்கள். இலக்கியவாதிகள் எல்லோரும் இவற்றுக்கு உதவுகிறார்கள் என்றில்லை; சிலர்தான் சிற்றிதழ்களையும் நூல்களையும் விற்றோ, விளம்பரங்கள் சேர்த்தோ உதவி வருகிறார்கள் என்பது பலரதும் நடைமுறை அனுபவம்; ஏனெனில் எழுத்தாளரில் பலர், மற்றையவரின் முயற்சிகளில் பங்கெடுத்துச் சிறிதளவேனும் சிரமப்படத் தயாராயில்லை. ஆனால், இத்துறைகளில் சம்பந்தப்பட்டிராத வேறு சிலர், பொது நோக்கங்கொண்ட நல் முயற்சிகளுக்குத் தாமாகவே முன்வந்து உதவிசெய்த அனுபவங்கள் எனக்குண்டு! சிலர் எனது நினைவுக்கு வருகின்றனர்.

அ

'பூரணி' சிற்றிதழ் எட்டாவது இதழுடன் (சித்திரை - ஆனி 1974) நின்றுவிட்டது. சொந்த அச்செழுத்துக்கள் வாங்கி, அவற்றைப் பயன்படுத்தி ஒரிதழே அச்சிடப்பட்டது. 1975 இன் நடுப்பகுதியில் பூரணி ஆசிரியர் என்.கே. மகாலிங்கத்தைச் சந்தித்தபோது, பூரணியின் அச்சுச் சாதனங்கள் அப்படியே உள்ளதாகவும், டொமினிக் ஜீவா அவற்றைத் தனக்குத் தரும்படி கேட்டபோதும் அவருக்குக் கொடுக்கத் தனக்கு விருப்பமில்லை என்றும், நீங்கள் ஓர் இதழைத் தொடங்கினால் அவற்றைத் தந்து

உதவுவதாகவும் சொன்னார்; ஒரு சிற்றிதழை வெளிக்கொண்டுவரும் எண்ணம் எனக்குள்ளும் உரு வானது. அப்போது நான் கண்டியில் கடமையாற்றிக் கொண்டிருந்த தால், அடுத்த வருடம் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் கிடைத்தால் அச்சுச் சாதனங்களைப் பெறுவதாகத் தெரிவித்தேன். அதேபோல் 1976 தை மாதம் யாழ்ப்பாணம் சென்றபின், மகாலிங்கத்துக்கு அறிவித்தேன். கொழும்பிலிருந்த இ.ஜீவகாருண்ணியன் அச்சுச் சாதனங்களை அவரிடமிருந்து பெற்று, லொறி மூலம் அனுப்பிவைத்தார். 1975 கார்த்திகையில் இ.ஜீவகாருண்ணியன், மு. புஷ்பராஜன், குப்பிழான் ஐ. சண்முகன் ஆகிய நண்பர்களுடன் நானும் சேர்ந்து 'அலை' இதழைத் தொடங்கினோம். முதலிரண்டு இதழ்களும் முழுவதுமாக அச்சகங்களில் அச்சிடப்பட்டன. மூன்றாவது இதழிலிருந்தே எனது சகோதரியின் வீட்டில் வைத்து அச்சுக்கோத்து, பஸ்ரியன் அச்சகத்தில் அச்சிட்டோம்; இவ்வாறு பன்னிரண்டாவது இதழ்வரை நடைபெற்றது.

குருநகர் சென். ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையில், ஏழாம் வகுப்பு வரை உடன் மாணவனாக இருந்த கி.எமிலியூஸ், பின்னாளில் நல்லதோர் அச்சுக்கோப்பாளர். சில அச்சகங்களில் வேலை பார்த்த அவர், ஏனோ அவற்றிலிருந்து விலகிக் கடற்றொழிலுக்குப் போய்க் கொண்டிருந்தார். ஏன் இவ்வாறு செய்தீர் என ஒரு தடவை கேட்ட போது, "கடற்றொழில் சுதந்திர மானது....!" என்று கூறினார். அவர் கடலிலிருந்து திரும்பிய பிறகு இரவு வந்து, அச்சு வேலைகளைச் செய்யச் சம்மதித்தார். முதலில் அச்செழுத்துக்களையும் ஏனைய வற்றையும் ஒழுங்குபடுத்தினார்; பிறகு அச்சுக் கோக்கத் தொடங்கினார். நான்கு பக்கங்களை அச்சுக் கோத்தபின் இரண்டு பக்கங்களைச் சைக்கிள் 'ஹான்டிலி'ல் வைத்து ஓடி, சுமார் ஒரு மைல் தொலைவிலுள்ள பஸ்ரியன் அச்சகத்துக்குக் கொண்டுசென்று கொடுத்துவிட்டு வந்து, மற்றைய



விமல்

இரண்டு பக்கங்களையும் கொண்டு போவார். இவ்வாறாக ஏனைய பக்கங்களின் அச்சுக்கோப்பு முடிந்ததும் செய்தார். ஈயத்திலான அச்செழுத்துக்கள் மிகவும் பார மானவை; அவற்றைச் சைக்கிள் 'ஹான்டிலி'ல் வைத்துக் கொண்டு செல்வது சுலபமான தொன்றல்ல; திடமான தொழிலாளி என்பதால் அவருக்கு இயலுமாயிருந்தது. அத்துடன், அச்சிட்ட படிவங்களை அவ்வப்போது எடுத்து வருவதுடன், எம்முடன் (என்னுடனும் சிறுவர்களான எனது மருமக்களுடனும்) சேர்ந்து உட்கார்ந்து, அவற்றை மடிப்பதோடு, இறுதியில் எல்லாப் படிவங்களையும் ஒழுங்காக இணைத்துப் பிணைப்பூசி அடித்து, பிறகு அச்சகத்துக்கு எடுத்துச் சென்று அவற்றை ஒழுங்காக வெட்டி, முழுமையான இதழ்களாகக் கொண்டு வருவார். அந்த நாள்களில் ஒரு பக்கத்துக்கான அச்சுக்கோப்புக் கூலியாகப் பத்து ரூபாவை அச்சகங்கள் அறவிட்டன. ஆனால், "முதல்முறையா எங்கட ஊரில இருந்து வாற சஞ்சிகை - என்னட பங்களிப்பாயும் இருக்கட்டும்... ஒரு பக்கத்துக்கு அஞ்சு ரூபா தந்தாப் போதும்" என்று கூறி, அவ்வாறே பெற்றார். அச்சுக் கோப்புத் தவிர்ந்த



கி.எமிலியூஸ்

ஏனைய வேலைகளுக்காக அவர் எதனையும் கேட்கவேயில்லை; ஆயினும், சில தருணங்களில் அவரது சந்தோஷத்துக்காக, கள் அருந்துவதற்குச் சிறுதொகை கொடுத்துள்ளேன். உண்மையில், ஒரு சாதாரண தொழிலாளியான அவரது மனமுவந்த பங்களிப்பு, மிகவும் மதிக்கத்தக்கது! ; அது, இலக்கியவாதிகள் பலரிடம் காண இயலாதது!

2007 இல், எனது 'குறிப்பேட்டிலிருந்து...' நூலின் வெளியீட்டு நிகழ்வு, யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தில் நடைபெற்றபோது, அதன் முதற் பிரதியை அவருக்கே வழங்கிக் கௌரவித்தேன்; அதற்கு முன் அவரைப் பற்றிய பாராட்டுக் குறிப்புகளைச் சபையோருக்குத் தெரிவித்தேன்.

ஆ

1979 இல், ஏ. ஜே. கனகரத்தினா தலைமையிலான எமது 'யாழ். திரைப்பட வட்டம்' செயற்படத் தொடங்கியது. சுமார் தொண்ணூறு பேரளவில் அதில் உறுப்பினராக இருந்தனர். யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் நடைபெறும் மாதாந்தக் காட்சி பற்றிய விபரத்தை உறுப்பினருக்கும் வேறு ஆர்வலருக்கும் அறிவிப்பதற்காக, அஞ்சலட்டைகளை அச்சிட வேண்டும். காங்கேசன்துறை வீதியில், தற்போது மின்சாரசபைக் கட்டடம் உள்ள இடத்துக்கு அருகில், சண்முகநாத அச்சகம் இருந்தது. சுமார் 120 அஞ்சலட்டைகளை வாங்கிகொண்டு அங்கு சென்றேன். வேட்டியும் சேர்ட்டும் அணிந்த, சுமார் நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க, கறுப்பான ஒருவர் நிர்வாகியாக இருந்தார்; அவர் உரிமையாளரின் மகன் என நினைவு. என்ன அச்சிடப் போகிறீர்கள் எனக் கேட்க, திரைப்பட வட்டத்துக்காக 120 அஞ்சலட்டைகள் அச்சிட வேண்டும் என்பதைக் கூறினேன். அவர் திரைப்பட வட்டம் பற்றிச் சாதாரணமாக விபரம் விசாரித்தார். நான், வெளிநாடுகளின் கலைப்படங்களைப் பார்க்கும் வாய்ப்பு இங்கில்லாத நிலையில், தூதரகங்

களுடன் தொடர்புகொண்டு அந்தந்த நாடுகளின் திரைப் படங்களைப் பெற்றுக் காட்டுவதே நோக்கம்; கலந்துரையாடல்கள் போன்றவற்றின் மூலம் நல்ல இரசனையைப் பரப்பும் திட்டமும் உண்டு எனவும் தெரிவித்தேன். அத்துடன், சிங்களப் பகுதிகளில் இவ்வாறான கழகங்கள் இயங்கு வதையும், கொழும்பில் தூதரகங் கள் திரைப்படக் காட்சிகளை ஒழுங்குசெய்து வருகின்றன என்பதையும், தமிழ்ப் பகுதிகளில் தான் இவ்வாறான முயற்சிகள் எதுவும் இல்லை என்பதையும் விபரமாகத் தெரிவித்தேன். ஆர்வ மாகக் கேட்ட அவர், "நல்ல நோக்கம்... நீங்கள் அரைவாசிப் பணம் செலுத்தினால் போதும்" என்று சொன்னார். அப்போது பத்து ரூபாவை அச்சுக் கூலியாகக் கொடுத்து நன்றி கூறிய நினைவு; தொடர்ந்து அந்த அச்சகத்தில்தான் அச்சிட்டோம். அவரது முகம் இன்றும் எனது நினைவில் உள்ளது; ஒளிப்படம் இருந்தால் அடையாளம் காட்ட இயலும். ஆனால், அவரது பெயர்மட்டும் ஞாபகம் இல்லை!




இ

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் புறநிலைப் படிப்புகள் அலகிற்குப் பொறுப்பாக இருந்த பேராசிரியர் இரா. சிவச்சந்திரன், திரைப் பட வட்டம் ஒன்றின்மூலம் கிழமை தோறும் நல்ல திரைப்படங்களைக் காட்டிவந்தார். கணித பீடத்தில் சிறப்புக் கற்கைநெறி மாணவனாக இருந்த இராமரூபன் அவருக்கு உதவி வந்தார்; 1998 இல் யாழ்ப்பாணம் வந்த நான், அவர்களுடன் இணைந்து கொண்டேன். 2006 இல் யாழ்ப் பாணத்தில் அமைதி குலையும்வரை, சில நாள்கள் தவிர்த்துப் பெரும் பாலும் ஒவ்வொரு சனி அல்லது ஞாயிற்றுக்கிழமையில், சிறந்த உலகத் திரைப்படங்கள், இந்திய பிராந்திய மொழிப் படங்கள், குறிப்பிடத்தக்க தமிழ் - சிங்கள மொழிப் படங்கள் என்பவற்றைக் காட்டினோம். பிரதான படத்துடன் பொருத்தமான கலை, சமூகம் பற்றிய நல்ல விவரணப் படங்களை யும் காட்டினோம். இந்திய பிராந்திய மொழிப் படங்களையும், விவரணப் படங்களையும் தூர்தர்ஷனின் 'நஷனல்' அலைவரிசையில் - ஞாயிறு நள்ளிரவில் விழித்திருந்து விடியோப் பிரதியில் பதிவுசெய்தேன்; 'லோங் பிளே' முறையில் பதிந்த தால் 180 நிமிட விடியோ பிரதியில், 360 நிமிடங்களுக்குப் பதிந்து சிக்கனத்தைக் கடைப்பிடித்தேன். திரைப்பட வட்டத்தில் காட்சி முடிவில் கலந்துரையாடலும் நடை பெற்றது. வெளிச்சூழலில் கிடைக் காத அரிய திரைப்படங்கள் அனைத்தும் இலவசமாகவே காட்டப்பட்டன; ஆயினும், முப்பது பேர்களுக்கு உட்பட்ட எண்ணிக்கை யானோர்தான் வழமையாக இவற்றைப்பயன்படுத்தினர்.

விடியோப் பிரதிகளையே காட்டினோம்; பல்கலைக்கழகத்தில் 'விடியோ பிளேயர்' மட்டும்தான் இருந்தது; அவ்வேளை 'டிவிடி பிளேயரி'ன் பாவனை பரவலடைய வில்லை. நல்ல படங்களின் டிவிடி பிரதிகள் எமக்குக் கிடைத்த வேளைகளில், அவற்றை விடியோப் பிரதியாக மாற்றவேண்டி ஏற்பட்டது. நகரில் சில இடங்களில் மட்டும் இவ்வாறு மாற்றித் தருவார்கள்; மூன்று நான்கு நாள்கள் எடுப்ப தோடு, பதிவதற்கான புதிய விடியோப் பிரதியையும் அதற்கான கூலியாக நூற்றைம்பது அல்லது இருநூறு ரூபாவையும் கேட்பார்கள். இவ்வாறு ஏற்படும் செலவுகளிற் கெல்லாம் பேராசிரியர் சிவச் சந்திரன் தனது சொந்தப் பணத்தையே தந்தார் என்பதும் முக்கியமானது. இவ்வாறு விடியோப் பிரதியாக மாற்றுவதற்கு, மலி வானதும் விரைவில் பதிவுசெய்து தரக்கூடியதுமான இடம் உண்டா வென நான் தேடும்போது, வண்ணார் பண்ணையிலுள்ள 'விடியோ விமல்' கடைக்கு ஒருநாள் சென்றேன்; விடியோப் பிரதிகளை இரவல் வழங்கும் பெரிய கடை அது. அங்கு கடையில் நின்றவரை விசாரித்த போது, நூற்றைம்பது ரூபாவுக்குச் செய்து தருவதாகச் சொன்னார். நான் சில டிவிடிகளைக் கொடுத்த போது அவற்றைப் பார்த்தவர், இவற்றை எங்கு எடுத்தீர்கள்? எனக் கேட்டார். நான் "நண்பர் சிலரிட மும்... வெளிநாட்டில இருந்தும் சில படங்கள் கிடைக்கும்" என்று சொன்னேன். என்னை ஓர் இருக்கை யில் அமரும்படி சொன்னவர், என்னோடு அக்கறையுடன் கதைத்தார். அவர்தான் கடையின் சொந்தக்காரரான விமல் என்பதும் தெரியவந்தது. நான், பேராசிரியர் இரா. சிவச்சந்திரனின் திரைப்பட வட்டச் செயற்பாட்டின் முக்கியத்தைப் பற்றி விளக்கினேன். "நீங்களும் பல்கலைக்கழகமா?" என்று கேட்டபோது, "இல்லை.... நான் றிற்றயட் போஸ்ற் மாஸ்ரர்" என்றேன். பிறகு, "நான் தமிழ்ப் படங் களவச்சு தொழிலாச் செய்யிறன். நீங்கள் செய்யிறது நல்ல விஷயம்; சமூகத்துக்கும் தேவைதான். நான் சும்மா எல்லாத்தையும் பதிஞ்சு தாறன்" என்று சொன்னார். நான், "தொடர்ந்து இந்த மாதிரிப் பதிய வேண்டியிருக்கும்" என்றபோது, "பிரச்சினையில்ல.... கொண்டு வாங்க தொடர்ந்து செய்து தரலாம்" என்றார். நான் ஆச்சரியமடைந்தேன். ஆயினும், "இல்ல... இது உங்கட தொழில். சும்மா செய்து தர வேண்டாம். நூறு ரூபாவுக்கு செய்து தாங்க. அதேபெரிய உதவிதான்" என்று சொல்லி, தேவைப்பட்டபோது பல டிவிடிகளைக் கொடுத்து விடியோ நாடாவில் பதிந்துபெற்றேன்.

"அறியப்படாத நல்ல மனிதர்கள்; இவ்வாறெல்லாம் நம்மைச் சூழவும் இருக்கிறார்கள் என் பதை, நீங்கள் நிச்சயம் நம்பலாம்!

– 19.10.2014.

***

# ஏகாந்த வெளியில் இறுதிக் கணங்களுக்காய்...

மாலினி

என் பாதம் பதிந்த
ஆரம்பப் பொழுதுகளில்
இந்தப் பூமி
நம்பிக்கையோடு
அழகாகத்தான்
இருந்தது.
அதிலான பயணமும்
ஆர்வமாகவே தான்
தொடர்ந்தது.

எதிர்பார்த்தே இராத
எதேச்சைப் பொழுதொன்றில்
காலம் அறைந்த
கடும் வலியில்
புண்பட்டுக் கிடக்கும்
என் மனம் போலவே
நடக்கத் தயங்கி
சுருண்டு கிடக்கின்றன
என் பாதங்களும் .

போலிப் புன்னகைகளில்
பொசுங்கிப் போன மனதுக்கு
பூமியின் புன்னகை கூட
பயத்தையே தருகிறது
இப்போது.
பயங்களோடும்
காயங்களோடும்
பயணிக்க முடியவில்லை
என்னால்.

ஆனாலும்...

நடக்க வேண்டிய தூரங்கள்
நீண்டே கிடக்கின்றன
புண் பட்ட மனதோடும்
துவண்டு விட்ட பாதங்களோடும்
இருண்டு கிடக்கும் கண்களோடும்
நீண்டு கிடக்கும் தூரங்களை
கடக்க முடியவில்லை
என்னால்...

என் ஆத்மாவின்
ஆழத்தில்
உறைந்து கிடக்கும்



உன் நேசத்தின் பலத்தில்
தணல் பதித்த பாதையில்
தனியாக நடக்கிறேன்

எனக்குள்ளே
உறைந்து கிடக்கும்
உன்னைத்தவிர எதுகுமே
என்னது இல்லைப்போல்,
பாசம் கூட
பயமாகவே இருக்கிறது.
உரிமைகள் இல்லாத
உறவுகளோடு
உரையாடவும் விரும்பாமல்
பேச்சு மறந்து விட்டன
என் உதடுகள்
நேசம் தொலைத்த மனதுக்கு
நேசிக்கக் தெரியவில்லை
இப்போது.

தனித்த என் இதயத்தை
தாங்கிக் கிடக்கும்
ஆத்மாவே
என் தூரங்கள்
முடியும்
நேரம் வரை
எனக்குப்
பலமாக இரு.

இருண்டு கிடக்கும்
என் கண்களுக்கு
பூமி கூட
வெளிச்சமில்லாத
பயத்தையே தருகிறது.
பயந்த மனத்தோடும்
பதைபதைக்கும்
இதயத்தோடும்
இறப்புக் கூட
இயல்பாக முடியவில்லை
என்னால்.

பூமிப்பந்தின்
போலிகள் தொடாத
ஏகாந்த மூலையின்
அரவமற்ற அமைதியில்
போலிகளற்ற உன்
புன்னகை மடியில்
வீணை விரல்களின்
விழி வருடும் இதத்தில்
உன் விழிவழி ஒழுகும்
பாசத்தின் பரவசத்தில்
உணர்வடங்கி
உடல் துவளும்
நேரம் வரை...

என் ஆன்மாவுக்குள்
இருக்கும் ஆத்மாவே
என்னோடு கூட இரு

# காவலூர் ராசதுரை நினைவுகள்

முருகபூபதி

இலங்கையில் காவலூர், சில்லையூர், நல்லை, நீலாவணை, கல்லாறு, யாழூர், வத்து முல்லை, உடப்பூர், முல்லைத்தீவு, திக்குவல்லை, மட்டுநகர், ஆரையம்பதி, பாண்டிருப்பு, கல்முனை, பாலமுனை, வவனியூர், நாச்சிமார்கோயிலடி, அளவெட்டி, நீர்கொழும்பூர், மாவை, தில்லையடி, முதலான ஊர்கள் கலை, இலக்கியவாதிகளினாலும் ஊடகவியலாளர்களினாலும் புகழ்பெற்றிருப்பதை அறிவோம்.

இந்த ஊர்களுடன் இணைத்து தமது பெயர்களைச்சூட்டிக்கொண்ட பலர் எம்மத்தியில் வாழ்ந்தார்கள். வாழ்கிறார்கள். அப்படிப்பட்டவர்களின் இயற்பெயரைச்சொல்லாமலேயே ஊரின் பெயரைச் சொல்லி அவர்களை விளிக்கும் பொழுது யார் அவர்...? என்பதை இலகுவாகப்புரிந்துகொள்வோம்.

அந்தவகையில் காவலூர் என்ற ஊரின் பெயரை தன்னுடன் இணைத்துக்கொண்டு கலை, இலக்கிய, ஊடகத்துறைக்குள் பிரவேசித்த ஒருவர் கடந்த 14-10-2014 ஆம் திகதி மீண்டும் தமது ஊரின் பெயரை அழுத்தமாகவே பதிவுசெய்துவிட்டு விடைபெற்றுவிட்டார்.

சிட்னியிலிருந்து அவரது புதல்வர் வசீகரனின் தொலைபேசி அழைப்பு - அவரது அருமைத்தந்தை - எமது நீண்ட கால இனிய நண்பர் காவலூரின் மறைவைச்சொன்னதும் திடுக்கிடச்செய்தது.

துரிதமாக இயங்கினேன். இலங்கை - அவுஸ்திரேலியா உட்பட பல வெளிநாட்டு இதழ்கள் இணைய இதழ்களுக்கெல்லாம் துயரச்செய்தியை மின்னல் வேகத்தில் அனுப்பிவிட்டு இலங்கை தினக்குரல் பத்திரிகையின் பிரதம ஆசிரியருடனும் செய்திப்பிரிவிலும் தொடர்புகொண்டேன்.

அன்று இரவு நித்திரைக்குச்செல்ல தாமத மானது. படுக்கையிலும் உறக்கம் வரவில்லை. நண்பர் காவலூர் என்னை ஆக்கிரமித்துக் கொண்டேயிருந்தார்.

இறுதியாக கடந்த (2014) மார்ச் மாதம் குவின்ஸ்லாந்து மாநிலத்தில் எமது அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் கலை- இலக்கிய சந்திப்பினை முடித்துக்கொண்டு சிட்னியில் சகோதரி ஜெயசக்தி பத்மநாதன் மாதாந்தம் பரமட்டா பூங்காவில் நடத்தும் உயர்திணைச்சந்திப்பில் கலந்துகொள்ள வருகை தந்திருந்தவேளையில் குறிப்பிட்ட சந்திப்பு முடிந்ததும் நண்பர் சுந்தரதாஸை அழைத்துக்கொண்டு காவலூர் அனுமதிக்கப்பட்டிருந்த பராமரிப்பு இல்லத்திற்கு விரைந்தேன்.

அந்தச்சந்திப்புச் சம்பவம் பற்றிய எனது கட்டுரையை அவுஸ்திரேலியா முரசு, கனடா பதிவு கள், ஜெர்மனி தேனீ முதலான இணைய இதழ்களும் நடேசனின் வலைப்பூவும் எனது நண்பர்கள் பலரதும் முகநூல்களும் பதிவு செய்து காவலூர் பற்றிய நினைவுகளை உலகெங்கும் அவரது நண்பர்களிடம் பரவச்செய்தன.

ஆனால், வெளியுலகில் தன்னைப்பற்றிய விரிவான பதிவொன்று உலாவருவது பற்றிய எந்த வொரு பிரக்ஞையும் இன்றி அவர் அந்த பராமரிப்பு இல்லத்தில் மௌனமே தவமாக கட்டிடத்தின் கூரை விட்டத்தைப்பார்த்துக் கொண்டிருந்தார்.

மனிதர்களுக்கு தனிமை, இயலாமை, முதுமை, ஏழ்மை வரும் பொழுது அதனைவிட கொடுமையான வாழ்க்கை வேறு எதுவும் இல்லை என்ற முடிவுக்கே நாம் வந்துவிடலாம்.

ஆனால் - நண்பர் காவலூரை தனிமையோ, ஏழ்மையோ வாட்டவில்லை. அவரது அன்பு மனைவி மற்றும் மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் நன்கு பார்த்துக்கொண்டார்கள். அவரது வசதியையும் மருத்துவ சிகிச்சையையும் கவனத்தில் கொண்டே அவர் தமது வீட்டிலிருந்து பராமரிப்பு இல்லத்திற்கு இடம்பெயர்ந்திருந்தார்.

ஆனால் - வாய்திறந்து பேச முடியாத இயலாமையும் வயதின் மூப்பினால் வரும் முதுமை யும் தவிர்க்க முடியாதிருந்த நிலைமை.

அந்தக்கட்டத்தினை நாமும் இனிவரும் காலத்தில் கடப்பதற்கு நேரிடலாம்.

எனினும் - காவலூர் நிறைவான முழுமை யான வாழ்வை வாழ்ந்துவிட்டு எம்மிடமிருந்து விடை பெற்றுள்ளார் என்பதும் அவர் வாழ்ந்த காலப்பகுதி யிலேயே அவரை நேசித்த அன்பர்களினால் பாராட்டி கௌரவிக்கப்பட்டிருக்கிறார் என்பதும் மனதுக்கு ஆறுதலைத்தருகின்றன.

அவரது மறைவுச்செய்தியை எனது மின்னஞ்சல்களின் மூலம் தெரிந்துகொண்ட

அ.முத்துலிங்கம், ஆ.சிவநேசச்செல்வன், மூர்த்தி, (கனடா) கே.எஸ். சிவகுமாரன், பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் , கோகிலா மகேந்திரன், ( இலங்கை) ஏலையா முருகதாசன் (ஜெர்மனி) பூபாலரத்தினம் சீவகன் ( லண்டன் பி.பி.சி) முதலான சிலர் காவலூர் வீட்டு தொலைபேசி மின்னஞ்சல் தெரியாமலேயே தமது ஆழ்ந்த அனுதாபங்களை உடனுக்குடன் தெரிவித்தவண்ணமிருந்தனர்.




மேலும் - அவுஸ்திரேலியா இலங்கை உட்பட பல நாடுகளில் வதியும் கலை, இலக்கிய வாதிகள், ஊடகவியலாளர்கள் தமது வலைப் பூக்களிலும் முகநூல்களிலும் காவலூர் மறைவு பற்றிய செய்திகளை பதிவு செய்து தமது துயர் பகிர்ந்துகொண்டனர்.

காவலூரின் பொன்மணியை இயக்கிய பிரபல திரைப்பட இயக்குநர் தர்மசேன பத்தி ராஜவை தொடர்புகொண்டு தகவல் சொன்னதும் அவர் கலங்கிவிட்டார். பின்னர் அவர் காவலூரின் புதல்வர்களுடன் உரையாடி கண்ணீர்மல்க தமது அஞ்சலியை தெரிவித்ததாக அறிந்தேன்.

காவலூர் அவுஸ்திரேலியாவுக்கு புலம் பெயர்ந்த பின்னர் அவர் மேற்கொண்ட கலை, இலக்கியப்பணிகள் இங்கு வாழும் அவரைத்தெரிந்த அன்பர்கள் பலருக்கும் நன்கு தெரியும்.

ஆனால், அவர் 1970 காலப்பகுதியில் தொலைக்காட்சி சேவையோ, கைத்தொலைபேசி, ஸ்கைப், ட்விட்டர் பாவனைகளோ இல்லாத ஏன்... அவசர போக்குவரத்துக்கு தேவைப்பட்ட ஓட்டோ வாகனங்களோ இல்லாத வெறுமனே வாடகை கார்களையும் ரயிலையும் பஸ்களையும் மாத்திரம் போக்குவரத்துக்கு பயன்படுத்திய கால கட்டத்தில் எவ்வாறு துரிதமாக இயங்கினார் என்பதற்கு நானும் ஒரு நேரடி சாட்சி.

அவரது கொள்ளுப்பிட்டி ஹட்சன் வீதி இல்லம் தான் எமது இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் அலுவலகமாகவும் தபால் முகவரியாகவும் விளங்கியது. அவரது இல்லத்தில் நாம் அடிக்கடி சந்திப்போம்.



யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு ஏதேனும் அலுவல்கள் நிமித்தம் வரும் அவரது இலக்கிய நண்பர் களின் தங்குமிடமாகவும் அந்த இல்லம் விளங்கியது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வந்து அங்கிருந்து விமானம் மூலமாக தமிழ் நாட்டிற்கு மருத்துவ சிகிச்சைக்குப்புறப்பட்ட மூத்த படைப்பாளி கே. டானியலையும் அவருடன் பயணிக்கத்தயாராக விருந்த இலக்கிய நண்பர் இளங்கோவனையும் இலங்கையில் இறுதியாக அங்கேதான் சந்தித்தேன்.

கொழும்புவாசிகளான எழுத்தாளர்கள், கலைஞர்கள், பத்திரிகை வானொலி ஊடகவிய லாளர்கள் பலரை அடிக்கடி அந்த இல்லத்தில் காணமுடியும். அவர்கள் மூவினங்களையும் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். காவலூர் இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் அனைவருடனும் உடன்பிறந்த சகோதர வாஞ்சையுடன் பழகியவர்.

அவரது பொன்மணி திரைப்படத்தின் இயக்குநரே ஒரு சிங்களச்சகோதரர்தான்.

காவலூர் - கொழும்பில் வசீகரா அட்வடை சிங் என்ற நிறுவனத்தை உருவாக்கியபொழுது பல தமிழ், சிங்கள, பத்திரிகை ஊடகங்களுக்கும் அந்த நிறுவனத்திலிருந்து பெரும்பாலான விளம்பரங்கள் வடிவமைக்கப்பட்டு வழங்கப்பட்டன. வானொலியிலும் பத்திரிகையிலும் அவருக்கிருந்த அனுபவ முதிர்ச்சி யினால் குறிப்பிட்ட விளம்பரத்துறையிலும் அவர் பிரகாசித்தார்.

காலம் கடந்து - விளம்பரத்துறை தோற்றம் வளர்ச்சி வீச்சு ஆதிக்கம் என்ற அரிய நூலையும் வெளியிட்டார்.

கொழும்பில் வசீகரா நிறுவனமே அமைச்சர் தொண்டமான் பற்றிய வரலாற்று ஆவணத்தை அரிய பல ஒளிப்படங்களுடன் வெளியிட்டது. அமைச்சர் காவலூரின் ஒரு புதல்வரின் திருமணத் திற்கும் நேரில் வருகை தந்து மணமக்களை வாழ்த்தினார்.

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தில் சில நிகழ்ச்சிகளின் தயாரிப்பாளராகவும் அவர் இயங்கினார். அவற்றில் கலைக்கோலம், செய்தியின் பின்னணியில் முதலானவற்றை குறிப்பிடலாம்.

சிறுகதை, நாவல், நாடகம், விமர்சனம் முதலானவற்றை எழுதியிருக்கும் காவலூருக்கு பொன்மணி திரைப்படம் தயாரிக்கும் எண்ணம் தோன்றியதும் தற்செயலானது. அதில் பங்கேற்ற கலைஞர்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர்களாகவும் புத்திஜீவிகளாகவும் எழுத்தாளர்களாகவும் இருந்தனர். பொறியியலாளர் திருநாவுக்கரசு, டொக்டர் நந்தி, விரிவுரையாளர்கள் மௌனகுரு, சித்திரலேகா, மற்றும் திருமதி சர்வமங்கலம் கைலாசபதி, நாடகக் கலைஞர் சோக்கல்லோ சண்முகம், பத்திரிகையாளர்

கமலா தம்பிராஜா ஆகியோர் முக்கிய பாத்திரங்களை ஏற்றிருந்தனர்.

நடிப்புத்துறையில் ஈடுபட்ட நடிகை சுபாஷினி கதாநாயகியாக நடித்தார். சில்லையூர் செல்வராசன் பாடல்களை எழுதினார்.


இந்தப்படத்தை இயக்குவதற்கு அவர் தெரிவு செய்த தர்மசேன பத்திராஜாவும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்தான்.

வசூலைப்பொறுத்தவரையில் பொன்மணி திரைப்படம் தோல்வியடைந்திருந்தாலும் சில தொழில் நுட்பக்குறைபாடுகள் இருந்தபோதிலும் கலைப்படமாக ஈழத்து தமிழ் திரைப்பட வரலாற்றில் பொன்மணி இடம்பெற்றுள்ளது. சில சர்வதேச திரைப்பட விழாக்களிலும் காண்பிக்கப்பட்டது.

இந்தத் திரைப்படம் குறித்தும் நண்பர் தம்பியையா தேவதாஸ் தமது ஈழத்து தமிழ் திரைப்படங்கள் நூலில் விரிவாக பதிவு செய்துள்ளார்.

SCRIPT NET எனப்படும் பிரித்தானிய தொண்டு நிறுவனத்தால் வளர்முக நாடுகளில் குறுந்திரைப்படத் தயாரிப்புத்துறைக்கு ஊக்கமும் ஆதரவும் அளிக்கப்பட்ட வேளையில் - சிறந்த திரைக்கதைச் சுவடிகளை தேர்வு செய்யும் குழுவில் காவலூர் ராசதுரை அங்கம் வகித்தார். மேற்படி SCRIPT NET இன் உதவியுடன் தயாரிக்கப்பட்ட சில குறும்படங்கள் - 2006 ஆம் ஆண்டு மெல்பனில் நடந்த எழுத்தாளர் விழாவில் காண்பிக்கப்பட்டது.





சிட்னியிலும் குறிப்பிட்ட குறும்படங்கள் காண்பிக்கப்பட்டபொழுது அதனைப்பார்த்து வியந்தவர்களில் ஒருவர் சகோதரி பராசக்தி சுந்தரலிங்கம். அவர் அந்தக்குறும்படங்கள் பற்றிய விரிவான நயப்புரையை எழுதியிருக்கிறார்.

காவலூரின் மறைவு எம்மத்தியில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியிருப்பதற்கு காரணம் அவர் ஒரு தேர்ந்த கலை இலக்கிய ஊடகவியலாளர் என்பது மட்டுமல்ல. அனைவரையும் கருத்து முரண்பாடுகளுக்கு அப்பால் சகோதர வாஞ்சையுடன் அணைக்கும் அவரது நல்லியல்புகளும்தான்.

காவலூர் பற்றிய எனது பதிவுகளைப் பார்த்ததும் சிட்னியிலிருக்கும் இலக்கியவாதியும் சிட்னி தமிழ் ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் (ATBC) நிகழ்ச்சித் தயாரிப்பாளருமான எனது அருமைச் சகோதரன் கானா. பிரபா என்னைத்தொடர்புகொண்டு தமது வானொலியில் காவலூர் பற்றிய துயர்பகிர்வு இரங்கலுரையை நிகழ்த்துவதற்கு அழைத்தார்.

பொங்கிவந்த துயரத்தை சிரமப்பட்டு அடக்கியவாறே எனது அஞ்சலியுரையை நிகழ்த்தினேன். வானொலி ஊடகத்தில் எமது தனிப்பட்ட உணர்ச்சிகளை வெளிப்படுத்தலாகாது என்பதும் ஒருவகை மரபுதான்.

2007 காலப்பகுதில் சிட்னியில் நாம் நடத்திய காவலூர் பாராட்டு விருது வழங்கும் நிகழ்வுப்படங்களை இதுவரை காலமும் பாதுகாத்து வைத்திருந்து அனுப்பியிருந்தார் கானா .பிரபா . அந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்காக நானும் நண்பர் கலைவளன் சிசு நாகேந்திரனும் சிட்னிக்குச்சென்றோம்.

எனது தலைமையில் நடந்த அந்த நிகழ்ச்சியில் காவலூருக்கு கவிஞர் அம்பி பூமாலை அணிவித்தார். மூத்த ஓவியர் ஞானம் அவர்கள் காவலூருக்கு எமது சங்கத்தின் சார்பிலான விருதினை வழங்கினார். பேராசிரியர் ஆ.சி. கந்தராஜா பாராட்டுப்பத்திரத்தை வாசித்து கையளித்தார்.

நண்பர்கள் பாஸ்கரன், இலங்கை ஒலி பரப்புக்கூட்டுத்தாபனத்தில் அதிகாரியாக முன்னர் பணியாற்றிய திருமதி ஞானம் இரத்தினம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

ஜெயசக்தி பத்மநாதன், ஊஷா ஜவஹார், சந்திரலோக வாமதேவா, சௌந்தரி, பாமதி, சுந்தரதாஸ் மற்றும் காவலூரின் அன்பு மனைவி மற்றும் மக்கள் - மருமக்கள் பேரப்பிள்ளைகள் யாவரும் கலந்துகொண்டு சிறப்பித்த அந்த விழாவில் காவலூரின் 75 வயது பவளவிழாவை முன்னிட்டு கேக்வெட்டி அவரது பிறந்த நாளையும் கொண்டாடினோம்.

அன்று அவர் மிகவும் உற்சாகத்துடன் இருந்த காட்சிகளை இந்தப்பத்தியில் இணைக்கப்பட்ட படங்களிலிருந்து பார்க்கலாம்.

அவர் வாழும்பொழுதே எம் அனைவரினாலும் கொண்டாடப்பட்டவர். அவருடைய நினைவுகளுக்கு மரணம் இல்லை. அவர் பற்றிய நினைவுகள் எம்முடன் தொடர்ந்து வரும் என்பதனால் அவர் என்றும் எம்முடனேயே இருக்கிறார்.

(பிற்குறிப்புகள்: இந்தப்பதிவினை எழுதி ஜீவநதிக்கு அனுப்பிவிட்டு காவலூர் ராஜதுரையின் இறுதிப்பயணத்தில் அவரை வழியனுப்புவதற்கு சிட்னிக்கு புறப்படுகின்றேன். இதுவரையில் ஜீவநதியில் சொல்ல வேண்டிய கதைகள் தொடரில் 20 அங்கங்கள் பதிவு செய்துவிட்டேன். இந்தப்பத்தி எழுத்துக்கு களம் வழங்கிய ஜீவநதி இதழுக்கும் ஆசிரியர் பரணீதரனுக்கும் வாசகர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொண்டு இந்தத்தொடரை நிறைவுசெய்கின்றேன். இலக்கியத்தால் இணைந்திருப்போம்.)




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.